



# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com





CHENNAI | Volume- 3 | Issue:213 | 17-02-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி

# தமிழக சட்டசபையில் இன்று இடைக்கால பட்ஜெட் தாக்கல்

**சென்னை, பிப்.17:**

தமிழக சட்டசபையின் இந்த ஆண்டின் முதல் கூட்டம் கடந்த மாதம் (ஜனவரி) 20-ந் தேதி கவர்னர் உரையுடன் தொடங்கியது. ஆனால், தமிழ்த்தாய் வாழ்த்துக்கு பிறகு தேசிய கீதம் பாடப்படவில்லை என்று குற்றம்சாட்டி, கவர்னர் ஆர்.என்.ரவி தனது உரையை புறக்கணித்து வெளியேறினார்.

என்றாலும், சபாநாயகர் மு.அப்பாவு வாசித்த கவர்னரின் தமிழ் உரை அவைக்குறிப்பில் ஏற்றப்பட்டது. தொடர்ந்து, 22-ந் தேதி முதல் 24-ந் தேதி வரை கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதமும், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலினின் பதில் உரையும் இடம்பெற்றது.



### இடைக்கால பட்ஜெட் தாக்கல்

அத்துடன் அப்போதைய கூட்டத்தொடர் நிறைவடைந்தது. இந்த நிலையில், 2026-2027-ம் ஆண்டுக்கான இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்வதற்காக தமிழக சட்டசபை இன்று (செவ்வாய்கிழமை) மீண்டும் கூட இருக்கிறது. காலை 9.30 மணிக்கு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு இடைக்கால பட்ஜெட்டை தாக்கல் செய்கிறார். வழக்கம்போல இந்த முறையும் காகிதம் இல்லா பட்ஜெட்டாகவே தாக்கல் செய்யப்படுகிறது. பட்ஜெட் குறித்த தகவல்கள் ஒவ்வொரு உறுப்பினருக்கும் முன்னால் உள்ள சிறிய கணினியான டேப்-ல் பார்த்து தெரிந்துகொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### முக்கிய அறிவிப்புகள் இடம்பெறும்

வழக்கமாக தாக்கல் செய்யப்படும் பட்ஜெட், ஒரு நிதியாண்டு முழுமைக்கும் திட்டமிடப்பட்டு தாக்கல் செய்யப்படும். ஆனால், இந்த முறை சட்டசபை தேர்தல் வருவதால், குறுகிய கால செலவுக்கான இடைக்கால பட்ஜெட் மட்டுமே தாக்கல் செய்யப்பட இருக்கிறது.

பொதுவாக, இடைக்கால பட்ஜெட் என்றால், தேர்தலை மனதில் வைத்து அதில் முக்கிய அறிவிப்புகள் இடம்பெறுவது வாடிக்கையாக இருந்து வருகிறது. அந்த வகையில், இந்த முறையும் புதிய அறிவிப்புகள் இடம்பெற வாய்ப்பு இருப்பதாக கூறப்படுகிறது.

### தமிழக மக்கள் ஆர்வம்

அதாவது,சிறுபான்மையினர் மக்களையும், இளைஞர்களையும் கவரும் வகையில் முக்கிய அறிவிப்புகள் இடம்பெறும் என்றும் கூறப்படுகிறது. அதனால், இன்று தாக்கல் செய்யப்பட இருக்கும் இடைக்கால பட்ஜெட்டில் என்னென்ன புதிய அறிவிப்புகள் இடம்பெறப்போகிறது?என்பதை தெரிந்துகொள்ள தமிழக மக்கள் இப்போதே ஆர்வமாக இருந்து வருகின்றனர்.

## இன்று பால்குண அமாவாசை

**சென்னை, பிப்.17:**

மாசி மாதம் மகத்துவமான மாதம். மாசி மாதத்தில் கலைகளையும் கல்வியையும் கற்றறியலாம். உபநயனம் முதலான விசேஷங்கள் செய்யலாம். தீர்த்த நீராடுவது மிகுந்த புண்ணியத்தைத் தரும் என்றெல்லாம் ஞானிகள் கூறுகிறார்கள்.

மாசி மாத அமாவாசையை பால்குண அமாவாசை என்றும், பால்குண மாதத்தின் நிறைவு நாள் என்றும் சொல்லுவது உண்டு. மாசி அமாவாசைக்கு முன்பாக சிவன் மற்றும் அன்னை பார்வதியை போற்றும் மகா சிவராத்திரி நாளில் சிவ வழிபாடு செய்து, சிவனின் அருளை பெற்ற கையோடு அமாவாசையில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து அவர்களின் ஆசியை பெற்றால் பித்ருதோஷங்களில் இருந்து விடுபட முடியும். குலதெய்வத்துக்கு பொங்கலிட்டு வழிபடலாம். அன்று புடவை, ஜாக்கெட், பழங்கள், மங்கலப் பொருட்கள் வைத்து வேண்டி அந்தப் புடவை முதலான மங்கலப் பொருட்களை யாரேனும் சுமங்கலிக்கு வழங்கி ஆசிபெற்றால் இதுவரை தடைப்பட்டிருந்த மங்கல காரியங்கள் இனிதே நடந்தேறும். இல்லத்தில் ஒற்றுமையும் சந்தோஷமும் குடிகொள்ளும் என்பது ஐதீகம்.

## இன்றைய பஞ்சாங்கம்

17.02.2026 மாசி 5
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.33

**திதி:**
இன்று மாலை 6.30 வரை அமாவாசை பின்பு பிரதமை.

**நட்சத்திரம்:**
இன்று இரவு 10.17 வரை அவிட்டம் பின்பு சதயம்

**யோகம் :**
இன்று அதிகாலை 2.17 வரை வரீயான் பின்பு பரீகம்

**கரணம் :**
இன்று காலை 6.28 வரை சதுஷ்பாதம் பின்பு மாலை 6.30 வரை நாகவம் பின்பு கிமிஸ்துக்கினம்.

**அமிர்தாதி யோகம் :**
இன்று இரவு 10.17 வரை சித்த யோகம் பின்பு யோகம் சரியில்லை.

**சந்திராஷ்டமம்**
இன்று இரவு 10.17 வரை புனர்பூசம் பின்பு பூசம்.

**நல்ல நேரம்**
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30

**இராகு காலம்**
பிற்பகல் 3.00 – 4.30

**எமகண்டம்**
காலை 9.00 – 10.30

**குளிகை**
பிற்பகல் 12.00 – 1.30.

இன்று சர்வ அமாவாசை

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

## போதை பொருள் கடத்தலை எதிர்கொள்ள... அமித்ஷா புதிய திட்டம் அறிவிப்பு



**புதுடெல்லி, பிப்.17:**

டெல்லியில் 79-வது டெல்லி போலீஸ் நிறுவன நாள் நிகழ்ச்சியில் மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசும்போது, போதை பொருள் கடத்தலை எதிர்கொள்ள நாடு முழுவதும் சி.சி.டி.வி. கேமராக்களுக்கான நெட்வொர்க்கை நிறுவுவது மற்றும் கட்டுப்பாட்டு அறைகளை அமைப்பதில் உள்விவகார அமைச்சகம் கவனம் செலுத்தும். வருங்காலத்தில் அதற்கு முறையான சட்டபூர்வ ஆதரவு அளிக்கப்படும் என்றார். புதிய தேச பாதுகாப்பு கட்டமைப்பை வருகிற மாதங்களில் உருவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் கூறினார்.

இந்த கட்டமைப்பானது மாநிலங்கள் முழுவதும் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைந்த செயல்முறையை வலுப்படுத்துவதுடன், அவற்றை திறமையாக நடைமுறைப்படுத்துவது மற்றும் செயல்படுத்துவது உறுதி செய்யப்படுவதற்கு ஏற்ப, முறையான சட்ட பிரிவுகளின் ஆதரவும் அளிக்கப்படும்.

நாடு முழுவதும் போதை பொருள் தொடர்பான குற்றங்களுக்கு பதிலடி கொடுப்பது மேம்படவும் மற்றும் கண்காணிப்பு திறன்களை மேம்படுத்தவும் இந்த திட்டம் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சபரிமலையில் பெண்கள் வழிபாட்டு உரிமை**

## ஏப்ரல் 7ந் தேதி முதல் 9 நீதிபதிகள் அரசியல் சாசன அமர்வில் விசாரணை

**சபரிமலை, பிப்.17:**

சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து வயது பெண்களும் வழிபட அனுமதி வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிரான மறுஆய்வு மனுக்களை 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு விசாரிக்கும் என்று தலைமை நீதிபதி சூர்ய காந்த் உத்தரவிட்டுள்ளார்.




சபரிமலை ஐயப்பன் கோயிலில் 10 முதல் 50 வயது வரையிலான பெண்கள் வழிபடுவதற்கு இருந்துவந்த தடையை கடந்த 2018-இல் நீக்கிய உச்சநீதிமன்றம், இந்தப் பாலினப் பாகுபாடு அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்று தீர்ப்பளித்தது.

சபரிமலையில் அனைத்து வயது பெண்களும் வழிபடலாம் என்று இத்தீர்ப்பின் மூலம் உறுதி செய்யப்பட்டது..

கேரளம் முழுவதும் பெரும் போராட்டங்களுக்கு வித்திட்ட இத்தீர்ப்புக்கு எதிராக மறுஆய்வு மற்றும் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. சில ஆண்டுகளாக ஓய்ந்திருந்த இந்த விவகாரம் சுப்ரீம் கோர்ட்டின் தலைமை நீதிபதி அமர்வில் இன்று காலை விசாரணைக்கு வந்தது.அப்போது பேசிய தலைமை நீதிபதி, இந்த வழக்கை 9 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு வருகின்ற ஏப்ரல் 7 ஆம் தேதி முதல் விசாரணையைத் தொடங்கும் எனத் தெரிவித்தார்.

மேலும், தலைமை நீதிபதியின் உத்தரவில் தெரிவித்திருப்பதாவது, "தீர்ப்பை மறுஆய்வு செய்யக் கோருபவர்களின் மனுக்கள் ஏப்ரல் 7 முதல் 9 வரையிலும், எதிர்ப்பவர்களின் மனுக்கள் ஏப்ரல் 14 முதல் 16 வரையிலும் நடைபெறும்.இறுதி வாதங்கள் ஏப்ரல் 22 ஆம் தேதிக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்குறிய நேர அட்டவணையை அனைத்து தரப்பினரும் கடைபிடிக்க வேண்டும்" எனத் தெரிவித்தார்.

## பிரதமர் மோடி இரண்டு நாள் பயணமாக இஸ்ரேல் செல்கிறார்



**புதுடில்லி, பிப்.17:**

இந்திய பிரதமர் மோடி இரண்டு நாள் சுற்றுப் பயணமாக வருகிற 25-ந்தேதி மற்றும் 26-ந்தேதி இஸ்ரேல் செல்கிறார்.

அமெரிக்க யூத அமைப்புகளின் தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, "பாராளுமன்ற உரை விரைவில் நடக்க இருக்கிறது. யார் இங்கே வருகிறார்? இந்திய பிரதமர் மோடி" எனத் தெரிவித்தார்.

மேலும், "இஸ்ரேலுக்கும் இந்தியாவுக்கும் இடையே மிகப்பெரிய கூட்டணி உள்ளது. அனைத்து வகையான ஒத்துழைப்புகளையும் பற்றி நாம் விவாதிக்கப் போகிறோம். இப்போது, உங்களுக்குத் தெரியும், இந்தியா ஒரு சிறிய நாடு அல்ல. இது 1.4 பில்லியன் மக்களைக் கொண்டுள்ளது. இந்தியா மிகவும் சக்திவாய்ந்தது, மிகவும் பிரபலமானது" என்றார்.

## கோவையில் அடகு கடை பூட்டை உடைத்து 70 சவரன் நகைகள், 20 கிலோ வெள்ளி கொள்ளை

**கோவை, பிப்.17:**

கோவை சிங்காநல்லூர் வசந்தா மில் பகுதியைச் சேர்ந்த ரமேஷ்குமார் என்பவர் மகாதேவ் என்ற பெயரில் நகை அடகு கடை நடத்தி வருகிறார். கடையின் பின் புறத்தில் அவரது வீடு உள்ளது. நேற்று சிவராத்திரியை முன்னிட்டு கடைக்கு விடுமுறை அளித்த அவர் குடும்பத்துடன் கோவிலுக்கு சென்றுள்ளார். நேற்றிரவு சுமார் 11 மணியளவில் கடையின் பின்புறமுள்ள ஷட்டரை உடைத்து உள்ளே சென்ற மர்ம நபர்கள் அங்கிருந்த சுமார் 70 சவரன் தங்க நகை மற்றும் 20 கிலோ வெள்ளி நகைகளை கொள்ளையடித்து சென்றனர்.

கொள்ளை சம்பவம் குறித்து தகவலறிந்து அங்கு சென்ற ரமேஷ்குமார், ஷட்டர் உடைத்து நகை கொள்ளையடிக்கப்பட்டதை கண்டு அதிர்ச்சியடைந்து உடனடியாக சிங்காநல்லூர் காவல்நிலையத்துக்கு தகவல் தெரிவித்தார். போலீசார் மோப்பநாய் மற்றும் தடயவியல் சோதனை நிபுணர்களுடன் தடயங்களை சேகரித்தனர். மேலும் அப்பகுதியில் இருந்த சிசிடிவி கேமரா காட்சி பதிவுகளை சேகரித்து அதன் அடிப்படையில் தப்பியோடிய கொள்ளையர்களை தீவிரமாக தேடி வருகின்றனர்.






# தமிழக மீனவர்கள் 25 பேர் கைது: இலங்கை கடற்படை அட்டூழியம்

**கொழும்பு, பிப்.17:**

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் 25 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்த சம்பவம் மீண்டும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படும் சம்பவம் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. அதோடு மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது. இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவித்திட வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பிரதமர் மோடி மற்றும் மத்திய வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கருக்கு தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறார்.

இந்த நிலையில், எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் 25 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. 2 விசைப்படகுடன் கைதான 25 மீனவர்கள் காங்கேசன்துறை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். அங்கு அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. விசாரணைக்குப் பிறகு மீனவர்கள் யாழ்ப்பாணம் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளனர்.

தமிழக, புதுச்சேரி மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வருவது தமிழக மீனவர்களிடையே பெரும் அதிர்ச்சியையும், அச்சத்தையும் சோகத்தையும்ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்ட மீனவர்களை மீட்குமாறு அவர்களின் குடும்பத்தினரும் மீனவ அமைப்புகளும் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளன.




## திருக்குறள் குறள்-533

பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு



மறதியால் சோர்ந்து நடப்பவர்க்குப் புகழுடன் வாழும் தன்மையில்லை, அஃது உலகத்தில் எப்படிப்பட்டநூலோர்க்கும் ஒப்ப முடிந்த முடிப்பாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



வாழ்க்கையில் நாம் நினைத்தது நடந்தால் பெருமையாக இருங்கள்..... நடக்கவில்லை என்றால் அதைவிட அதிகமாக பொறுமையாக இருங்கள்...

**உஷா முத்து ராமன்**

## புகழ் பெற்ற மயான கொள்ளை திருவிழா



திருவண்ணாமலை மயான கொள்ளை விழாவில் வேண்டுதலை நிறைவேற்ற நூற்றுக்கணக்கான பக்தர்கள் அனைத்து தெய்வங்கள் போல வேடமணிந்து அம்மன் வீதி உலா லட்சக்கணக்கான பக்தர்களும், பொதுமக்களும் மயான கொள்ளை விழாவில் கலந்து கொண்டார்கள். மயான கொள்ளை திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## மாணவிகள் சண்முக வேணி,தர்ஷினி, இந்துமதிக்கு கவிஞர் பேரா பரிசளித்துப் பாராட்டினார்



பாளையங்கோட்டை குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 16 .02 .2026 அன்று நடைபெற்ற திருக்குறள் திருப்பணககள் திட்ட 29-ஆவது பயிற்சி வகுப்பில் மாணவிகள் சண்முக வேணி,தர்ஷினி, இந்து மதி, ஆகியோருக்கு கவிஞர் பேரா பரிசளித்துப் பாராட்டினார்.

## அவலூர்பேட்டை கலை மற்றும் அறிவியல் கல்லுரியில் மடிக்கணினி வழங்கல்



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் அவலூர்பேட்டை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணியை கல்வி வட்டாரக்குழுத் தலைவர் நெடுஞ்செழியன் வழங்கினார். **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## வந்தவாசியில் மயான சூறை வைபவம்..!



**வந்தவாசி, பிப் 17:**
திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஸ்ரீஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் கோவிலில் மஹா சிவராத்திரி மற்றும் மயானக் கொள்ளை வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த வைபவத்தில் சிவராத்திரி அன்று இரவு பூப்பல்லக்கில் அம்மன் வீதியுலா நடைபெற்றது. கெண்டை மேளம், ஆடல் பாடல் இசையுடன் நடைபெற்ற நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர். மேலும் மறுநாள் மயான சூறை வைபவத்தில் அம்மன் உத்திர காளியாக நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இதில் பக்தர்கள் காளி வேடம் அணிந்தும், எலுமிச்சை பழங்களை உடலில் குத்தியும், உரல் இழுத்தும் தங்களது வேண்டுதலை செலுத்தினர். மேலும் ஆங்காங்கே அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

**பா. சீனிவாசன், வந்தவாசி.**

## திட்டக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பூமி பூஜை அமைச்சர் பங்கேற்பு



**கடலூர், பிப்.17:**
திட்டக்குடி பகுதிகளில் நடைபெற உள்ள வளர்ச்சி பணிகளுக்கான பூமியின் பூஜையில் அமைச்சர் சி.வெ. கணேசன் பங்கேற்றார்.

கடலூர் மாவட்டம் திட்டக்குடி வெலிங்டன் ஏரி வாய்க்கால் பகுதியில் 9.50 கொடி மதிப்பீட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 23 வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணி மாண்புமிகு தமிழக முதல்வர் முக.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

இதற்கான பூஜைகளில் தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து பொதுமக்கள் மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கினார்.

தொடர்ந்து பண்ருட்டி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ரூ.18.08 கோடி மதிப்பீட்டில் 23 வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணியை அமைச்சர் கணேசன் அடிக்கல் நாட்டி தொடங்கிவைத்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம், நகர செயலாளர் பரமகுரு, அரசு அதிகாரிகள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## செய்யாறில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம்: சார் ஆட்சியர் எல். அம்பிகா ஜெயின் பங்கேற்பு



**செய்யாறு பிப்.17:**
திருவண்ணாமலை மாவட்டம் ,செய்யாறு கோட்டம், சார் ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு சார் ஆட்சியர் எல் .அம்பிகா ஜெயின் தலைமை வகித்து, பொதுமக்களிடமிருந்து 101 கோரிக்கை மனுக்களைப் பெற்றார்.

மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்.

வருவாய்த்துறை, இதர துறைகள் சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கோலியனூர் ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவிலில் திருவோண தீபம் ஏற்றி வழிபாடு!



**விழுப்புரம், பிப். 17:**
விழுப்புரம் மாவட்டம், கோலியனூர் ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோவிலில் திருவோண தீபம் ஏற்றி வழிபாடு நடந்தது. கோலியனூர் கிழக்கு பாண்டி ரோட்டில் ஸ்ரீவரதராஜ பெருமாள் கோவில் அமைந்துள்ளது.

இதில் மூலவர் ஸ்ரீவரதராஜ பெருமாள் மேற்கு நோக்கி நின்ற கோலத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகிறார். இந்த கோவில் பல்லவ மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்டது. இந்நிலையில் திருவோண நட்சத்திரத்தை முன்னிட்டு மாலையில் திருவோண தீபம் ஏற்றி வழிபாடு செய்யப்பட்டது.

பூமி நாயகி, நீளா நாயகி சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து ஸ்ரீ வரதராஜ பெருமாளை தரிசித்துச் சென்றனர்.

பூஜைக்கான ஏற்பாடுகளை மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால் பட்டாச்சாரியார் செய்திருந்தார். இந்த திருவோண தீபம் ஏற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அங்காள பரமேஸ்வரி 73- ஆம் ஆண்டு ரத பிரம்மோற்சவ விழா



**திருவண்ணாமலை,பிப்.17:**
திருவண்ணாமலை மாவட்டம் கீழ்பென்னாத்தூர் பேரூராட்சி அலுவலகம் அருகில் அமைந்துள்ள ஸ்ரீ அங்காளம்மன் 73-ஆம் ஆண்டு ரத பிரம்மோற்சவ விழா கொடியேற்றம் மற்றும் மாயகுறத்தி அலங்காரத்தில் அம்பாள் மாடவீதி உலா நடைபெற்றது.

ஏராளமான பக்தர்கள் அங்காள பரமேஸ்வரியை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## சிறப்பு அலங்காரத்தில் லிங்கோத்பவர்



திருவண்ணாமலைஅருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு லிங்கோத்பவருக்கு சிறப்பு அபிஷேகங்கள், வெள்ளி கவச்சத்துடன் லிங்கோத்பவர் அலங்காரத்தில் அருள் பாலிக்கும் காட்சி. ஏராளமான பக்தர்கள் வேண்டி அருள் பெற்றனர். **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பொன் முனியாண்டி கோவில் மாசி மாத அன்னதான விழா



**வாடிப்பட்டி, பிப்.17:**
மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே சித்தாலங்குடி பொன் முனியாண்டி கோயில் மகா சிவராத்திரி சிறப்பு பூஜை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. முதல் நாள் இரவு 10 மணிக்கு பொன் முனியாண்டிக்கு சிறப்பு பூஜை செய்யப்பட்டது இரண்டாம் நாள் மதியம் 12 மணிக்கு கிடா வெட்டி அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த அன்னதானத்தை அதிமுக வாடிப்பட்டி வடக்கு ஒன்றிய செயலாளர் மு காளிதாஸ் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார்.இதில் ஏராளமான பக்தர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதன் ஏற்பாடுகளை சித்தாலங்குடி ஜெயக்குமார் தலைமையில் விழா குழுவினர் செய்திருந்தனர்.

## சீர்காழி தென்பாதி அங்காள பரமேஸ்வரி கோயிலில் மகா சிவராத்திரி விழா திருத்தேர் பவனி



**சீர்காழி , பிப் . 17:**
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி நகரம் தென்பாதி தாலுக்கா அலுவலகம் எதிரில் நீதிமன்ற சாலையில் பரம்பரை தனியார் ஆலயமாகவும் புராதனமாயும் விளங்குகின்ற ராஜராஜேஸ்வரி என்கின்ற அருள்மிகு அங்காள பரமேஸ்வரி அம்மையின் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு 15-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை பகலில் திருத்தேர் பவனி , காவடி ஊர்வலம் , அபிஷேக ஆராதனை, மாலையில் மாவிளக்கு ஏற்றுதல் , இரவு அம்பாள் யாளி வாகனத்தில் அமர்ந்து பேச்சி ரூபம் எனும் ஆகம வேஷத்துடன் அக்னி கொப்பரை கரகம் முதலானதுடன் முக்கிய வீதி வழி சென்று சீர்காழி நகர மயானம் அடைந்து திருவிளையாடல் முடிந்து மறுநாள் அதிகாலை ஆலயம் திரும்புதல் நிகழ்ச்சி நடைபெற்றது . விழா ஏற்பாடுகளை ஆலய உரிமை மற்றும் பரம்பரை டிரஸ்டி ஸ்தானீகம் எம். ஆர் ஜீவானந்தம் செய்தார்.

## முன்னாள் அதிமுக அமைச்சர் நிலோபர் திமுகவில் இணைந்தார்



**திருப்பத்தூர், பிப்.17:**
திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகேகடந்த 14-ஆம் தேதி ஜோலார்பேட்டை அருகே நடைபெற்ற திமுக வடக்கு மண்டல மாநாட்டில் திமுக தலைவர் மு க ஸ்டாலின் முன்னிலையில் முன்னாள் அதிமுக தொழிலாளர் நலத்துறை அமைச்சர் நிலோபர் அக்கட்சியில் இருந்து விலகி திமுகவில் இணைந்தார்.

அதைத் தொடர்ந்து மாவட்ட செயலாளர் ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜ் மற்றும் வாணியம்பாடி நகர கழக செயலாளர் நகர மன்ற உறுப்பினர் வி.எஸ். சாரதிகுமார் அவர்களை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

## மேல்மலையனூர் அங்காளம்மன் கோவில் மாசிப் பெருவிழா



விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் அங்காளம்மன் திருக்கோவில் மாசிப் பெருவிழா மகாசிவராத்திரி மற்றும் ஞாயிற்றுக்கிழமை இரவு கொடியேற்றத்துடன் துவங்கியது பதிமூன்று நாட்கள் நடைபெறும் திருவிழாவானது திங்கட்கிழமை காலையில் மயானக்கொள்ளை விழாநடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஏழாம் நாள் நடைபெறும் திருத்தேர்விழா வரும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மேல்6.00 மணிக்குள் திருத்தேர் வடம்பிடித்தல் நடைபெறயுள்ளது வழக்கமான நாட்களை விட அன்றைய நாள்பல லட்சம் பேர் உள்ளூர் வெளிமாவட்டம் வெளி மாநிலங்களிலும் இருந்து வந்து தேர்த் திருவிழாவினை காண்பர் பிரதி மாதம் அமாவாசை நாளன்று ஊஞ்சல் உற்சவம் நடைபெறுவது வழக்கமாக இருந்து வந்தாலும் மாசி மாதம் மட்டும் ஊஞ்சல் உற்சவம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. **அகரம் ராமதாஸ் செய்தியாளர்**

## தந்தையின் ஈமச்சடங்கிற்கு வந்த ராணுவ வீரர் உயிரிழப்பு

**விழுப்புரம், பிப்.17:**

விழுப்புரம் மாவட்டம் கிளியனூர் அருகே, தந்தையின் ஈமச்சடங்கில் பங்கேற்க வந்த ராணுவ வீரர் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. வானூர் வட்டம் பேராவூர் கிராமத்தைச் சேர்ந்த அர்ஜுனன் (44), இந்திய ராணுவ வீரராகப் பணியாற்றி வந்தார். இவரது தந்தை கிருஷ்ணன் சில நாட்களுக்கு முன் காலமானார். அவரது ஈமச்சடங்கு காரியங்களுக்காக அர்ஜுனன் ஒரு மாத விடுப்பில் ஊருக்கு வந்திருந்தார். இந்நிலையில், நேற்று (சனிக்கிழமை, பிப். 14) அதிகாலை 2:45 மணியளவில் திடீரென அவர் மயங்கி விழுந்தார். உடனடியாக அவரைத் திண்டிவனம் அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவித்தனர். இது குறித்து அர்ஜுனனின் மனைவி தமிழ்ச்செல்வி அளித்த புகாரின் பேரில், கிளியனூர் காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வேலூரில் மயான கொள்ளை திருவிழா: 500 காவலர்கள் பாதுகாப்பு

**வேலூர், பிப். 17:**

வேலூர் மாநகரில் திங்களன்று (பிப்.16) நடைபெற்ற மயான கொள்ளை திரு விழாவை முன்னிட்டு, 500-க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடு படுட்டனர். சைதாப்பேட்டை, தோட்டப்பாளையம், சத்துவாச்சாரி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து அலங்கரிக்கப்பட்ட அங்காள பரமேஸ்வரி அம்மன் தேர்கள் ஊர்வலமாகச் சென்று பாலாற்றங்கரை மயானத்தை அடைந்தன. பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவராமன் நேரில் ஆய்வு செய்தார். விழா வையொட்டி புதிய பாலாற்று பாலம் போக்கு வரத்திற்குத் தடை செய்யப்பட்டு, பழைய பாலம் ஒருவழிப் பாதையாக மாற்றப் பட்டுள்ளது. ஆந்திரா மற்றும் காட்பாடி மார்க்கமாக வரும் வாகனங்கள் பழைய பைபாஸ் சாலை வழியாகத் திருப்பி விடப் பட்டுள்ளன. சட்டவிரோத செயல்களைத் தவிர்க்கவும், பொதுமக்களின் பாதுகாப்பு கருதியும் விழா ஏற்பாட்டாளர்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

## சமையல் மற்றும் சோப்பு தயாரிப்புப் பயிற்சி

**சென்னை, பிப். 17:**

தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக்கழக தகவல் மற்றும் பயிற்சி மையம் சார்பில், எளிதாகச் சமைக்கக்கூடிய உணவுப் பொருட்கள் மற்றும் சோப்பு தயாரித்தல் குறித்த சிறப்புப் பயிற்சிகள் நடைபெற வுள்ளன. இது தொடர்பாக வெளி யிடப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்ப ட்டுள்ளதாவது: வரும் வியா ழக்கிழமை (பிப். 19) அன்று சமையல் பயிற்சி நடைபெறுகிறது. இதில் ரவா இட்லி மிக்ஸ், அடை, வடை மற்றும் பாயசம் ஆகிய வற்றை உடனடியாகச் சமை ப்பதற்கான வழிமுறைகள் குறித்துப் பயிற்சி அளிக்க ப்படும். மேலும், இந்திய வகை அசைவக் குழம்பு களுக்கான மணமூட்டும் மசாலா பொடிகள் தயாரிப் பது குறித்தும் விளக்கப் ப்படும். இதனைத் தொடர்ந்து, வரும் வெள்ளிக்கிழமை (பிப். 20) அன்று சோப்பு தயாரிப்பதற்கான பயிற்சிவகுப்பு நடைபெறுகிறது. இதில் மூலிகைகள், மலர்கள் மற்றும் சந்தன எண்ணெய் ஆகியவற்றைக் கொண்டு சோப்புகளைத் தயாரிப்பது குறித்து நேரடிச் செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட உள்ளன. இந்த இரண்டு பயிற்சி களும் கிண்டி, திரு. வி. க. தொழிற்பேட்டையில் உள்ள அக்ரோ டெக் கிரீன் பார்க் வளாகத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள பயிற்சி மைய த்தில் நடைபெறும். கூடுதல் விவரங்களுக்கு 044-29530048 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தட்சசீலா பல்கலைக்கழகத்தில் திருக்குறள் மாநாடு

**விழுப்புரம், பிப். 17:**

விழுப்புரம் மாவட்டம், ஓங்கூர் தட்சசீலா பல்கலைக் கழகம் சார்பில் 'திருக்குறள்: உலக மாற்றத்திற்கான நிலை யான சான்றாண்மை' என்ற தலைப்பில் இரண்டு நாள் சர்வதேச மாநாடு நடைபெற்றது. தொடக்க நிகழ்ச்சிக்குத் தட்சசீலா பல்கலைக்கழக வேந்தர் தனசேகரன் தலைமை தாங்கினார். இணை வேந்தர்கள் ராஜராஜன், நிலா பிரியதர்ஷினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். துணைவேந்தர் விவேக் இந்தர் கோச்சா இந்தியப் பண்பாட்டின் பெருமைகளை எடுத்து ரைத்தார். தென் கொரியா தமிழ் ஆய்வாளர் சங்கத் தலைவர் ஆரோக்கியராஜ் செல்வராஜ், திருக்குறளின் முக்கியத் துவத்தைத் தனது உரையில் விளக்கினார். இரண்டாம் நாள் இணையவழி மாநாட்டில், மதுரை திருக்குறள் மன்றச் செயலாளர் அழகுராஜ் கல்வியின் சிறப்பு குறித்துப் பேசினார். சிங்கப்பூர் தமிழ் இலக்கிய மன்றத் தலைவர் ரத்தின வெங்கடேசன் சொற்பொழிவாற்றினார்.

## ரூ.57 கோடியில் வணிக வரி, சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள்: ஸ்டாலின் திறந்தார்




**சென்னை, பிப்.17:**

வணிகவரி துறை சார்பில் ரூ.34.98 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிக வரி அலுவலகக் கட்டடங்கள், பதிவுத்துறை சார்பில் ரூ.22.12 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்கள் மற்றும் திருப்பூர் பதிவு மாவட்டத்தில் பொங்கலூர், தாம்பரம் பதிவு மாவட்டத்தில் வண்டலூர் மற்றும் கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டத்தில் வாணாபுரம் ஆகிய மூன்று புதிய சார்பதிவாளர் அலுவலகங்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

வணிகவரித் துறை சார்பில் திருச்சி ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம், அருப்புக்கோட்டையில் உதவி ஆணையர் அலுவலகக் கட்டடம், மன்னார்குடி, நாகப்பட்டினம் மற்றும் கரூர்-4 ஆகிய இடங்களில் மாநிலவரி அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் என மொத்தம் 34 கோடியே 98 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 வணிகவரித்துறை கட்டிடங்களை முதலமைச்சர் திறந்து வைத்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் சுவாமிமலை மற்றும் பாபநாசம், திருவாரூர் மாவட்டம் நன்னிலம் மற்றும் நீடாமங்கலம், நாமக்கல் மாவட்டம் நாமக்கல் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகம், ராசிபுரம் மற்றும் நாமகிரிப்பேட்டை, திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை, கள்ளக்குறிச்சி மாவட்டம் எலவனாசூர்கோட்டை, தூத்துக்குடி மாவட்டம் - முறப்பநாடு தென்காசி மாவட்டம் பண்மொழி, மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ஆகிய இடங்களில் 22 கோடியே 12 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களையும் முதலமைச்சர் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் மொத்தம் 57 கோடியே 10 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிகவரி மற்றும் பதிவுத் துறைக்கான புதிய கட்டடங்களை திறந்து வைத்தார்.

கூடுவாஞ்சேரி சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 40 கிராமங்களில் 18 கிராமங்களை பிரித்து அந்த 18 கிராமங்களை உள்ளடக்கி தாம்பரம் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட வண்டலூர் சார்பதிவாளர் அலுவலகம்;

2025-2026ம் ஆண்டிற்கான வணிகவரி மற்றும் பதிவுத்துறை மாணியக் கோரிக்கையின் அறிவிப்பை தொடர்ந்து, கள்ளக்குறிச்சி வருவாய் மாவட்டம், வாணாபுரம் வருவாய் வட்டத்தில் உள்ள 85 கிராமங்களில் 32 கிராமங்களை பிரித்து அந்த 32 கிராமங்களை உள்ளடக்கி கள்ளக்குறிச்சி பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட வாணாபுரம் சார்பதிவாளர் அலுவலகம்; திருப்பூர் பதிவு மாவட்டம், பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள 39 கிராமங்களில் 11 கிராமங்களை பிரித்து அந்த 11 கிராமங்களை உள்ளடக்கி திருப்பூர் பதிவு மாவட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட்ட பொங்கலூர் சார்பதிவாளர் அலுவலகம்;

ஆகிய புதிதாக உருவாக்கப்பட்ட 3 சார்பதிவாளர் அலுவலகங்களை முதலமைச்சர் திறந்து வைத்தார். இப்புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் திறக்கப்படுவதன் மூலம் பொதுமக்களுக்கு விரைவான மற்றும் சிறப்பான சேவைகளை அளிக்க இயலும்.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.மூர்த்தி, டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பதிவுத்துறை செயலாளர் ஷில்பா பிரபாகர் சதீஷ், பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## முல்லைக்காடு கப்பல் கட்டும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும்: பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்

**சென்னை, பிப்.17:**



முல்லைக்காடு கப்பல் கட்டும் திட்டத்தை ரத்து செய்ய வேண்டும் என தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

கோவளம், பசுவந்தரை, தன்பாடு மற்றும் அதன் சுற்றியுள்ள பகுதிகளில் செயல்பட்டு வரும் சிறு உப்பு உற்பத்தியாளர்கள் சங்கங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கடுமையாக பாதிக்கும் வகையில் முல்லைக்காடு பகுதியில் கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

முல்லைக்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல தலைமுறைகளாக பாரம்பரியமாக நடைபெற்று வரும் உப்பு உற்பத்தித் தொழில், அப்பகுதி மக்களின் முக்கியமான மற்றும் ஒரே வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. இத்திட்டம் நடைமுறைக்கு வந்தால், அங்குள்ள உப்பளங்கள் அழிக்கப்படும் அபாயம் உருவாகி, ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் சூழ்நிலை ஏற்படும்.

பாரம்பரிய தொழில்களை பாதுகாப்பதும், தொழிலாளர்களின் உரிமைகளை காப்பதும் அரசின் அடிப்படை கடமையாகும். எனவே, முல்லைக்காடு பகுதியில் கப்பல் கட்டும் திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

மேலும், அப்பகுதி மக்கள், சிறு உப்பு உற்பத்தியாளர்கள், தொழிலாளர் சங்கங்கள் ஆகியோருடன் அரசு கலந்தாலோசனை நடத்தி, மக்களின் கருத்தை மதிக்கும் ஜனநாயக அணுகுமுறையை பின்பற்ற வேண்டும்.

தொடர்ந்து உப்பு விலை கடும் வீழ்ச்சி அடைந்து வரும் இந்த நாட்களில், உப்பு உற்பத்தியாளர்களை நம்பி பல லட்சம் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. எனவே, இதை கருத்தில் கொண்டு அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேசிய முற்போக்கு திராவிட கழகம் சார்பில் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## 88 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து: ஸ்டாலின் வழங்கினார்

**சென்னை, பிப்.17:**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், சிறுபான்மையினர் அந்தஸ்து கோரி விண்ணப்பித்த கல்வி நிறுவனங்களில் 88 கல்வி நிறுவனங்களுக்கு நிரந்தர சிறுபான்மையினர் அந்தஸ்துக்கான சான்றிதழ்களை வழங்கினார்.

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப் பின் வெளியிடப்பட்ட அரசாணைகளின்படி, இதுவரை 370 கல்வி நிறுவனங்களுக்கு இத்துறையின் மூலம் சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ்களும், 56 மொழிவாரி சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ்களும், 314 மதச்சார்பு சிறுபான்மையினர் அந்தஸ்துக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

தலைமைச் செயலாளரின் தலைமையிலான கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்குவதற்கான விண்ணப்பங்களை ஆய்வு செய்யும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவின் ஒன்பதாவது கூட்டத்தில், சிறுபான்மையினர் அந்தஸ்து கோரி விண்ணப்பித்த விண்ணப்பங்களை ஆய்வு செய்து, 88 கல்வி நிறுவனங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இதில் 5 கல்வி நிறுவனங்களுக்கு முதலமைச்சரால் சிறுபான்மையினர் அந்தஸ்து சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் ஜோ.அருண், துணைத் தலைவர் இறையன்பன் குத்தூஸ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை செயலாளர் எ.சரவணவேல்ராஜ், சிறுபான்மையினர் நல ஆணையர் மு.ஆசியா மரியம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

## பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு சத்தும் சுவையும் அவசியம்!



குழந்தைகளுக்கு மதிய உணவு கொடுத்து அனுப்பும் போது நல்ல சத்தாகவும், குழந்தைகள் ஆர்வத்துடன் சாப்பிடும் அளவுக்கு சுவையாகவும், இருப்பது அவசியம்.

ஐந்து ஆறு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் மதியம் பள்ளியில் சாப்பிடுவதற்கு, சிரமப்பட்டாலோ ஆர்வம் காட்டாமல் இருந்தாலோ அவர்களுக்கு இட்லி, தோசை, உப்புமா கொடுத்து விடுவது தவறு.

குழந்தையின் விருப்பத்திற்கு ஏற்ற உணவு தர வேண்டும். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு முறை அவர்களின் எடைக்கு தகுந்த உணவு தருவது அவசியம். நொறுக்கு தீனியாக பழங்கள், பழச்சாறு, சுண்டல், கடலை மிட்டாய், எள்ளுருண்டை, கேரட் வெள்ளரிக்காய் துண்டுகள் தரலாம்.

வயதுக்கு ஏற்ற உடல் எடை உயரத்துடன் குழந்தை இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்வது முக்கியம். எடை குறைவாக இருந்தால் குழந்தைக்கு தேவையான கலோரி, புரதம் இவற்றைத் தர வேண்டும். மூன்று வேளைக்கு பதிலாக நான்கு வேளை தரலாம்.

ரத்த சோகை, பசியின்மை, எடை குறைதல், சோர்வு, படிப்பில் கவனம் குறைவது, விளையாட்டிலும் ஆர்வம் இல்லாதது போன்றவை இதன் அறிகுறிகள். மண், பல்பம், அரிசி சாப்பிடும் பழக்கம், வயதுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லாதது, முக வீக்கம், கண், நாக்கு, வாய், உதடுகள் வெளிறி போய் இருத்தல், கை, கல், பாதம் வெளுத்து இருப்பது இவை இரத்த சோகைகளுக்கான அறிகுறிகள்.

ரத்த சோகை எதனால் வருகிறது?

ரத்த சோகைக்கு பல காரணங்கள் இருந்தாலும், ஊட்டச்சத்து மற்றும் இரும்பு சத்து குறைவால் வரும் ரத்த சோகை தான் பொதுவானது. போதிய ஊட்டச்சத்து தராதது, இரும்பு சத்து நிறைந்த உணவுகள் தராதது, இரண்டு வயது வரை பால் மட்டுமே தருவது, குடல் புழுக்கள் இருப்பது... இவையெல்லாம் ரத்த சோகையை ஏற்படுத்துகிறது.

இரும்பு சத்து நிறைந்த வெல்லம், கருப்பட்டி, பச்சை காய்கறிகள், பழங்கள், பேரிச்சம்பழம், முட்டை, இறைச்சி, ஈரல் ஆகியவற்றை தினசரி உணவில் தர வேண்டும்.

விட்டமின் ஏ குறைபாடு முன்பு இருந்த அளவுக்கு இல்லை என்றாலும் இன்றும் விட்டமின் ஏ குறைபாடு குழந்தைகளிடம் காணப்படுகிறது. விட்டமின் ஏ சத்து நிறைந்த உணவுகள் என்றால் நம் தேசியக் கொடி நிறத்தை நினைவில் வைத்து கொள்ள வேண்டும்.

ஆரஞ்சு நிறம்: ஆரஞ்சு, பப்பாளி, ஆரஞ்சு, கேரட், மாம்பழம் இவற்றை எடுத்துக் கொள்ளலாம்.

வெள்ளை நிறம்: பால், பால் சார்ந்த பொருட்கள், முட்டை

பச்சை நிறம்: பச்சை நிற காய்கறிகள்.

நீல நிறம்: மீன் உள்ளிட்ட கடல் உணவுகள்

ஆறு மாதங்கள் வரை தாய்ப்பாலும் அதன் பின் தாய்ப்பாலுடன் இணை உணவாக காய்கறிகள், பழங்கள், பால் என எல்லாவித உணவுகளும் தரும்போது வயதுக்கேற்ற எடை, நல்ல மூளை வளர்ச்சி உடன் குழந்தைகள் வளர உதவும். இதுவே குழந்தைகளுக்கான சரிவிகித உணவு.

## ஏப்ரல் 1-ம் தேதி முதல் அனைத்து இடங்களிலும் பான் கார்டு அவசியம்!

**சென்னை, பிப்.17:**

வரும் ஏப்ரல் 1-ம் தேதி முதல் புதிய வருமான வரிச் சட்டம் அமலுக்கு வர உள்ளது. அதன்கீழ், சில நடைமுறைகள் மாறும் அல்லவா? அப்படிப் பான் கார்டு எங்கெங்கு தேவை என்பதைப் பார்க்கலாம்... வாங்க...

1. முன்பு, ஒரே நாளில் ரூ.50,000-க்கு மேல் வங்கியில் இருந்து பணம் எடுத்தால் பான் கார்டு தேவை. ஆனால், இனி ஒரு நிதியாண்டில் ரூ.10 லட்சம் அல்லது 10 லட்சத்திற்கு மேல் ஒன்றுக்கும் மேற்பட்ட வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுத்தால்தான் பான் கார்டு தேவை.

2. முன்பு, எந்த வாகனம் வாங்கினாலும் பான் கார்டு கட்டாயம் அவசியம். ஆனால், வருகிற ஏப்ரல் 1-ம் தேதி முதல், நீங்கள் வாங்கும் வாகனத்தின் மதிப்பு ரூ.5 லட்சத்தைத் தாண்டினால் மட்டுமே பான் கார்டு அவசியம். மேலும், அதிக மதிப்புள்ள இரு சக்கர வாகனங்கள் வாங்கும்போதும் பான் கார்டு அவசியம். இதற்கு டிராக்டர்கள் மட்டும் விதிவிலக்கு.

3. புதிய வருமான வரிச் சட்டத்தின் படி, ஹோட்டல், உணவகங்கள், அரங்குகள், ஈவென்ட் மேனேஜர்களுக்குக் கொடுக்கும் பேமென்ட் ரூ.1 லட்சத்தைத் தாண்டினால் பான் கார்டு காட்ட வேண்டும். தற்போதைய நடைமுறையில் பேமென்டில் ரூ.50,000 தாண்டினால் பான் கார்டு காட்ட வேண்டும்.

4. ரியல் எஸ்டேட்டில் ரூ.20 லட்சத்திற்கு மேல் மதிப்புள்ள நிலம் அல்லது வீட்டை வாங்கினாலோ, பரிசாகப் பெற்றாலோ பான் கார்டு தேவை. முன்பு, இந்த லிமிட் ரூ.10 லட்சமாக இருந்தது.

5. இனி அனைத்து காப்பீட்டுத் திட்டங்களுக்கும் பான் கார்டு கட்டாயம் தேவை.

## 9ஆம் வகுப்பு மாணவன் உருவாக்கிய எரிவாயு கசிவு கண்டறியும் கருவிக்கு விருது



**புதுடெல்லி, பிப்.17:**

வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மேகாலயாவின் கிழக்கு காசி மலை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஜேம்ஸ் டொனால்ட் கார் கோங்கர். இவர் மௌங்காப் மாவட்ட கிறிஸ்டியன் பல்நோக்கு மேல்நிலைப் பள்ளியில் 9ஆம் வகுப்பு படிக்கிறார். இந்நிலையில், ஜேம்ஸ் எரிவாயு கசிவைக் கண்டறிந்து விபத்துகளைத் தவிர்க்கும் தடுப்பு நடவடிக்கைகளைத் தொடங்கும் புதிய அமைப்பை உருவாக்கியுள்ளார். அதாவது 'ஸ்மார்ட்' கேஸ் கசிவுவை கண்டறியும் அமைப்பை கண்டறிந்துள்ளார். இந்த கண்டுபிடிப்புக்கு வடகிழக்கு அறிவியல் கண்காட்சி விழாவில் ஜேம்ஸுக்கு தேசிய விருது வழங்கப்பட்டுள்ளது.

## கோடம்பாக்கம் தீர்க்கபுரீஸ்வரர், அங்காள பரமேஸ்வரி அம்மன் உள்ளிட்ட கோயில்களில் மகா சிவராத்திரி விழா கோலாகலம்



**சென்னை, பிப்.17:**

கோடம்பாக்கம் தீர்க்கபுரீஸ்வரர், அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில்களில் மகா சிவராத்திரி விழா கோலாகலமாக நடைபெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

சென்னை கோடம்பாக்கம் புலியூர் வன்னியர் தெருவில் உள்ள பாலவிநாயகர், பால முருகன், சொர்ணாம்பிகை சமேத தீர்க்கபுரீஸ்வரர் கோயிலில் மகா சிவராத்திரி விழா கடந்த 8-ம் தேதி தொடங்கியது.

மகா சிவராத்திரி நாளான நேற்று காலை மகா கணபதி பூஜை, மகா சங்கல்பம், கலச ஆவாஹனம், ஏகாதசி ருத்ர பாராயணம், மகா அபிஷேகம், ருத்ர ஹோமம், வசோத்ரா ஹோமம், பூர்ணாஹுதி, ஏகாதச ருத்ராபிஷேகம், மகா தீபாராதனை ஆகியவை நடைபெற்றன.

அதைத் தொடர்ந்து, நான்குகால அபிஷேகம், சுவாமிக்கு அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது. இரவு முழுவதும் நடைபெற்ற பூஜையில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இதேபோல, கோடம்பாக்கம் ஆண்டவர் நகரில் உள்ள அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயிலில் 27-ம் ஆண்டு மகா சிவராத்திரி விழா நேற்று விமரிசையாக நடைபெற்றது. காலை 8 மணிக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெற்றது. மாலை 6 மணிக்கு சப்தகன்னி வழிபாடு, கபாலி பூஜை ஆகியவை நடைபெற்றன. இதில் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்தனர்.

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோயிலில் நேற்று இரவு முழுவதும் சிறப்பு அபிஷேகங்கள், வழிபாடுகள் மற்றும் நான்கு கால பூஜைகள் நடைபெற்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் திரண்டு கபாலீஸ்வரர் மற்றும் கற்பகாம்பாளை தரிசனம் செய்தனர்.

வடபழனி முருகன் கோயிலில் நேற்று இரவு முதல்கால பூஜையுடன் விழா தொடங்கியது. தொடர்ந்து, 2 மணி நேரத்துக்கு ஒருமுறை பூஜைகள் நடைபெற்றன. மேலும், இசை நிகழ்ச்சிகள், பஜனைகளும் நடைபெற்றன.

புரசைவாக்கம் கங்காதீஸ்வரர் கோயிலில் மகா சிவராத்திரியை முன்னிட்டு அனைத்து பக்தர்களுக்கும் கங்கா தீர்த்தம், உத்திராட்சை உள்ளிட்டவை வழங்கப்பட்டன. பரதநாட்டியம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் விடிய விடிய நடைபெற்றன.

## திருவள்ளூர்: 41 அடி உயர ராஜலிங்கத்திற்கு 1008 லிட்டர் பால் அபிஷேகம்



**திருவள்ளூர், பிப்.17:**

திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் மிகவும் பழமை வாய்ந்த பொம்மி அம்மாள் சமேத குரு முத்தீஸ்வரர் கோவில் உள்ளது. இக்கோவிலில் மகா சிவராத்திரி விழா விமரிசையாக நடைபெற்றது.

விழாவின் சிறப்பு அம்சமாக, கோவிலில் 41 அடி உயரம் உள்ள ராஜலிங்கத்திற்கு 1,008 லிட்டர் பால் ஊற்றி சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் திருவள்ளூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

பாலாபிஷேகத்தைத் தொடர்ந்து மூலவருக்கு இரவு முழுவதும் நான்கு கால பூஜை, விடிய விடிய அபிஷேகம், தீபாராதனை நடைபெற்றது.

கோவில் வளாகத்தில் பரதநாட்டியம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. திருவள்ளூர் மற்றும் சுற்றுவட்டார பகுதியில் இருந்து ஆயிரக்கணக்கான பொதுமக்கள் சாமி தரிசனம் செய்தனர்.

## "உங்கள் வாழ்க்கை... உங்கள் கையில்!" - மகா சிவராத்திரி விழாவில் சத்குரு பேச்சு



**கோவை, பிப்.17:**

ஆதியோகி வழங்கியது மனித நல்வாழ்விற்கான தொழில்நுட்பங்கள் என, மகா சிவராத்திரி விழாவில் ஈஷா நிறுவனர் சத்குரு பேசினார். கோவை ஈஷா வளாகத்தில் நேற்று நடைபெற்ற மகா சிவராத்திரி விழாவுக்கு தலைமை வகித்து, சத்குரு பேசியதாவது: யோகாவின் முழு முயற்சியும், எனது முயற்சியும், ஆதியோகியின் ஆயிரக்கணக்கான ஆண்டுகால முயற்சியும், மக்கள் யாரும் தங்களுக்குத் தாங்களே ஒரு தடையாக இருக்க கூடிய ஒரு பேரழிவாக மாறிவிடக்கூடாது என்பதே.

இந்த உலகில் நீங்கள் எவ்வளவு அதிகமாகச் செய்கிறீர்களோ, அவ்வளவு தடைகளை சந்திப்பீர்கள். ஆனால் மிக முக்கியமான விஷயம், உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் ஒரு தடையாக இருக்கக்கூடாது.

உங்கள் சொந்த மனம், எண்ணம், உணர்ச்சி மற்றும் ஆற்றல்கள் உங்களுக்கே ஒரு தடையாக மாறாமல் இருப்பதை ஒவ்வொரு வரும் உறுதி செய்ய வேண்டும். இதை எளிதாக்குவதுதான் யோகக் கலை.

மனித உடலே ஒரு அதிநவீன வேதியியல் தொழிற்சாலை போன்றது. உங்கள் உடலை நிர்வாகம் செய்யும் ஒரு சிறந்த சி.இ.ஓ-வாக நீங்கள் இருந்தால், பேரின்பத்தின் வேதிப்பொருட்களை உற்பத்தி செய்வீர்கள்.

நீங்கள் ஒரு மோசமான நிர்வாகியாக இருந்தால், கவலை, மன அழுத்தம், முட்டாள்தனம் ஆகிய தேவையில்லாத விஷயங்களை உற்பத்தி செய்வீர்கள். ஆதியோகி வழங்கியது வெறும் நம்பிக்கைகளோ, தத்துவங்களோ, கோட்பாடுகளோ அல்லது போதனைகளோ அல்ல. அவை மனித நல்வாழ்விற்கான தொழில்நுட்பங்கள்.

வரலாற்றில் முதல் முறையாக, சொர்க்கத்தின் மீதான நம்பிக்கையை விட தொழில்நுட்பத்தின் மீதான நமது நம்பிக்கை அதிகரித்துள்ளது. எனவே, ஆதியோகி வருங்கால தலைமுறைக்கு உரியவர்.

மேல்நோக்கிப் பார்க்காமல், உள்நோக்கிப் பார்ப்பதுதான் ஒரே வழி. இது மதத்திலிருந்து பொறுப்புணர்வை நோக்கிய ஒரு பயணம். மதம் என்பது துரதிர்ஷ்டவசமாக பொறுப்புகள் எங்கோ மேலே இருப்பதாக மக்களை நம்ப வைக்கிறது. ஆனால், நமது கலாச்சாரம் எப்போதும் 'கர்மா' பற்றியே பேசுகிறது.

கர்மா என்றால் 'நமது செயல்' அல்லது 'நமது உருவாக்கம்' என்று பொருள். உங்கள் வாழ்க்கை எப்படி இருக்கிறது என்பது உங்கள் கையில்தான் உள்ளது. உங்களை எப்படிச் செதுக்கிக் கொள்கிறீர்கள் என்பதே உங்கள் வெற்றி. இந்த உண்மையை உலகுக்கு உணர்த்தியவர் ஆதியோகி. இவ்வாறு அவர் பேசினார்.




## சென்னையில் நகை மதிப்பீட்டாளர் பயிற்சி




**சென்னை, பிப்.17:**

கிண்டி, ஈக்காட்டுத்தாங்கலில் உள்ள தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில், நகை மதிப் பீட்டாளர் குறித்த ஐந்து நாள் பயிற்சி வகுப்பு திங்கட்கிழமை (பிப். 16) தொடங்குகிறது. வரும் 20 ஆம் தேதி வரை நடைபெற வுள்ளது. ஈக்காட்டுத்தாங்கல் சிட்கோ தொழிற்பேட்டையில் உள்ள அந்நிறுவன வளாகத்தில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை இப்பயிற்சி நடைபெறும். கூடுதல் விவரங்களுக்கு 9360221280 / 8668100181 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலவசப் பட்டா வழங்குவதில் பிரச்சினை: சார் ஆட்சியர் விசாரணை

**விழுப்புரம், பிப். 17:**


விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் அருகே டி.பாஞ்சாலம் கிராமத்தில் இலவசப் பட்டா வழங்குவது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையைச் சார் ஆட்சியர் நேரில் சென்று விசாரணை நடத்தினார். திண்டிவனம் திந்திரிணீஸ்வரர் கோவிலுக்குச் சொந்த மான தீர்த்தக் குளத்தைச் சுற்றி கட்டப்பட்டிருந்த வீடுகள் உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் இடித்து அகற்றப்பட்டன. இதில் வீடு இழந்து பாதிக்கப்பட்டவர்களுக்குத் திண்டி வனம் அருகே டி.பாஞ்சாலம் கிராமத்தில் பட்டா தருவ தாக வருவாய்த் துறையினர் உறுதியளித்தனர். சனிக்கிழமை (பிப். 14) காலை சுமார் 10 மணியளவில், திண்டிவனம் வருவாய் ஆய்வாளர் பிரபாகரன் தலை மையில் வருவாய்த் துறையினர், டி.பாஞ்சாலம் கிராமத் திற்குப் பட்டா வழங்குவதற்கான இடத்தையை ஆய்வுசெய்யச் சென்றனர். அப்போது அதே கிராமத்தைச் சேர்ந்த மக்கள், தங்கள் பகுதி மக்களுக்கு முதலில் பட்டா வழங்கு ங்கள் எனக் கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதே போன்று கடந்த மாதம் 31-ம் தேதி அளவீடு செய்யச் சென்ற அதிகாரிகளிடமும் வாக்குவாதம் செய்தனர். ரோஷணை காவல் நிலைய ஆய்வாளர் ஆனந்தராசன் இரு தரப்பினரையும் சமா தானம் செய்து வைத்தார். இது குறித்துத் தகவல் அறிந்த சார் ஆட்சியர் ஆகாஷ், மதியம் சுமார் 11.45 மணிக்கு நேரில் சென்று பட்டா வழங்க உள்ள இடத்தை ஆய்வு செய்தார். அப்போது, இடத்தை அளவீடு செய்து, டி.பாஞ்சாலம் மற்றும் தீர்த்தகுளம் பகுதி மக்களுக்குப் பட்டா வழங்குவதற்கு உடனடியாக நட வடிக்கை எடுக்கும்படி வருவாய்த் துறையினருக்கு உத்தர விட்டார்.

## பூமிக்கு அடியில் கேட்ட அலறல் சத்தம்: நரகத்தில் வதைக்கப்படும் ஆன்மாக்களின் சத்தமா!

விண்வெளியில் என்ன இருக்கிறது என்பதை அறிய மனிதன் நிலவு வரை சென்றுவிட்டான். ஆனால் நாம் வாழும் இந்த பூமிப்பந்துக்கு அடியில் என்ன இருக்கிறது என்பது இன்றும் முழுமையாக விடுவிக்கப்படாத ஒரு புதிராகவே இருக்கிறது. 1970களில் விண்வெளிப் போட்டியைப் போலவே, பூமிக்கு அடியில் யார் அதிக தூரம் துளையிடுவது என்ற போட்டி வல்லரசு நாடுகளுக்கு இடையே நடந்தது.

அதன் விளைவாக ரஷ்யாவில் உருவானதுதான் 'கோலா சூப்பர் டீப் போர்ஹோல்' எனப்படும் உலகின் மிக ஆழமான துளை. ஒரு கட்டத்தில் 'நரகத்திற்கான வாசல்' என்று மக்களால் பயத்துடன் அழைக்கப்பட்ட இந்த இடம், திடீரென மூடப்பட்டது. அறிவியலின் உச்சகட்ட சாதனையாகக் கருதப்பட்ட இந்தத் திட்டம் ஏன் பாதியிலேயே கைவிடப்பட்டது?

பனி படர்ந்த ஆர்க்டிக் வட்டத்திற்கு அருகில் உள்ள ரஷ்யாவின் கோலா தீபகற்பத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. அமெரிக்கா விண்வெளியில் சாதனை படைத்துக் கொண்டிருந்த நேரத்தில், சோவியத் யூனியன் பூமியின் ஆழத்தை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது. பூமியின் மேலடுக்கு 'க்ரஸ்ட்' என்று சொல்லப்படும் பகுதியைக் கடந்து உள்ளே செல்வதே அவர்களின் லட்சியமாக இருந்தது. சுமார் 24 வருடங்களாக நடந்த இந்தத் தொடர் முயற்சியில், அவர்கள் 12 கிலோமீட்டர் ஆழம் வரை பூமியைத் துளைத்துச் சாதனை படைத்தனர். இது எவரெஸ்ட் சிகரத்தின் உயரத்தை விட அதிகமான ஆழமாகும்.



### தடுத்த வெப்பம்!

ஆரம்பத்தில் எல்லாம் சரியாகச் சென்றாலும், ஆழம் அதிகரிக்க அதிகரிக்கச் சூழல் மிகவும் மோசமடைந்தது. பூமிக்கு அடியில் வெப்பம் இருக்கும் என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியும். ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததை விடப் பல மடங்கு அதிகமான வெப்பம் அங்கே காத்திருந்தது. சுமார் 12 கிலோமீட்டர் ஆழத்தில் வெப்பநிலையானது 180 டிகிரி செல்சியஸைத் தொட்டது. இது இயந்திரங்கள் தாங்கக்கூடிய வெப்பத்தை விட மிக அதிகம். பிளாஸ்டிக் உருகுவதைப் போல, துளையிடும் கருவிகள் அந்த வெப்பத்தில் செயலிழக்கத் தொடங்கின. இதனால் மேற்கொண்டு ஒரு அடி கூட முன்னேற முடியாத சூழல் உருவானது.

### அதிர்ச்சிகரமான கண்டுபிடிப்பு!

இந்தத் திட்டத்தில் பல விசித்திரமான விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மேற்கத்திய விஞ்ஞானிகள் பூமிக்கு அடியில் பாறைகள் மிகவும் இறுக்கமாக இருப்பதால் அங்குத் தண்ணீர் இருக்க வாய்ப்பே இல்லை என்று நம்பினர். ஆனால் ரஷ்ய விஞ்ஞானிகள் அந்த ஆழத்தில் பாறைகளுக்கு இடையே தண்ணீர் இருப்பதைக் கண்டுபிடித்தனர். பாறைகளில் உள்ள தாதுக்களிலிருந்து ஹைட்ரஜன் மற்றும் ஆக்சிஜன் அணுக்கள் பிரிந்து நீராக மாறியிருந்தது உலகத்தையே வியப்பில் ஆழ்த்தியது. இது புவியியல் வரலாற்றில் ஒரு முக்கியமான மாற்றத்தை ஏற்படுத்தியது.

### வதந்திகள், உண்மைகள்!

இந்தக் கிணறு தோண்டப்பட்ட சமயத்தில் பல திகிலூட்டும் வதந்திகள் பரவின. பூமிக்கு அடியில் துளைக்கும்போது, அங்கிருந்து மனிதர்களின் அலறல் சத்தம் கேட்டதாகவும், அது நரகத்தில் வதைக்கப்படும் ஆன்மாக்களின் சத்தம் என்றும் உள்ளூர் மக்கள் பேசிக்கொண்டனர். ஆனால் உண்மையில் அது இயந்திரங்கள் பாறைகளை உடைக்கும்போது ஏற்பட்ட விசித்திரமான ஒலிகள் மட்டுமே என்று பின்னர் விளக்கப்பட்டது. ஆனாலும் அந்த இடம் குறித்த மர்மக் கதைகள் இன்றும் உலாவருகின்றன.

தொழில்நுட்பச் சிக்கல்கள் ஒருபுறம் இருக்க, சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப்பிறகு நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டது. அதீத வெப்பத்தைச் சமாளிக்கும் தொழில்நுட்பம் இல்லாததாலும், பணத் தட்டுப்பாட்டாலும் 1992 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. பின்னர் 2005 ஆம் ஆண்டு இந்த இடம் நிரந்தரமாக மூடப்பட்டது. இன்று அந்தப் பகுதி முழுவதும் பாழடைந்து, துருப்பிடித்த ஒரு இரும்பு மூடியால் அந்தத் துளை மூடப்பட்டுள்ளது. இன்று அந்த இடம் ஒரு சுற்றுலாத் தலமாக மாறிவிட்டாலும், பூமிக்கு அடியில் 12 கிலோமீட்டர் தூரத்தில் மனிதன் விட்டுச் சென்ற தடயங்கள் இன்றும் உறங்கிக்கொண்டிருக்கின்றன.

# நன்றிக்கடன்

" முகம் தெரியாது ஆனால் பண உதவி மட்டும் மாதா மாதம் மாதவன் அக்கவுன்ட்டுக்கு வந்து விடும். இது தொடர்கதையாக இருந்தது .

அரசுக் கல்லூரியில் முதலாம் ஆண்டு படித்து வந்தவன் மாதவன் அவனோடு நாற்பது பேர் ஒன்றாக படித்தவர்கள் .

அதில் ரவியும் ஒருவன் . மாதவன் நன்கு படிக்கும் மாணவன் . ரவி சுமார் படிப்பாளி தான் .

ரவிக்கும் மாதவனுக்கும் ஏற்பட்ட மனக்கசப்பால் இருவரும் பேசுவதில்லை . ஆனால் மாதவனின் நோட்ஸ் , ரிக்கார்டு மற்றும் பல படிக்கும் பொருட்களை ஜெராக்ஸ் எடுத்து வாங்கி நண்பன் மதன் மூலம் படித்து வந்தான் ரவி .

கல்லூரி படிப்பு காலம் முடிந்தது அனைவரும் பிரிந்து சென்றனர். முழுக்க முழுக்க மாதவனின் உழைப்பால் ரவி பலன் பெற்று தேர்ச்சி பெற்று விடைபெற்றான் .

குடும்ப சூழ்நிலை காரணமாக மாதவன் அவன் அப்பாவின் பெட்டிக் கடை, சின்ன மளிகை கடை இரண்டையும் கவனிக்க வேண்டி இருந்தது .

பெரிய வருமானம் எதுவும் இல்லை இருந்தாலும் தன் அப்பா அம்மாவை நன்கு கவனித்து வந்தான். திருமணம் ஆகி ஒரு குழந்தை என அவனுக்கு ஒரு குடும்பமும் ஆனது.

விதி யாரை விட்டது என்று புலம்பி விட்டு தன் வியாபாரத்தை கவனித்து வந்தான் மாதவன்.

ரவி கடுமையான முயற்சி பயிற்சியால் அரசாங்க வேலையில் அமர்ந்தான். நல்ல பதவி நல்ல சம்பளம் . பிறகு திருமணமாகி குடும்பம் குழந்தை என ஆனது.

தன் நண்பன் மதனை சந்தித்து மாதவன் குடும்பம் பற்றி விபரம் கேட்டு அறிந்தான் ரவி . தான் மாதவனால் தான் படித்து உயர்ந்தோம் . வேலையும் அவனால் தான் கிடைத்தது என்று நினைத்தான்.

மாதவன் குடும்பத்திற்கு உதவ வேண்டும் என்று எண்ணினான் ரவி. உடன் களத்தில் இறங்கினான் ரவி .



தனக்கு தெரிந்த பாங்க் மானேஜரை அனுப்பி மிகப் பெரிய தொகையை கடனாக மாதவனுக்கு கொடுக்க செய்தான்.

பணம் பெற்ற மாதவன் மளிகை கடையை விரிபடுத்தி விட்டான். சில ஆண்டுகள் சுமாராக சென்றது வியாபாரம் . அந்த கால கட்டத்தில் தான் ரவி பணம் அனுப்பி மாதவன் பாங்க் லோன் தவணை கட்ட உதவினான் .

மாதவன் வியாபாரம் பெருகியது . பாங்க் லோன் முழுமையாக அடைந்து போனது . கையில் பணமும் நிறைய சேர்ந்தது. தனக்கு இது காலம் பணம் கொடுத்த அனுப்பிய நல்லவரை பார்க்க வேண்டும் நன்றி சொல்ல வேண்டும் என்றி நினைத்தான் மாதவன் .

தற்செயலாக தன் நண்பன் மதனை சந்திக்க நேர்ந்தது மாதவனுக்கு நடந்தவைகளை பற்றி சொன்னான் மாதவன் .

மாதவனுக்கு இதுவரை உதவியது பேங்க் லோன் கிடைக்க செய்தது எல்லாமே கல்லூரியில் கூட வகுப்பில் படித்த ரவி தான் என்பதை மதன் மூலம் கேட்டு அறிந்து மனம் நெகிழ்ந்தான் மாதவன்.

தன் மளிகை கடையின் பெயரை ரவி மளிகை ஸ்டோர் என்று மாற்றினான் .

தன் மனைவி குழந்தையுடன் ரவியின் விலாசம் கேட்டு விசாரித்து அவன் வீட்டுக்கு சென்று மனமார நன்றி தெரிவித்தான் மாதவன் .

கல்விக்கண் திறந்த நண்பனுக்கு நன்றிக்கடன் அடைத்த மன நிம்மதியில் உருகி போய் மௌனமாய் கை கூப்பி நின்றான் ரவி .

- சீர்காழி.
ஆர். சீதாராமன்.

# "பொறுமையின் சிங்கம்"

ஆறுமுகத்திற்கு அந்த ஊரில் நல்ல பெயர். ஆனால் அந்தப் பெயருக்குள் இருக்கும் மனிதனை அவன் வீட்டிலேயே யாரும் அறிந்ததில்லை.

கல்லூரியில் படிக்கும் அவரது இரண்டு மகள்களுக்கும் தங்கள் தந்தை எப்போதும் அமைதியாக... சாதுவாக... பொறுமையின் சிகரமாக இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை.

“ஒரு ஆம்பளை இப்படியா இருப்பாங்க?..... அட... ஒரு வார்த்தை கூட சத்தமாய்ப் பேச மாட்டேங்கறாரே... என்ன ஆளு இவரு?” என்று அவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்வார்கள். ஒரு முறை கடையில் ஒருவர் மோசமாகப் பேசிய போது கூட ஆறுமுகம் தலை குனிந்து வெளியே வந்தார். அன்று முதல் "கோழை” என்ற பட்டமும் அவருக்குக் கிடைத்து விட்டது. ஒரு நாள் மாலை, கல்லூரிப் பேருந்திலிருந்து ஆறுமுகத்தின் மகள்கள் இருவரும் இறங்கினர்.





கூட்ட நெரிசலைப் பயன்படுத்திக் கொண்டு நால்வரும் அவர்கள் இருவரையும் சூழ்ந்தனர். அசிங்கச் சிரிப்புகள். அருவருப்பான அந்த பார்வைகள். லேசாய் மது வாடையும். கைகளை நீட்டினர். பயத்தில் கண்கள் உறைந்து போயின பெண்களுக்கு. அப்போது “ஏய்ய்ய்ய்ய் !” ஒரு இடிக் குரல்.

திரும்பிப் பார்த்தனர். ஆறுமுகம். கையில் எதுவும் இல்லை. முகத்தில் பயம் இல்லை.

அடுத்த சில நொடிகளில் அங்கு யாருமே எதிர்பார்க்காத காட்சி அரங்கேறியது. சிங்கம் பாய்ந்தது போல ஆறுமுகம் பாய்ந்தார்.

ஒருவன் கீழே விழுந்தான். இன்னொருவன் சுவர் மீது மோதினான். மூன்றாவன் ஓட முயன்றான். விழுந்தான். நான்காவன் கையைக் கட்டிக் கொண்டு கதறினான். சுற்றி நின்றவர்களுக்கு பேரதிர்ச்சி. இதுவரை அமைதியாக வாழ்ந்த ஆறுமுகம், இன்று எரிமலையாக மாறியிருந்தான். மகள்களின் கண்கள் கலங்கின. பேச நினைத்தும் குரல் வரவில்லை. ஆறுமுகம் மெல்லத் திரும்பி சன்னமாய்ச் சொன்னான் “அம்மா... பொறுமை என்பது பலவீனம் இல்லை. அது எல்லையைத் தாண்டும் போது சிற்றெறும்பு கூட அமைதியாக இருக்காது.... சிங்கமாய் மாறும்" அன்று முதல் அவர்கள் தங்கள் அப்பாவை பெருமையோடு பார்த்தார்கள், கோழையாய் அல்ல.. ஒரு காப்பாளியாய்.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# அகத்தியனின் பயணம் 10



- கயப்பக்கம்
இரா.இரமேஷ்

## தோழியின் சொற்களில்

இதனைக் கேட்ட இசையழகி “நீ மட்டும் என்னென்னமோ பேசுற” என்று சொல்லிட்டு எழிலழகியை மென்மையாகக் கண்டிப்பதுபோல் கண்டித்தாள்.

“சார் போயிட்டு வரேன்” என்று எழிலழகி சத்தமாகச் சொல்லிவிட்டு இசையழகியின் கையைப் பிடித்து வேகமாக நடந்தார்கள். அவரைத் தொடர்ந்து அவருடைய நண்பர்கள் அனைவரும் மாலையில் இறையைத் தேடிவிட்டுக் கூட்டமாகத் தனது கூடுக்குள் செல்கின்ற பறவைகளைப் போல, அலுவலகத்திலிருந்து அனைவரும் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். இந்த ஒரு வாரக் காலத்தில் ஆரம்பத்தில் தெளிவற்ற சிந்தனையோடு இருந்த அகத்தியன், போகப் போகத் தெளிவான பாதை உடையவனாக, நிர்வாகத் திறமை உடையவனாக, இன்று புதிதாகத் தொடங்கப்பட்ட கம்பெனியில் தன்னை நிலை நிறுத்திக்கொண்ட மகிழ்ச்சியில் அவனும் அலுவலகத்திலிருந்து வெளியேறினான்.

அனைத்து தொழிலாளர்களும் தங்கள் தங்கியிருந்த அறையை நோக்கி நடந்தார்கள். இங்கு வந்து சேர்ந்து ஒரு வாரக் காலமாகியும் கூட அவனுக்கான நண்பர்கள் இன்னும் சரியாக அமையவில்லை. அவன் அறையை நோக்கி நகர்ந்தான். உள்ளே நுழைந்து ஆடைகளை மாற்றி முகத்தைக் கழுவிக்கொண்டு ஜன்னலைத் திறந்துவிட்டுக் கட்டிலில் படுத்தான். தனது சொந்த ஊரில் மலையடி ஓரத்தில், பூத்துக் குலுங்கிய சாமந்திப் பூ தோட்டத்தில் அமுதருவி ஓடி வருகின்ற காட்சி, நினைவுக்குள் வந்துகொண்டேயிருந்தது.

ஞாயிறு தனிமையில் மிகவும் கஷ்டமாக ஓடியது. அகத்தியன் காலை 9 மணிக்கு எழுந்தவன், குளித்துவிட்டு மாற்றுடை அணிந்து, அருகிலிருந்த உணவகத்துக்குச் சென்று, தனக்கு பிடித்த இட்லியை சாப்பிட்டுவிட்டு பக்கத்தில் உள்ள பூந்தோட்டத்தில் உட்கார்ந்து, இயற்கையை ரசித்தான். அவனைப் போன்று சக மேற்பார்வையாளர்களும் அங்கு உட்கார்ந்து, அவரவர் நண்பர்களோடு பேசிக்கொண்டிருந்தானர். இவனுக்கான நட்பு இன்னும் புரிதலோடு கூடியவர்கள் கிடைக்காததால், தனிமையில் பூந்தோட்டத்தின் இயற்கை காட்சிகளை ரசித்தவரே, அன்றைய அரைநாள் முழுவதும் அங்கேயே கழித்துவிட்டு, மீண்டும் உணவகத்திற்குள் நுழைந்து மதிய உணவை முடித்துக்கொண்டு அறைக்குச் சென்று தூங்கி எழுந்தான். காலம் இப்படியே ஓடியது.

ஞாயிற்றுக்கிழமையை அவரவர்கள் விருப்பப்படி கழித்துவிட்டு மருநாள் திங்கட்கிழமை அதிகாலையில் அலுவலகத்திற்கு அனைவரும் நுழைந்தனர்.

இசையழகியும் எழிலழகியும் இணையாக உள்ளே வந்தனர். இசையழகி இன்று தனித்து காணப்பட்டாள். வழக்கமாக வரும் உடையிலிருந்து இன்று கொஞ்சம் வித்தியாசமாக இருந்தாள். புடவை கட்டியிருந்தாள். தலை நிறைய பூ இருந்தது. கழுத்தில் தங்கச் சங்கிலி போட்டிருந்தாள். உடல், முகம் முழுவதும் மகிழ்ச்சியில் இருந்தது. வெட்கப்பட்டு நாணத்தோடு எழிலழகியோடு உள்ளே நுழைந்தாள்.

இதைப் பார்த்து ரசித்துக்கொண்டிருந்த அகத்தியன், ஏதோ எழிலழகியிடம் பேசுவதற்கு முன்னாடியே “சார் இன்னைக்கு இசையழகியோட பிறந்தநாள்.” என்று அவள் சொல்வதற்கு முன்னால் சிரித்த முகத்தோடு இசையழகி அகத்தியனிடம் அவள் கையில் வைத்திருந்த இனிப்பு பொட்டலத்தை “ இந்தாங்க சார்” எனக் கொடுத்தாள்.

அதிலிருந்து ஒன்றை எடுத்துக்கொண்ட அகத்தியன், இசையழகியின் முகம் பார்த்து “வாழ்த்துக்கள். இன்னைக்கு உங்க டிரஸ் ரொம்ப நல்லா இருக்கு” என்று சொன்னவுடன் இசையழகியின் முகம் அப்படியே ரோஜாப் பூ மலர்வது போல் இருந்தது.

இதைப் பார்த்த எழிலழகி இசையழகியைப் பார்த்துச் சிரித்து, அவர்களிடையே சைகை மொழிகளில், மௌன மொழிகளில், ஏதோ ஒன்றை உறுதிப்படுத்தியது போல அமைந்தது.

“ரொம்ப நன்றி சார்” என்று சொல்லிவிட்டு இசையழகி எழிலழகியோடு உள்ளே நுழைந்து, மற்ற தோழிகளுக்கு இனிப்பை வழங்கி ஆரவாரத்தோடு இசையழகியின் பிறந்தநாள் கொண்டாட்டத்தைக் கொண்டாடினர்.

மகிழ்ச்சி ஆரவாரம் பேச்சு அனைத்தும் இன்று இசையழகியைச் சுத்தியே மையப்படுத்தி வைத்திருந்தாள் எழிலழகி. இடைவெளியின்போது இசையழகியும் எழிலழகியும் ஒரு சேர வெளியே சென்றனர். ஒரு மரத்தடியில் நின்று எழிலழகி இசையழகியின் கைப்பிடித்து பேசிக்கொண்டிருந்தாள்.

“இன்னைக்கு நான் சொல்லட்டுமா” என்று இசையழகி எழிலழகியிடம் கேட்க,

“ஐயோ வேணாம், நீ வேற அவசரப்படாதே, கொஞ்சம் பொறுமையா இருடி'ன்னு சொல்லிட்டு மனதில் அதிர்ச்சியோடு எழிலழகியின் கையைப்பிடித்து கெஞ்சி கொண்டிருந்தாள்.

“இல்லடி இதான் நல்ல தருணம். இதை விட்டுட்டா, அடுத்தது சொல்லவே முடியாது. நீ தடுத்தாலும் நான் கண்டிப்பா இன்னைக்கு ஏதாவது ஒரு செய்தியின் மூலமா, ஒரு சின்ன வார்த்தையாவது, அகத்தியன் சார்கிட்ட உன் மனசுக்குள்ள இருக்கிற ஆசையை சொல்லிடுடுவேன். என்னைப் பற்றி நீ தப்பா எடுத்துக் கூடாது” என்று அவசர அவசரமாக இசையழகியின் கையைப் பிடித்துத்துக்கொண்டு எழிலழகி உள்ளே நுழைந்து

,“நீ என்ன சொன்னாலும் சரிதான், என்ன தடுக்கவே முடியாது. இன்னிக்கு நான் சொல்லிடுவேன்” என்று படபடவெனப் பேசிவிட்டு எழிலழகி அலுவலகத்திற்குள் நுழைந்தாள்.

“ ஏ... வேணாண்டி, அவசரப்பப்படாதே... நானே சொல்கிறேன். நீ சொல்லாத” என்று இசையழகி கெஞ்சிக்கொண்டே உள்ளே நுழைந்தாள்.

சரியாக மணி ஒன்றும். உணவு இடைவெளி நேரம் விட்டவுடன் எதிர்பார்த்தது போலவே எழிலழகி அகத்தியன் இருப்பிடத்தை நோக்கி நடந்தாள்.



(தொடரும்)

# சிவன் சொத்து குலநாசம் என்று கூறுவார்கள்



பொதுவான விளக்கம்
சிவன் கோவில்
சொத்தை அபகரித்தால்
குலம் நாசம்.

வித்தியாசமான
சிந்தனைகோணத்தில்
இப்படியும் சிந்திக்கலாம்.

இந்து சமயத்தில்
பெருமாள்,சிவன்,
என இரு
பெரும்தெய்வங்கள்
உண்டு.

இதில் பெருமாள்
பார்ப்பதற்கு
பொன்பொருள்
ஆடை ஆபரணங்கள்,
நைவேத்தியங்கள் என
கண்களை
கவரும் வகையில்
இருப்பார்.

ஆனால் ஈசன்
ஜடாமுடியுடன்
இடுப்பில் புலித்தோல்
தரித்து உடலில்
சுடுகாட்டுச்சாம்பல்
பூசிக்கொண்டு
கையில் திருவோடு
ஏந்தி பார்ப்பதற்கு
பரதேசிக்கோலத்தில்
இருப்பார்.

பெருமாளிடம்
உலகியலுக்கு
தேவையான அனைத்தும்
இருப்பதால் அவர்மீது
பக்திகொண்டு மக்கள்
வழிபட்டு அவரிடம்
கோரிக்கை வைப்பது
இயல்பான விசயம்.

ஆனால் ஈசன் அப்படி
அல்ல..
அவர்மீது பக்தியை
காட்டிலும் பயம்
வருவதுதான்
நிதர்சனம்.
அவருடைய
அலங்காரம் அப்படி.

பெருமாளை யார்
வேண்டுமானாலும்
வணங்கலாம்.
ஆனால் ஈசனை
வணங்க ஈசனே
தேர்தெடுத்தால்
மட்டுமே அவர்
மீது பக்தி
கொள்ளமுடியும்.

பெருமாளை
வணங்குவது
தகப்பனின்
கையை மகன்
பிடித்துச்
செல்வது
போலாகும்.
தகப்பனின்
கையை
பிடித்துச்செல்லும்
குழந்தை வழியில்
ஏதாவது பள்ளம்
வந்தால் கிழே
விழுவதற்கு வாய்ப்பு
அதிகம்.
ஈசனை வணங்குவது
தகப்பன்
குழந்தையின் கையை
பிடிப்பதுபோலாகும்.

தகப்பனால் கரம்பற்றி
அழைத்துச்செல்லப்படும்
குழந்தை
கீழேவிழுவதற்கோ.
வழிதவறவோ வாய்ப்பே
இல்லை.
சிவன் சொத்து
எனப்படுவது திருநீரும்
ருத்ராட்சமுமே.

இதை அணிந்தால்
அவரது குலம்
நாசமாகும்.
அதாவது அவரது
பாவங்கள்
அனைத்தும்நாசமாகும்.
அவரது மறுபிறப்பும்
நாசமாகும்.

அவரால் அவரது வம்சமே
பிறவிக்கடலில் இருந்து
மீண்டு பிறவாநிலையை
அடைவர்.

இதுவே சிவன் சொத்து
குலநாசம்
என்பதன் இரகசியம்.....
பொருள்....
என்று இப்படியும்
சிந்திக்கலாம்

ARUNACHALAM

# தினம் ஒரு தலைவர்கள் தாதா அமீர் ஹைதர் கான் வரலாறு






தாதா அமீர் ஹைதர் கான், 1900 - 1989) பிரித்தானிய இந்தியாவின் முதல் தலைமுறை பொதுவுடைமைத் தலைவர்களுள் ஒருவர். இந்திய விடுதலை இயக்கப் புரட்சியாளர்.

வாழ்க்கைச் சுருக்கம்
அமீர் ஐதர் கான் ராவல்பிண்டி மாவட்டத்திலுள்ள சியாகிலியான் உமர் கான் என்ற சிறு கிராமத்தில் எளிய பஞ்சாபி முஸ்லிம் குடும்பத்தில் பிறந்தார். அவரது தந்தை அமீர் ஹைதர்கான் சிறுவயதாக இருக்கும்போதே இறந்துவிட்டார். பின்னர் அவரது தாயார் இரண்டாம் திருமணம் செய்துகொள்கிறார். அவர் தன்னுடைய மாற்றாந் தந்தையிடம் பல கொடுமைகளை அனுபவித்தார் . ஆயினும் கல்வி கற்கும் தணியாத ஆவலால் அவர்வீட்டைவிட்டு வெளியேறி பல்வேறு சிரமங்களுக்கு ஆளானார். பின்னர் இவர் மதராசாவில் சேர்க்கப்பட்டார்.1914 ஆம் ஆண்டில் மும்பையில் பிரித்தானிய வணிகக் கப்பல் படையில் சேர்ந்தார். அங்கிருந்து அவர் 1918 இல் அமெரிக்க வாணிபக் கப்பல் படையில் இணைந்தார். இக்காலகட்டத்தில் அவர் யோசேப்பு முல்க்கேன் எனும் ஐரிய தேசியவாதியை சந்திக்க நேர்ந்தது. அவர் மூலம் பிரித்தானியருக்கு எதிரான அரசியல் கருத்துக்களை அறிந்து கொண்டார்.

சர்வதேச கம்யூனிஸ்டு அகிலத்தின் பிரதிநிதியாக உருசியாவில் சில காலம் செயல்பட்ட பின் இந்தியா திரும்பினார். இந்தியா திரும்பிய ஐதர் கானுக்கு தென்னிந்தியாவில் கட்சியை உருவாக்கும் பணி ஒப்படைக்கப்பட்டது. மீரட் சதி வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டிருந்ததால் தமிழகத்திலும் தலைமறைவாகத்தான் இவர் வாழ வேண்டியிருந்தது. சங்கர் எனும் புனை பெயரை வைத்துக்கொண்டு தமிழகம் மற்றும் தென்னிந்தியாவின் சாதிய அமைப்பை தெரியாமலும், எவரொருவர் உதவியின்றியும் சென்னை(மெட்ராஸ்) வந்து கம்யூனிஸ்டு கட்சியை கட்டும் பொறுப்பை ஏற்றார். அவ்வாறு தனித்து இருந்த போதும், இந்த முகம் தெரியாத ஊரில், மாத்யூஸ் என்ற ரயில்வேத் தொழிலாளியிடம் நட்பை ஏற்படுத்திக் கொண்டு தனது பணியைத் தொடங்குகிறார் கான்.

வாழ்க்கை வரலாறு
ஆமீர் ஹைதர்கானின் வாழ்க்கை வரலாற்றை அவரிடம் நேரிடையாகக் கேட்டுப் பெற்ற டாக்டர் அயூப் மிர்சா என்பவர் உருது மொழியில் எழுதிய வாழ் புனைகதையின் சுருக்கப் பட்ட ஆங்கிலப் பெயர்ப்பின் தமிழாக்கம் - "அமீர் ஹைதர்கான்: காவியம் படைத்த கம்யூனிஸ்ட்" என்கிற நூலை பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ளது.

# விஜய் இயக்கத்தில் 'காதல் ரீசெட் ரிபீட்' படத்தின் டீசர் வெளியானது



மாலி மான்வி மூவி மேக்கர்ஸ், D Studios, சன்னி டென்வி (Denvi Productions) தயாரிப்பில், பிரபா பிரேம்குமார் இணை தயாரிப்பில், விஜய் இயக்கத்தில் உருவாகியுள்ள 'காதல் ரீசெட் ரிபீட்' திரைப்படத்தின் டீசர் வெளியானது.

முன்னணி இசையமைப்பாளர் ஹாரிஸ் ஜெயராஜ் இசையில் ஏற்கனவே வெளியான பாடல்கள் பெரும் வரவேற்பை பெற்ற நிலையில், புதுமையான காதல் கதையை சொல்லும் இந்தப் படத்தின் டீசர், சமூக வலைத்தளங்களில் வெளியான சில மணி நேரங்களிலேயே ரசிகர்களிடையே கவனம் ஈர்த்து வருகிறது.

ஒரு அழகான காதல் கதையாகத் தொடங்கும் டீசர், 'ரீசெட்' 'ரிபீட்' என்ற தலைப்புக்கு ஏற்றவாறு, எதிர்பாராத திருப்பங்கள், உணர்ச்சி பூர்வமான காட்சிகள் மற்றும் புதுமையான கதை சொல்லல் பாணியுடன் பார்வையாளர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில் அமைந்துள்ளது. இது ஒரு சாதாரண காதல் கதை அல்ல, எந்த மாதிரியான காதல் கதை என்பதே புரியாத வகையில் பல ஆச்சரியங்களைத் தரும் படமாக 'காதல் ரீசெட் ரிபீட்' இருக்கும் என்பதை டீசர் உறுதி செய்கிறது.

இந்தப் படத்தில் மதும்கேஷ், ஜியா சங்கர் ஜோடியோடு மலையாள சினிமாவின் முன்னணி நட்சத்திரமான அர்ஜுன் அசோகன் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார்.

இவர்களோடு எம்.எஸ். பாஸ்கர், ஜெயபிரகாஷ், விஜி சந்திரசேகர் உள்ளிட்ட பலர் இணைந்து நடித்துள்ளனர்.

ஒளிப்பதிவாளர் அரவிந்த் கிருஷ்ணா காட்சிகளுக்கு அழகிய காட்சித் தன்மையை வழங்கியிருக்கிறார், ஆண்டனி படத்தொகுப்பை மேற்கொண்டிருக்க, கலை இயக்கத்தை சரவணன் வசந்த், சண்டை இயக்கத்தை மனோகர் வர்மா, உடை வடிவமைப்பை ருச்சி முனோத் கவனித்துள்ளனர்.

டீசர் தற்போது இணையம் முழுவதும் பெரும் வரவேற்பைப் பெற்று வரும் நிலையில், படத்தைத் திரையரங்குகளுக்குக் கொண்டு வரும் பணிகளில் படக்குழு தீவிரமாக செயல்பட்டு வருகிறது. மார்ச் 6ஆம் தேதி 'காதல் ரீசெட் ரிபீட்' திரைப்படம் உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இப்படத்தை தமிழகமெங்கும் ரோமியோ பிக்சர்ஸ் நிறுவனம் வெளியிடுகிறது. விரைவில் இப்படத்தின் இசை வெளியீடு மற்றும் டிரெய்லர் குறித்த அதிகாரப்பூர்வமான அறிவிப்புகளும் வெளியாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.

தென்னிந்திய அளவில் பிரபலமான நடிகையாக வலம் வருபவர் நேஹா ஷெட்டி. இவர் தெலுங்கில் தொடர்ந்து படங்களில் நடித்து வருகிறார். தமிழில் இவர் நடித்த முதல் படம் Dude. இப்படத்தில் ஒரு சிறிய கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இன்ஸ்டாகிராமில் 1.4 மில்லியன் பாலோவர்களை கொண்டுள்ள நடிகை நேஹா ஷெட்டி, தற்போது ரோஜாக்களுடன் எடுத்துக்கொண்ட தனது லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை பதிவு செய்துள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன இதோ அந்த புகைப்படங்கள்:



# SK26 ஃபர்ஸ்ட் லுக் வெளியீடு..!



கமல் ஹாசனின் ராஜ் கமல் ஃபிலிம்ஸ் இன்டர்நேஷனல் மற்றும் டர்மெரிக் மீடியா இணைந்து தயாரிக்கும் புதிய படத்தில் நடிகர் சிவகார்த்திகேயன் நடிக்கிறார். அமரன் திரைப்படத்திற்கு பிறகு சிவகார்த்திகேயன் மற்றும் கமல் ஹாசன் கூட்டணி மீண்டும் இணைந்துள்ளது படத்திற்கான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

இயக்குநர் சிவகுமார் முருகேசன் இயக்கத்தில் உருவாகும் இந்தப் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் வெளியானது. அதன்படி இந்தப் படத்திற்கு "சேயோன்" என தலைப்பிடப்பட்டுள்ளது. இந்தப் படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். ஃபர்ஸ்ட் லுக் போஸ்டருடன் "சேயோன்" படத்தின் கொண்டாட்டம் நாளை (பிப். 17) காலை 10 மணிக்கு தொடங்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சேயோன் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டரில் நடிகர் சிவகார்த்திகேயன் கையில் அரிவாளுடன் மயில்களுக்கு மத்தியில் உட்கார்ந்து இருக்கிறார். ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர் படத்திற்கான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

# 'மரகத நாணயம் 2' படத்தின் பூஜை க்ளிக்ஸ்!



தமிழ் திரையுலகில் பேண்டஸி மற்றும் நகைச்சுவை இணைந்து வெற்றிகரமாக உருவான சில படங்களில், ஒன்று மரகத நாணயம். நடிகர் ஆதி மற்றும் நிக்கி கல்ராணி நடிப்பில், இயக்குநர் ஏ.ஆர்.கே. சரவணன் இயக்கத்தில் வெளியான இந்த படம் வசூல் மற்றும் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றது.

இதனைத்தொடர்ந்து தற்போது இதன் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது. இரண்டாம் பாகத்தையும் ஏகேஆர் சரவணன்தான் இயக்குகிறார். இதில் ஆதி, நிக்கி கல்ராணி, பிரியா பவானி சங்கர், முனிஷ்காந்த், சத்யராஜ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இப்படத்திற்கு திபு நினன் தாமஸ் இசையமைத்துள்ளார்.

பேஷன் ஸ்டுடியோஸ், அக்செஸ் ஃபிலிம் ஃபேக்டரி இணைந்து படத்தை தயாரித்துள்ளது. இந்நிலையில் மரகத நாணயம் 2' படத்தின் பூஜை புகைப்படங்களை படக்குழு பகிர்ந்துள்ளது. பூஜையில் நடிகர் கார்த்தி, இயக்குநர் வெங்கட் பிரபு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

# மீண்டும் ரீ-ரிலீஸ் ஆகும் "கில்லி"

விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான சூப்பர்ஹிட் சீரியல்களில் ஒன்று ஈரமான ரோஜாவே. இந்த சீரியலில் கதாநாயகியாக நடித்தவர் நடிகை பவித்ரா ஜனனி. இவர் தென்றல் வந்து என்னை தொடும், ராஜா ராணி, சரவணன் மீனாட்சி போன்ற சீரியல்களில் நடித்திருக்கிறார். மேலும் சமீபத்தில் வெளிவந்த ரேகை என்கிற வெப் தொடரிலும் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இன்ஸ்டாகிராமில் 1.1M பின்தொடர்பாளர்களை கொண்டுள்ள நடிகை பவித்ரா ஜனனியின் லேட்டஸ்ட் புகைப்படங்கள் இதோ:





தரணி இயக்கத்தில் ஸ்ரீ சூர்யா மூவீஸ் தயாரிப்பில் விஜய், திரிஷா, பிரகாஷ் ராஜ், மயில்சாமி, பாண்டு, போன்ற பல முன்னணி நடிகர்கள் நடித்து 2004 ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் கில்லி. இத்திரைப்படம் மகேஷ் பாபு நடிப்பில் வெளியான 'ஒக்கடு' திரைப்படத்தின் ரீமேக் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய் இந்தப் படத்தில் கபடி வீரராக நடித்து இருப்பார். விஜயின் வெகுளித்தனமான கதாப்பாதிரமும், திரிஷாவின் அப்பாவித்தனமான முக பாவனையும் இப்படத்தின் கூடுதல் கவனத்தை பெற்றது. இந்தப் படத்தில் வரும் அனைத்து பாடல்களும் ஹிட்டானது. இன்றும் காரில் பயணம் செய்யும் பொழுது அர்ஜுனர் வில்லு பாடல் கேட்காமல் பயணம் முடிவுக்கு வராது.

படம் வெளியாகி 22 ஆண்டுகள் கடந்த நிலையில் இந்தப் படம் மீண்டும் ரீரிலீஸ் செய்யப்படுகிறது. அதன்படி கில்லி திரைப்படம் வருகிற 20ஆம் தேதி மீண்டும் ரீரிலீஸ் ஆவதாக சக்தி ஃபிலிம் ஃபேக்டரி நிறுவனம் தெரிவித்துள்ளது. திரையரங்கு உரிமையாளர்கள் கோரிக்கையை ஏற்று இந்தப் படம் மீண்டும் ரீரிலீஸ் செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

# நயினார் நாகேந்திரனுக்கு நடிகை திரிஷா கடும் கண்டனம்

பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரனின் தரம் தாழ்ந்த கருத்து குறித்து நடிகை திரிஷா வழக்கறிஞர் மூலம் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து திரிஷாவின் வழக்கறிஞர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"எனது கட்சிக்காரரும், புகழ்பெற்ற இந்திய திரைப்பட நடிகையுமான திருமதி. திரிஷா கிருஷ்ணனின் அறிவுறுத்தலின் பேரில், பின்வருவனவற்றைப் பதிவு செய்ய இந்த அறிக்கையை வெளியிடுகிறேன்:

1. இது ஊடகங்களில் பரவி வரும் எனது கட்சிக்காரரைப் பற்றிய விரும்பத்தகாத கருத்தைக் குறிப்பிடுவதற்காக வெளியிடப்படுகிறது.
2. மாநில அரசியலில் உயர் பதவியில் இருக்கும் ஒருவர், இதுபோன்ற விரும்பத்தகாத மற்றும் பொருத்தமற்ற கருத்து தெரிவித்ததை எனது கட்சிக்காரர் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.
3. அவர் எந்த அரசியல் கட்சியுடனும் தொடர்புடையவர் அல்ல, அவ்வாறு செய்ய விரும்பவில்லை என்பதை எனது கட்சிக்காரர் மிக தெளிவாக கூறுகிறார். மேலும், கடந்த காலத்தில் எனது கட்சிக்காரர் தொடர்ந்து பராமரித்தது போலவே, அரசியலில் அவர் எப்போதும் நடுநிலையான நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.
4. எனது கட்சிக்காரர் தனது திறமையால் மட்டுமே வரையறுக்கப்பட விரும்புகிறார், எந்தவொரு கூறப்படும் அரசியல் சீரமைப்பாலும் அல்ல. மேலும், மிக முக்கியமாக, தனிப்பட்ட வாழ்க்கையை ஒருபோதும் பொது விமர்சனம் அல்லது விவாதத்திற்கு உட்படுத்தக்கூடாது என்பது பொதுவான கூற்று. மேலும் உயர் பதவிகளை வகிக்கும் நபர்கள் பொது விவாதத்தில் பொறுப்பையும் சமநிலையையும் பராமரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
5. எனது கட்சிக்காரரின் பெயர் அவரைப் பொருட்படுத்தாத விஷயங்களில் சேர்க்கப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது," என குறிப்பிட்டுள்ளார்.




# 'ஆடினே இருப்பேன்' பாடல் அப்டேட்

இசையமைப்பாளரும் நடிகருமான ஜி.வி. பிரகாஷ் நடிக்கும் ஹேப்பி ராஜ் படத்தை அறிமுக இயக்குனரான மரியா ராஜா இளஞ்செழியன் இயக்குகிறார். அவர் பிரதீப் ரங்கநாதனின் 'லவ் டுடே' படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றியவர்.

இந்தப் படத்தில் ஜிவி பிரகாஷ்-க்கு ஜோடியாக ஸ்ரீ கௌரி பிரியா நடிக்கிறார். மேலும், இந்த படத்தின் மூலம் 11 வருடங்களுக்குப் பிறகு தமிழ் சினிமாவிற்கு அப்பாஸ் கம்பேக் கொடுக்கிறார். இந்த படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார்.

இந்நிலையில், ஹேப்பி ராஜ் படத்தின் முதல் பாடலான "ஆடினே இருப்பேன்" வரும் நாளை மாலை 5 மணிக்கு வெளியாகும் என படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளது.



முனிவர் துணை
கங்கோத்ரி எண்டர்பிரைசஸ்-ன்
BI NEW TEACHERS COLONY
பொன்னேரி அருகில் பழவேற்காட்டில்
RERA APPROVED
மனைகள் வழங்கப்படுகிறது.

GANGOTHARI ENTERPRISES
RG Rajendra Prasath
Proprietor
கங்கோதரி எண்டர்பிரைசஸ்
Buying & Selling
வீடு, மனை, வாங்க, விற்க இங்கு அனுகவும்.
97103 48377, 89254 08203
gangotharienterprises2018@gmail.com
No. 18, Dr. Radhakrishna Salai, Vivekananda Nagar, Kodungaiyur, Chennai-600 118.

Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

ADVERTISE WITH US!
CONTACT US
9337501889

THINKING to BUY / SELL / RENT a PROPERTY
New / Resale... Residential / Commercial...
* Plots
* Flats
* House
* Villa
* Bungalows
* Farm Land
* Ware Houses
* Factory Sites
* Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call:7871617005

Just499
Pick Any Website
Just ₹499 Only!
Affordable Website Solutions for Every Business
Matrimonial Website
Real Estate Website
E. Commerce Website
Restaurant Website
Shopping Website
News Website
MLM Binary Website
MLM Level Website
MLM Gaming Website
Call: 7789951009 | WhatsApp: 7789951009

WE'RE HIRING
TELECALLERS
SALARY STARTING FROM RS.20000/- ONWARDS
+91 7871617005

Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the LEADS GENERATION FACTORY
For Your REAL ESTATE BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80% OFF SPECIAL OFFER DISCOUNT
90 DAYS MONEY BACK GUARANTEE

just499
REAL ESTATE SOFTWARE
We Provide Complete Real Estate Software Solutions
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

Just499
JOB WEBSITE SOFTWARE
We Provide Complete Job Portal Software Solution
ONLY Rs. 499
Website: just499.com
Phone: 7789951009
WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
விளம்பரம்
vilambarampage@gmail.com
7789941009

Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250-Rs500 per day
Work From Home Jobs
Rs 8000 – Rs 15000 per month
Ananda Bhaskar
9337501889
7789941009

WANTED
experienced candidates in
AUTO CAD
Chennai / Coimbatore
minimum 3 years experience
Cell: 9363084990

ANY MLM PLAN
INR PLAN RS.20000
CRYPTO PLAN RS.30000
NO HIDDEN OR EXTRA CHARGES
SOURCE CODE AVAILABLE
CALL 9853719337 / 7436914247

WANTED
MARKETING HEAD
REAL ESTATE
Fixed Salary Rs.25000/- & Above + INCENTIVE
(Monthly up to - 1.5 Lakhs)
Age: 25 to 40 Experienced Only
Office @ Anna Nagar
9790021367

WANTED
COLLECTION EXECUTIVES
TELECALLERS
FOR MNC BANK.
Sal.23,000/-
161, Bells Road, Chennai - 05.
Ct.: 98410 38488 / 93848 17349

ஐஸ் கடை
வேலைக்கு ஆட்கள் தேவை (பெண்கள்)
10.00 - 7.00 மணி வரை
சௌகார்பேட்டை
9829571998

# புதுக் கவிதை பகுதிகள்



## ஹைக்கூ!

இன்பம் துன்பம்
இரண்டும் கடந்து போகும்!

உணர்க இன்னல் இல்லாத
மனிதன் இல்லை!

யாருக்கும்
நிரந்தரமன்று இன்பம்!

அறிந்திடுக
பணக்காரனுக்கும்
உண்டு கவலை!

உனக்கு மட்டுமல்ல
உலகிற்கே உண்டு இன்னல்!

இல்லறத்திற்குத் தேவை
பணம் மட்டுமல்ல
குணமும் தான்!

உடலை உருக்கும்
நோயை உருவாகும்
கவலை!

முயன்று தோற்பது
தவறில்லை
இயலாமலே இருப்பது
தான்
தவறு!

இரவு பகல் இன்பம் துன்பம்
மாறாதது மாற்றம்!

சோகம் அழிக்கும் சுறுசுறுப்பு!

இன்பம் துன்பம் இரண்டிலும்
சமநிலை உயர்நிலை!

வேதனை சோதனை
வாழ்க்கையில் உண்டு
கடந்து போகும்!

இரண்டும் தவறு
வெற்றிக்கான செருக்கு
தோல்விக்கான வருத்தம்!

உயர்பதவியில்
உள்ளவர்களுக்கும்
உண்டு கவலை!

இல்லவே இல்லை உலகில்
கவலை இல்லாத
மனிதன்!



துன்பத்தை மற
இன்பத்தை நினை
இனிக்கும் வாழ்வு.

**கவிஞர் இரா. இரவி**

---

கண்களை நம்பாதே
களப் பொய் சொல்லும்

விழிகள் மட்டும் விதியை
மீறும் விந்தை நிறைந்தது
வாலிப வயது

மனம் சொல்வதை
மூளை கேட்காது

மூளை செய்வதை மனம்
பொறுக்காது

தோன்றிய விதங்களில்
சிந்திக்க வைக்கும்

கால் போன போக்கில்
நடந்து போகும்

விளைவுகள் அறியாது
விதியும் தெரியாது

கண்முன் பார்க்காது
கட்டுக்குள் அடங்காது


காலம் நேரம் இல்லாது
இன்புற்றுக்களிக்கும்



கைகூடும் காதல்
மட்டும் காவியம்
ஆகும்

**வி.பிரபாவதி**
மடிப்பாக்கம்

---



## நீரின்றி அமையாது உலகு

பசுமை நிறைந்த மலையில்
பிறந்து !

"அருவியாக" "நீர்வீழ்ச்சியாக"
மலை மண் கல்லில் விழுந்து!

"நீரோடையாக" வற்றாத
ஆறாக "காவேரி"
"வைகையில்" தவழ்ந்து !

நீர்நிலை தேக்கமாக "குளம்"
"குட்டை" "ஏரி" "ஊரணி"
"கண்மாயில்" நிரம்பி வடிந்து!

கால்வாய் வாய்க்கல் வழி
பாய்ந்து !

கடைசியில் கடலில் வந்து
கலந்து !

தன் "பயணத்தை"
முடித்துவிட்டோம் என்று
"நீர்" நினைக்க வழியில்லை
ஏனென்றால் !

ஆகாயச் சூரியனின்
"வெப்பமயமாக்குதலினால்"
மீண்டும் ஆகாயமார்க்கமாக
"மேகங்களுடன்"
சென்றடைந்து "மழையாக
பெய்து" பசுமை நிறைந்த
மலையில் "மீண்டும் மீண்டும்"
நீர் பிறந்து சுழற்சியின்
"மறுபயணத்தை"
மீண்டும் தொடங்கும் !



"மனித
வாழ்க்கையும்"
நீரைப்போல்தான்
சுழற்சியானது!

"நீரின்றி
அமையாது
உலகு"

**G.A.கோவிந்தராஜ்**
**(எ)சுரேஷ்குமார்**
திருப்புவனம் புதூர்

---

## கலவரம் !

பயத்தோடு கொண்டு
போனார்கள்



ஒற்றையடிப்பதை
வழியே
இறந்தவரின்
உடலை...
அந்த
ஒற்றை அடி
பாதை வேறு
சாதிக்காரருடையது
என்பதால் !

**எம்.பி.தினேஷ்.**
கோவை

---

## "உதிர உபகாரி"

கோயிலில் மணி
ஒலிக்காத போதும்
குருதித் துளி ஒலிக்கிறது
ஒரு உயிர் மீளும் சத்தமாக!

மந்திரம் சொல்லாத
கரங்கள்! மனிதத்தைக்
காப்பாற்றும் வரங்கள்!
துளி துளியாய் வழியும்
சிவப்பு! சாவைத் தள்ளி
வைக்கும் உயிர்ப்பு!

அவன் வானம் பார்த்து
வேண்டவில்லை
வலியில் துடிக்கும்
மனிதனைப் பார்த்தான்!

பெயர் தெரியாது புகழ்
தேடாது பதக்கம் இல்லாத
உதிர உபகாரி!

இரத்தம் தானம் என்பது
உடலிலிருந்து தருவல்ல,
இதயத்திலிருந்து
கொடுக்கும் அன்புத் திரவம்!

மரணத்தின் நிழல்
நெருங்கும் போது
மனிதன் ஆகாயம்
நோக்க மாட்டான்,
மனிதம்தான்
மனிதனை நோக்கும்!

அங்கே கை நீட்டுவான்



ஒருவன்
அவன்தான்
இறைவன்!

**முகில்**
**தினகரன்**
கோயமுத்தூர்

---



மனம் ஒரு
ரெண்டாங்கெட்டான் தான் ??
இலட்சியங்கள் ஒரு புறம்
ஓயாமல் தொல்லை கொடுத்து
கொண்டே ஒரு புறம்
இன்னொரு புறம்
குடும்ப சூழ்நிலை
மாத சம்பளத்தின் பின்னே
ரொட்டி துண்டுக்கு
ஆசைப்படும் நாய் போல
வேலையை கெட்டியாக
பிடித்து கொண்டே !!
அடுத்து என்ன செய்ய ??
எப்படி வெல்வேன் ?
என் லட்சியங்களை –என்ற
போட்டா–போட்டியில்
சிக்கி தவிக்கிறது
பாழாய் போன உயிர் !!

எல்லாம் தொலைந்த பின்பும்
தொலையாமல் கிடக்கிறது
உன் நினைவுகள்!

வலிக்கிறது சிதைக்கும் படி
எல்லாம் சிரிக்காதடி!

இரண்டாம் காதலுக்கெல்லாம்
இதயம் ஆசைப்படுவதே
இல்லை நீ போன பின்பும்
கண்ட பெண்களில் எல்லாம்
உன் சாயலையே
காண்கிறேன்!

கரைந்து, கசிந்துருகி
ஒன்றுபட்டு வாழும்
அந்த காகங்கூட்டங்களுக்கு
தெரியவில்லை என் காதலை
விழுங்கி வாழும் கழுகு
நீயென்று!!

ஏனோ உன் பாதச்சுவடுகளை
மியூசியங்களில்
வைக்கவில்லை ஏ மனிதா
காதலை பரப்பிய
கடைசி கிளியோபாட்ரா
அவளென்பதை
ஒரு போதும் மறந்து விடாதே!!

தூய்மையானது
மண்மேல் விழாத வரை
மழைத்துளிகள்!
புனிதமானது உன் மேல் படாத
வரை என் காதலும்!!

கடவுளின் துணையை
நாடியதே இல்லை
அப்பா இருந்தவரை! அவர்
இறந்த பிறகு தான் தெரிந்தது
இதுவரை எனக்கு துணையாய்
இருந்தது கடவுளென்று!!

என் சுயசரிதை டைரி
ஒவ்வொரு பக்கங்களிலும்
பக்க,பக்கமாய்
உன் வரலாறு தானடி!!

நீயில்லாத போதும் உன் குரல்
என்னுள் ஒலித்துக் கொண்டே
இருக்கிறது
இதயத்துடிப்புகளாய்!!

என்னுள் வந்து விடுடி
நானும் ஈசனாகி போகிறேன்!

குடை பிடிக்கிறேன்
கடைசி வரை வருவாயா?
காதல் மழையில் நனைய!!

அன்பான மெல்லிய
அணைத்தலில் மறைந்து
போகும் காமத் தீ
கரையானுக்கோ,
அக்னிக்கோ பலியாகும்
போகும் மக்கு(ம்) மனிதா
உணர்ந்து கொள் சுற்றும்
பூமியில் சற்றென மாறும்
வாழ்க்கையில்
காதல் மட்டுமே நிலையானது!

என்ன வேண்டும் என்கிறாய்?
உன்னிடம் வேறென்ன
கேட்டு விட போகிறேன்
பேரின்ப காதலை தவிர!

பிடிக்கவில்லை நீயில்லாமல்
மழையில் நனைவதற்கு!

சொர்க்கத்தில் வாழ்ந்தாலும்
சொர்ணம் நீ இல்லாத
வாழ்க்கை நரகம் தான்!!



மழை நின்று
விடுவதற்கு முன்
சீக்கிரம் ஓடோடி
என்னோடு
வந்து விடுடி
ஒரு குடைக்குள்
நனைவது
அவ்வளவும் சுகம்!

**லி.நௌஷாத் கான்**

---

## குதூகல உலகம்

காற்றில் ஊஞ்சலாடி
மேகத்தில் சிரிக்கும்
குதூகல உலகம்...

மழைத்துளி முத்துக்களில்
வானவில் எழுதும்
கவிதையாய் குழந்தை மனம்

மண்வாசம் மறந்து
கனவுக்குள் நுழைந்து
காகிதப்படகே கப்பலாகி
குளமெல்லாம் கடலாக...

சந்தோஷமே சங்கீதமாய்
சுற்றும் உலகம் விழித்தெழ...

சிறகு விரித்த பறவையின்
ஓசையில் பயம் கரைய...
பட்டாம்பூச்சி நிறங்களில்
பார்வை பூங்கா மலர...

கவலைக்கு கதவு இல்லை
கற்பனைக்கு எல்லை இல்லை
கைப் பிடித்த
நம்பிக்கையோடு
காலங்களும்
குதூகலமாய்...

கையளவு மனதிலே





கடலளவு ஆசையின்றி...
குழந்தை போல மனம்
இருந்தால் ... குதூகல
உலகம் அருகிலே...

**நா.பத்மாவதி**
கொரட்டூர்

---

# நூல் விமர்சனம்

**நூல் :**
**நம்பிக்கை நாற்றுகள் 100**
**நூல் ஆசிரியர் : சிந்தனைக் கவிஞர் கவிதாசன்**
**நூல் விமர்சனம்:**
**கவிஞர் இரா.இரவி**
**வெளியீடு : விஜயா பதிப்பகம், 20, ராஜ வீதி, கோவை.**
**பக்கங்கள் 104, விலை ரூ. 100**




நம்பிக்கை நாற்றுகள் 100 படித்தால், நாற்றுகளாக இருக்கும் பயிர்களாக செழித்து வளர்ந்திட உதவிடும் உன்னத நூல். கையடக்க நூலாக படங்களுடன், ஓவியங்களுடன் சிறப்பாக வந்துள்ளது. பாராட்டுகள். நூலை சிறப்பாக வடிவமைத்து பதிப்பித்துள்ள விஜயா பதிப்பகத்திற்கு பாராட்டுகள். முத்துமுத்தாக 100 நம்பிக்கை நாற்றுகள் உள்ளன. முதல் நாற்று.

"ஒவ்வொரு நாளும் அரை மணி நேரம் அறிவை வளப்படுத்த வாசியுங்கள். நேரமில்லை என்பது எரிபொருள் நிரப்ப நேரமில்லை என வாகனஓட்டி சொல்வதைப் போன்றது" அறிவை விரிவு செய்ய வாசிப்பு அவசியம். வாசிக்க நேரமில்லை என்பது, பெட்ரோல் நிரப்ப நேரமில்லை என்று கூறி வாகனஓட்டி தொலைதூர பயணம் மேற்கொண்டு பெட்ரோல் இன்றி பயணம் தடைபடுவதைப் போன்றது. வண்டி ஓட பெட்ரோல் அவசியம். அதுபோல மனிதனுக்கு வாசிப்பு அவசியம். வாசிப்பை சாதனையாளர்கள், தலைவர்கள் அனைவருமே நேசித்தவர்கள் என்பதை நாம் அறிவோம். வாசிப்புத்தான் அவர்களைத் தலைவர்களாக உயர்த்தியது. எனவே வாசியுங்கள். "சிந்திக்காமல் செயல்படுவது மூடத்தனம்! சிந்தித்த பிறகும் செயல்படாமல் இருப்பது முட்டாள்தனம்!" எந்த ஒரு செயலையும் சிந்தித்து பின் செயல்பட்டால் செயல் சிறப்பாகும். சிந்தித்துக்கொண்டே இருப்பது முட்டாள்தனம் தான். சிந்தனையைச் செயலாக மாற்றினால் சாதிக்க முடியும். வெல்ல முடியும், சிகரம் தொட முடியும். சிந்தனை + செயல் = வெற்றி என்பதை உணர்த்தியது சிறப்பு. நம்பிக்கை நாற்றுகள் 100ல், ஒருவரி போல ஆத்திசூடியும் உண்டு, இருவரி போல திருக்குறளும் உண்டு, மூவடி போல ஹைக்கூவும் உண்டு, நான்குவரி நாலடியாரும், வெண்பாவும் உண்டு. வாழ்வியல் கருத்துக்களை வெற்றிக்கான சாதனைக்கான சூட்சுமத்தை சொல்லித்தரும் நூல் இது. நூலாசிரியர் சிந்தனைக்கவிஞர் கவிதாசன் அவர்களுக்கு பாராட்டுகள். "சிந்தனைக் கவிஞர்" என்ற பட்டத்திற்கு பொருத்தமானவர் கவிதாசன் அவர்கள். "பிரச்சனையைத் தீர்க்க ஆர்வமுள்ளவரிடம் ஆலோசனை கேளுங்கள்! தீவிரப்படுத்தும் நோக்கம் உள்ளவரிடம் வேண்டாம்!" பொதுவாக பிரச்சனையைத் தீர்க்க ஆலோசனை வழங்கிடும் நல்லவர்கள் உண்டு. அவர்களிடம் மட்டுமே கலந்து ஆலோசிக்க வேண்டும். அதை விடுத்து பிரச்சனையை தூண்டிவிட்டு தீவிரப்படுத்தி சண்டைக்கு வழிவகுக்கும் கெட்டவர்களிடம் யோசனை கேட்க வேண்டாம் என்கிறார். "நன்றியுணர்வில்லாதவர்கள் எந்த நிலைக்கு உயர்ந்தாலும் அவர்களை மனிதர்களாக ஏற்றுக்கொள்வதில்லை குறள் வேதம்!" திருவள்ளுவரின் திருக்குறளை வழிமொழிந்து வடித்த நம்பிக்கை நாற்று சிறப்பு. ஆம், நன்றி மறந்தவர்களை நாம் மதிப்பதில்லை. நன்றியோடு உள்ளவர்கள் மேலே மேலே உயர வாய்ப்பு வளரும். மாமனிதர் அப்துல்கலாம் அவர்கள் குடியரசுத் தலைவராக பதவி ஏற்கும் விழாவிற்கு அவருக்கு நூல்கள் வழங்கிட நூல்களுக்கு அழைப்பு விடுத்தார். நன்றியுணர்வுடன் இருந்ததால் தான் மக்கள் போற்றும் குடியரசுத்தலைவராக விளங்கினார். கலாம் ஐயா பற்றி சிற்றிதழ்களில் வந்த செய்திகளை எல்லாம் வெட்டி ஒட்டி அவருக்கு அனுப்பி வைத்தேன். எனக்கு நன்றி சொல்லி மடல் அனுப்பி இருந்தார். அந்த மடலை பொச்சிசமாக பாதுகாத்து வருகிறேன். இதுபோன்ற நினைவுகளை மலர்வித்தது இந்த நாற்று. "தொடர் முயற்சியுடன் தோழமை கொண்டவர்கள் தோல்வியை துரத்தி அடிக்கிறார்கள்!" முயற்சி திருவினையாக்கும் என்றது திருக்குறள். முயற்சியால் வென்று மின்சாரம் கண்டுபிடித்தவர் எடிசன். கஜினிமுகமது 17 முறை முயற்சி செய்து வென்றார். ஒருமுறை முயற்சி செய்து தோற்றதும், அத்தோடு முயற்சியை கைவிட்டுவிடும் பலரை நாம் பார்க்கிறோம். தொடர்முயற்சி வேண்டும். எண்ணியதை முடியும்வரை முயற்சி செய்வதல்ல, எண்ணியதை முடிக்கும்வரை முயற்சி செய்வதே சிறப்பு. "நம்பிக்கையூட்டும் சொற்களும் நல்ல மருந்தே! நம்பிக்கையான சொற்களைப் பேசும்போது நாமும் குணமடைகிறோம்!" நண்பரை பார்க்க மருத்துவமனைக்குச் சென்றால் அவருக்கு ஆறுதலாக வார்த்தை பேச வேண்டும். எல்லாம் சரியாகி விடும். அறிவியல் முன்னேறி விட்டது. விரைவில் நலம் பெறுவீர்கள், கவலை வேண்டாம் என்று ஆறுதல் சொன்னால், அவருக்கு மருந்தாக அமையும். அதை விடுத்து சிலர் எதிர்மறையாக பேசுபவர்களும் உண்டு. அவர்களின் பேச்சு அவர்களை ரணப்படுத்தி விடும். மேலும் நோயாளியாக்கி விடும். எனவே நேர்மறையான நம்பிக்கை தரும் நல்ல சொற்களையே பேசுவது கடமை என்பதை உணர்த்தியது சிறப்பு.

"புண்படுத்தியவரையும் பண்படுத்தும் இயல்புடையவரே பண்பட்டவராவார்" இதற்கும் திருக்குறள் தான் நமக்கு உதாரணம். "இன்னா செய்தாரை ஒறுத்தல்", நமக்கு தீங்கு இழைத்த பகைவருக்கும், அவரே வெட்கப்படும்வண்ணம் நன்மை செய் என்றார். இந்த திருக்குறள் தான் காந்தியடிகளின் அகிம்சை கோட்பாட்டிற்கு அடிப்படையாக இருந்தது. இந்தத் திருக்குறளையும் திருவள்ளுவரையும் அறிமுகம் செய்தவர் ரஷ்யாவில் வாழ்ந்த லியோ டால்ஸ்டாய் என்ற அறிஞர். ஆனால் இன்று நம்மில் பலர் புண்படுத்தியவரை திரும்ப புண்படுத்தவே எத்தனித்த வருகின்றனர். அது தவறு. பண்பாக நடந்து கொள்வது மனிதனுக்கு அழகு என்பதை உணர்த்தியது சிறப்பு. "எப்பொழுதும் கவனமாகப் பேச வேண்டும் ஏனென்றால் எழுதியதைக் கூட திருத்தி எழுத முடியும் பேசியதை,,,?" இதைப் படித்தவுடன், "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" திருக்குறளே என் நினைவிற்கு வந்தது. கனிபோன்ற இனிமையான சொற்கள் இருக்கையில், காய்போன்ற வன்சொற்கள் எதற்கு? இந்தத் திருக்குறளை படித்துவிட்டுப் போய் வெளிநாட்டிலிருந்து மதுரைக்கு வந்த தமிழ் படித்தார் ஒருவர். நாம் பேசும்போது கவனமாகப் பேசுவது முக்கியம். "தீயினால் சுட்ட புண்" திருக்குறளும் நினைவிற்கு வந்தது. கவனமாக இன்சொல் பேச வேண்டியதை அவசியத்தை உணர்த்தியது.

"பொறுமை என்பது ஓர் ஆற்றல்மிகு ஆயுதம் மனவலிமை இல்லாதவர் களுக்கு அதைக் கையாளத் தெரியாது" விதையை விதைத்துவிட்டு குரங்கு தினமும் எடுத்து எடுத்துப் பார்த்ததாம், வளரவில்லை என்று வருத்தப்பட்டாம், பொறுமை இன்றி எடுத்துப் பார்த்தால் எப்படி வளரும்? எனவே சிலவற்றில் பொறுமை அவசியம் என்பதை உணர்த்தியது சிறப்பு. நூலாசிரியர் சிந்தனைக்கவிஞர் கவிதாசன் அவர்களுக்கு மீண்டும் பாராட்டுகள்.

---

1.பெண்கள் மனசு
குக்கர்போல அவர்கள்
கஷ்டத்தை விசில் அடித்து
சொல்லிவிடுவார்கள்
ஆண்கள் மனசு
இட்லி சட்டி போல்
கஷ்டத்தை உள்ளே வைத்து
சமாளிப்பார்கள்

2 சூரிய பகவானை
நினைத்தாலும் மேற்கில்
உதிக்க முடியாது கிழக்கில்
தான் உதிக்க முடியும்
இதுதான் இயற்கையின் நியதி

3. சரக்கு விற்ற அரசுக்கே
இவ்வளவு கடன் இருக்கு
என்றால் அதை குடிச்ச
குடிகாரர்களுக்கு
எவ்வளவு கடன் இருக்கும்

4. சட்டம் தெரிந்த வக்கீலை
பிடிப்பதை விட நீதிபதியே
தெரிந்த வக்கீலை பிடப்பதே
புத்திசாலித்தனம்

5. அதிகமாக இருந்தாலும்
படுத்து கிடந்தால்
இரை கிடைக்காது
ஓடினால்தான் இரை
கிடைக்கும்
தங்கமாக இருந்தாலும்
தீயை தாங்கினால் தான்
ஆபரணமாக மாறும்
ஓட்டமும் போராட்டமும்
இல்லாமல் பலன்
கிடைக்காது

1. கடவுள் கொடுத்த
வாழ்நாளை எல்லாம்
ஆஸ்திக்காக தொலைத்து
விட்டு கடைசியில் ஒன்றுக்கும்
உதவாத அஸ்தியாக
மாறுபவன் தான் மனிதன்

2. வாழ்க்கையில்
நம்பிக்கையுடன் பயணம்
செய்யுங்கள் ஏனென்றால்
பலூன் வியாபாரியின்
மூலதனம் வெறும் காற்று
மட்டுமே

3. ஆண் சேவல் அழகு
ஆண் மயில் அழகு
ஆண் சிங்கம் அழகு
ஆண் யானை அழகு
ஆண் காளை மாடு அழகு
ஆனால் மனித பிறவியில்
பெண் மட்டுமே அழகு

4.கிளி இடம் நல்ல நேரம்
பத்தி ஜோசியம் கேட்கிறாங்க
அதுவே நேரம் சரியில்லாமல்
தான் கூண்டில் அடைபட்டு
கிடக்கு



5. ஒழுக்கத்தின் மீது
அக்கறை இல்லாதவன்
குற்றவாளி உடலின்
மீது அக்கறை
இல்லாதவன் நோயாளி
தன் மீது அக்கறை
இல்லாதவன் ஏமாளி

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி




## “இலக்கைத் தீர்மானி”

இலக்கை எழுதி விட்டாயா?
இல்லையெனில் காலம்
எழுதும் உன் பெயரை....
அர்த்தமில்லா ஓர்
அத்தியாயத்தில்!

காற்று எங்கே தள்ளுமோ
அங்கே செல்லும் இலை
போல... நாளை எங்கே
கூட்டிச் செல்லுமோ
அங்கே செல்லாதே
இளைஞனே!

கையில் மொபைல்
மனதில் வெறுமை
கண்களில் கனவு
இல்லையெனில்
காலம் உன்னை
கணக்கில் எடுக்காது!

கையில் பட்டம்,
மனதில் திட்டம் இல்லை.
நாக்கில் பெரிய கனவு,
நடையில் முயற்சியில்லை!

திசை தெரியா படகு
அலைகளின்
விளையாட்டுப் பொருள்?
குறிக்கோள் இல்லா
வாழ்க்கை சூழ்நிலையின்
சதுரங்க காய்!

உன் வயது தீப்பொறி
அதை சாம்பலாக்காதே
விளக்காக்கு! உன்னை
மட்டுமல்ல உன்னை நம்பும்
இதயங்களையும்
ஒளிரச் செய்!

பணம் ஓடும் வழி தேடாதே
பண்பு ஓடும் வழி தேடு!
புகழுக்காய் திரியாதே
புதுமைக்காய் வாழ்ந்திடு!

வாழ்க்கை தேர்வல்ல தீர்ப்பு!
நீ எழுதும் பதிலே
உன் எதிர்காலம்!

குறிக்கோள் இல்லா
வாழ்க்கை கூட்டத்தில் நின்று
தன் பெயரையே
மறந்த மனிதன் போல!

இலக்கை எழுதி விட்டாயா?
இல்லையெனில் இப்போதே
எழுது... உன் பெயருக்கு
பின்னால் ஒரு பொருள்
சேர்க்க!

இன்று எழுதாத இலக்கு
நாளை வருத்தமாகும்.

ஒரு இலக்கு வை!
அது உன்னை விழிக்க
வைக்கும்! அது உன்னை



வெட்கப்பட வைக்கும்!
இறுதியில்... அது
உன்னை
வெற்றி பெற
வைக்கும்!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்



## எங்கும் நமசிவாய! எதிலும் நமசிவாய.!

சிவனே.. சிவனே..
ஜீவனும்.. சிவனே..!
ஆதியும்.. அந்தமும்.. சிவனே.!
சிவ ராத்திரியில் சக்தி
வணங்கிய..செம்பொருள்..
அவனே சிவனே.!

அடியவர் மனதை
ஆட்கொண் டருளும்
அன்பே.. சிவனே..
சிவனே..!
நெடிய மாலொடு..
பிரமனும் தேடிய.. நெருப்பு
மாமலை சிவனே..!


மதுரையின் பதியில்
திருவிளை யாடிய..
மாதொரு பாகனும் சிவனே..!
எது வரை யென்றால்
இடுகரை வரையிலும்
எரிந்திடும் சுடலையில்
சிவனே..!
லிங்கத்தின் வடிவில்
நந்தியும் துதிக்க..
நடராசனும் யார்.. சிவனே.!
தங்கத் தமிழில்
நால்வரும் பாடிய..
நமசிவாயமும் சிவனே..!

அடியவர் மனதில்
ஆன்றவன் தோன்றிய



அற்புத ஈசனும்..
சிவனே.!
அண்ணாமலை யும்
அருட்பெரும் சோதியும்
என்னில் எழுந்ததும்
சிவனே.!

**வே.கல்யாண்குமார்.**



## நினைவுச்சின்னம்

தினம்,தினம்
சிரித்து பேசியவளைவிட
என்றோ ஒருநாள்
எதிர்பாரவிதமாய்
புன்னகைத்தவளே
நினைவில் நிற்கிறாள்,

தினம்,தினம்
கைக்கோர்த்து
சென்றவளைவிட–என்றோ
ஒருநாள் எதிர்பாராவிதமாய்
உரசி சென்றவளே
நினைவைவிட்டு–விலக
மறுக்கிறாள்,

முதலாம் உலகப்போர்
ஞாபகத்தில்
இல்லையென்றாலும்
அதற்காக ஆசிரியர்
அடித்த அடி இன்னமும்
இதயத்தில் இருக்கிறது,

உடலெங்கும் முத்தம்
கொடுத்தாலும் உதட்டில்
கொடுக்கும் முத்தமே
உசத்தியாய் பேசப்படுகிறது,



இப்படியாய்
சின்னசின்ன நினைவுகள்
சின்னதனமாய்
இருந்தாலும்
நினைவுசின்னமாகிவிடுகிறது.

**நாகை ஆசைத்தம்பி**
கோவை

## விடியலில் ஓர் அஸ்தமனம்!

விடியல் வாசலில்
காலைச் சூரியன்
கண்ணைத் திறக்கும் முன்
குட்டி குரலொன்று
மண்ணுக்குள் மவுனமாய்
புதைக்கப்படுகிறது!

பூவாக மலர வேண்டிய
முகத்தில் இன்னும்
பால்வாசனை
உலராத போது,
பெண் குழந்தையென்ற
ஒரே காரணம் அதன் மூச்சை
அணைக்கிறது!

வானம் கேட்கிறது, “அவள்



என்ன தவறு
செய்தாள்?”
பூமி தலை குனிகிறது
பதில் சொல்ல
வெட்கப்பட்டு!

**முகில் தினகரன்**
கோயமுத்தூர்

## உப்பு

உயிர்களின் தத்துவத்தை
விளக்கும்போதிமரம்.
**பணம்**
மதிப்பூட்டப்பட்ட காகிதம்.
**பிணம்**
மூச்சுகாற்றுநின்றதால்
சதைதோல்அழுகும்
கழிவுக்கூடை.
**தேன்**
சிறுதுளிகளின்சேமிப்புபெட்டகம்.
கூட்டுமுயற்சியால்
எக்காலத்திலும்நிலைக்கும்
உழைப்பின் சின்னம்.
**நிழல்**
ஒளியால் தோன்றிடும்
உருவத்தின்கானல்நீர்.
**வாழை**
விதையில்லாமல்
தோன்றியவிருச்சம்.
**ஊதுபத்தி**
மின்மினிக்காத நட்சத்திரம்.
**மனிதநேயம்**



உணர்வுள்ள
உயிர்களுக்குள்
மறைந்திருக்கும்
மூன்றாம்கரம்.

**கவிஞர் பொன். பனகல் பொன்னையா**

## கலைமகளின் கருத்துக்கள்

முயற்சி
முயற்சி யென்னும்
முத்தான முத்தை



முதல்வனாக
உன்
முன்னேற்ற
வாழ்விற்கு!

**பா.கலைமகள்.**
விழுப்புரம்



அவள் என்னை
அசடு என்றாலும்
புன்னகைக்கிறது
காதல் கொண்ட மனம்

**ஸ்ரீகாந்த்** திருச்சி

## வாழ்க்கை

பரந்து விரிந்து கெடக்குது
உலகம் பரிந்து கனிந்து
உனக்கும் உதவும்

எனது எனது என்பதை
நிறுத்திடு நமது நமது என்று
நீ வாழ்ந்திடு

இயற்கை தந்த கொடைகள்
இருக்க இன்பம் தேடி
எதற்கு நீயும்

அங்குமிங்கும் அலைந்து
தேய்கிறாய் பொங்குமின்பம்
தேடித்தேடி அலைகிறாய்

நான்கு சுவரு தாண்டி நீயும்
வந்திடு நாடு உனக்கு
நிறைய செய்யும் தெரிந்திடு

பட்டித்தொட்டி முதலாக
பட்டணம் வரையிலும்
பார்த்து மகிழ ஆயிரமிருக்கு
புரியனும்

கவலைகள் நம்மை
ஆளவிட்டு வாழாதே
நீர்த்திவலைகள் ஒன்றும்
நிரந்தரம் ஆகாதே

விண்ணுமண்ணும் விந்தை
சொல்லும் பார்த்திடு
கண்ணும் கருத்துமாய்
கண்டு இன்பம் சேர்த்திடு

கண்ணில் நீரை கடந்து
செல்ல கற்றிடு உன்னில்
நீயே உலகமென்றே
உணர்ந்திடு

வாழ்க்கை ஒன்றே



என்பதனை
அறிந்திடு
வாழ்வதற்கே
என்று
வாழவழி
நீ தெரிந்திடு

**வி.பிரபாவதி,**
மடிப்பாக்கம்



## என் காதல்...

அமாவாசையன்று
வெண்ணிலவைக்
காதலித்தேன்
அஸ்தமனத்தின் போது
சூரியனைக் காதலித்தேன்
அலை இல்லாத போது
கடலினைக் காதலித்தேன்
வண்ணம் இல்லாத
போது காதலித்தேன்
வானவில்லைக் நிழல்
தராத போது மரத்தினைக்
காதலித்தேன் நிம்மதி



இல்லாத
போது
வாழ்க்கையைக்
காதலித்தேன்
நீ இல்லாத
போது
உன்னைக்
காதலித்தேன் ...!

**எஸ்.சந்திரசேகரன்அமுதா**
செஞ்சிக்கோட்டை



## தூயவளே (னே )...!

புதியதை ஏற்காதவரை
பொலிவிழப்பாய்
புரிந்துகொள்..!

பொதுவானது
தெரிந்துகொள்..!
முயற்சி செய்
புதிய விடியலோடு முடியும்...!

உடனடித் தேவையில்
உருகும் உள்ளம்.
அதனை உணருவதாய்
இல்லை பழமைவாத இல்லம்.

குலத்தில் தொடங்கி
கௌரவத்தில் படர்ந்து
பொருத்தத்தில் முடியாமல்
வருத்தத்திலேயே வளர்கிறது

கருத்தியலில் மாறாத
துணை தேடும் பயணம்.

உறவை விலக்கியது
அருகிலிருப்பதை
அவமதித்தது
அடிமனதிலுள்ளதை
வெளிப்படுத்தாதது

காலம் கடந்தும்
திருமண ஆசைகள்
கைக் கூடாமல் போனதற்கு
இவையனைத்தும்
சரியான காரணம்

இனியும் பொறுமையாய்
இருந்தால் வெறுமையிலேயே
வெந்து தணியும்
உன் இளமை...!

ஆற்றலுடையவனை
தோகைக்கு காட்டுகையில்
பொருத்தம் எட்டென்று
ஏனோ வருத்தத்தோடு
விலகிடுவார்...!.

பத்து பொருத்தமிருந்தும்
பாவை அழகில்லை என
பார்க்கலாம் எனச்
சொல்லிவிடுவார்...!

இப்படியே தொடர்ந்தால்
இருவருக்குள்ளும்
வருத்தம் வளரும்

அகவை கூடி
அழகு நொடிந்துபோகும்

மனம் குன்றி மறந்தே
போவீர் திருமணம் என்ற
புனித நிகழ்வை ..!ஆதலால்
சுருக்கமாய் புத்திக்கு
உரைப்பது ஒன்றே ஒன்று

உறவு தாண்டியேனும்
மனதிற்கு பிடித்ததை
தேடி பிடி தவறில்லை



காலப்போக்கில்
அனைத்தும்
சரியாகும்..!

**இரா. இரமெஷ்**
கயப்பாக்கம்



அன்பே சிவமாம்!
பிறகென்ன... சிவராத்திரி
முழுக்க உன்னையே
சிந்தித்துவிட்டுப் போகிறேன்
என் அன்பே!

**சு.அருண் பிரகாஷ்**
இராமச்சந்திரபுரம்

## அவள்



கடைக்கண்ணால்தான்
பார்க்கிறாய்
எப்போதும் என்னை!
நீ தவிர்க்கும்
நேர் பார்வையைவிட



இதில்தான்
காதல்
அதிகம்
கொட்டுகிறது
என்பதை
அறியாமலோ
அறிந்தோ...

**கே. பி. ஜனார்த்தனன்**

## இடுக்கண் களைவதாம் நட்பு!

(நிலைமண்டில ஆசிரியப்பா)

அன்பால் மனமும்
அழகாய் மலர்ந்து
இன்பால் இருவர்
இனிய நட்பை

அரிதாய்க் கொண்டே
ஆருயிர்ப் பேணி
உரித்த முறையில்
உண்மையில் காண்க!

நிலவின் பிறையே
நிறைவது போல
கலையாய் அமைந்து
காண வேண்டும்!

தீய வழியில் தேரா முறையில்
நேயமின்றி நேர்ந்திடும்போது

ஏய உணர்வாய்
எழுச்சி கொண்டே
ஓயா துணர்த்தி
ஓதவே வேண்டும்!

ஆடை அவிழ்ந்தால்
அதையே பிடிக்கும்
ஓடும் கையாய்
உணர்த்த வேண்டும்!

கற்குந் தோறும்
காணும் இன்பமாய்ப்
பொற்புடன் விளங்குக
பொலிவாம் நட்பே!

**முனைவர் இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.

## மனிதன் மாறிவிட்டான்

பச்சையான புல்வெளி பட்டு
போனதே ..... பரவசமூட்டும்
காடுகலெல்லாம் கானாமல்
போனதே.....!

மழைகளை கொண்டு
வரும் மலைகள் எல்லாம்
கரைந்து போனதே.... ஆற்று
மணலெல்லாம் அள்ளி
முடிந்து போனதே...!

நீரை தேக்கி வைக்க ஏறி,
குளம் இல்லாமல் போனதே....
பாவி அரசியல்வாதியால்
அனைத்தும் மறைந்து
போனதே....!

மிசினேரியால் மனிதன்
உழைப்பு போனதே...
மீண்டு வாழ மனிதன் அறம்
மாண்டு போனதே...!

இயற்க்கை நமக்கு கிடைத்த



வரம் என்பதை
மனிதன்
மனம் மறந்து
போனதே....!!

**பொன். கருணா**
நவி மும்பை




## அழியாத கோலங்கள் இட்டவர் பாலு மகேந்திரா !

இலங்கை மட்டகளப்பு அமிர்தகழியில் பிறந்தவரே !
இங்கே தமிழகம் வந்து திரையில் சிறந்தவரே !



இலண்டன் மாநகரில் கல்விகள் பயின்றவரே !
இந்தியாவில் புனேயில் ஒளிப்பதிவு கற்றவரே !

திரைஉலகில் தனி முத்திரைப் பதித்தவரே !
தேசிய விருதுகளுக்குப் பெருமை சேர்த்தவரே !

ஈடில்லா ஒளிப்பதிவில் தனிப்பாதை வகுத்தவரே !
இயக்கத்தில் இணையில்லா வெற்றி பெற்றவரே !

இருபத்தியாறு படங்களின் சிறந்த ஒளிப்பதிவாளரே !
இந்தியாவின் மிகச் சிறந்த ஒளிப்பதிவாளரே !

திரைப்பட ஒளிப்பதிவு படிப்பில் தங்கம் பெற்றவரே
திரைப்படப் பட்டறை தொடங்கி பயிற்றுவித்தவரே !

மலையாளத்தில் நெல்லு படம் ஒளிப்பதிவு செய்தவரே !
மலையாள மாநிலத்தின் விருதினைப் பெற்றவரே !

கோகிலா கன்னடப்படம் இயக்கி இயக்கம் தொடங்கியவரே !
அழியாத கோலங்கள் வெண்திரையில் இட்டவரே !

உலகநாயகன் தேசியவிருது பெறக் காரணமானவரே !
இசைஞானியின் இசைப்பசிப் போக்கியவரே !

மூன்றாம் பிறை செதுக்கி முழு நிலவானவரே !
முக்காலமும் விரும்பும் மிகைப் படங்கள் தந்தவரே !

வீடு கட்டும் இன்னலை வீடு படத்தில் உணர்த்தியவரே !
மூடுபனியில் ஒளிப்பதிவு விதைக் காட்டியவரே !

யாதார்த்த திரைபடத்தின் முதல் கர்த்தாவே !
யாரும் நடிக்கலாம் என்பதை மெய்பித்தவரே !

வெற்றி இயக்குனர்களின் நல்ல குருவானவரே !
வெற்றிமாறனின் இயக்குனர் குருவானவரே !

காலத்தால் அழியாத திரைக்காவியங்கள் தந்தவரே !
காற்றில் தேன் இசை கீதங்கள் ஒலிக்க வைத்தவரே !

தமிழ்த்திரை உலகில் வரலாறு படைத்தவரே !
தமிழனின் பெருமையை உலகிற்கு உணர்த்தியவரே !

மாநில மைய அரசுகளின் விருதுகள் பல பெற்றயவரே !
மனதில் படத்தை திரையில் துணிவுடன் வடித்தவரே !

தலைமுறைகள் படத்தில் தாத்தாவாக வாழ்ந்தவரே !
தன்னிகரில்லா தரமான நடிப்பை நல்கியவரே !

உடலால் உலகை விட்டு மறைந்த போதும் !
உன்னத திரைப்படங்களால் உள்ளங்களில் வாழ்வீர் என்றும் !

**கவிஞர் இரா .இரவி !**



## மௌனம்

வார்த்தைகளால் சொல்ல
முடியாத உண்மைகளை
மௌனம் பேசிவிடும் !

தேவையற்ற விவாதங்களை
தவிர்த்து மனதை
அமைதிப்படுத்தும் சிறந்த
கருவி !

மௌனமாக இருக்கும் போது
தான் நாம் உள் மனதில்
சத்தத்தை நம்மால் கேட்க
முடியும் !

சில நேரங்களில்
தர்க்கங்களை விட மவுனமே
வலிமையான பதிலாகும் !

பேச வேண்டிய இடத்தில்
பேசுவதும் மௌனமாக
இருக்க வேண்டிய இடத்தில்
மௌனமாக இருப்பதும்
அறிவின் அடையாளம் !

உன் மௌனத்தை புரிந்து
கொள்ளாதவர்களால் உன்
வார்த்தைகளை புரிந்து
கொள்ள முடியாது !

தேவையற்ற
கேள்விகளுக்கு மிக
சிறந்த பதில் மௌனம்
மட்டுமே ! வார்த்தைகள்
சிதறும் போது சக்தி
குறைகிறது !

மௌனம் நிலவும் போது சக்தி
சேமிக்கப்படுகிறது !
வார்த்தைகள் தோற்கும்
இடத்தில் வாழ
தொடங்குகிறது மௌனம் !

ஆயிரம் சொற்கள் கோர்த்து
அடுக்கினாலும் புரியாத
ஒன்று அமைதியாய்
அமைந்திருந்தால் அகம்
தொட்டுப் புரியும் !

உன்னோடு நீ பேச உனக்குள்
ஒரு நிமிடம் மவுனமாய் பார் !

மௌனம் என்பது வெறும்
பேச்சற்ற நிலை மட்டுமல்ல
அது ஒரு மிகப்பெரிய கலை!

நெருக்கமானஉறவுகளுக்குள்
வார்த்தைகளே
தேவைப்படுவதில்லை!

ஒருவர் அருகில் அமர்ந்து
மவுனத்தை பகிர்ந்து
கொள்வது ஆயிரம்
வார்த்தைகளை விட அதிக
நெருக்கத்தை கொடுக்கும் !

மௌனம் நிலவும் போது தான்
மற்றவர்கள் உணர்வுகளையும்
இயற்கையின் இசையும்
நம்மால் கூர்ந்து கவனிக்க
முடியும் !

தியானத்தின் அடிப்படை
மவுனம்!

எண்ணங்கள் அற்ற



மவுன நிலையில்
தான் ஒரு மனிதன்
தன்னைத்தானே
முழுமையாக உணர
முடிகிறது!

**பெ.திருமுகம்**
மணமேல்குடி


999SITE
ARE YOU
LOOKING FOR JOB
JOB
Websites
CONTACT/WHATSAPP-7789951009


உலகளவில் தமிழர்கள் எதிர்பார்க்கும் ஒரே தரமான நம்பர் 1 இ பேப்பர்
தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
உள்ளூர் செய்திகள் முதல் வெளிநாட்டு செய்திகள் வரை துல்லியமாக தரும் ஒரே நாளிதழ்
ஆனந்த பாஸ்கர்
www.anandabhaskar.com
தினம் தோறும் உள்ளூர், உலக செய்திகள் வரை தரும் தரமான நாளிதழ்
பேப்பர்பாய்
www.paperboy.biz


ADVERTISE
WITH US
CONTACT US
9438610756


Call- 9438610756, 9337501889
News Portal Website Development
Only
Rs. 499/-
Just 499
www.just499.com


சம்பிரதாய தாம்பூல பாக்கு!
பூஜைக்கு உகந்த பாக்கு
AJANTHA
TRADITIONAL THAMBULA BETEL NUTS
அஜந்தா
பாக்கு
அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துகள்!
அஜந்தா பாக்குடன் உங்கள் தீபாவளியை கொண்டாடுங்கள்!
RAVIKUMAR AND COMPANY


WE'RE
HIRING!
A Passionate
Content Creator
94386 10756


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


6380139263
9952007563
9940010279
GERMANSILVER.RR
RATNARAJSILVER.COM
RAJ&RAJ
GERMANSILVER /
POOJA ITEMS RETURNGIFTS/
WEDDING GIFTS /HOME NEEDS



S.R
Call Drivers
Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49,E.H.Road,Cornation Nagar,K.Pet,Ch-21.


ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
PREDICTION & SOLUTIONS
MONEY
LOVE
HEALTH
FAMILY
BUSINESS
CAREER
MARRIAGE


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTRIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St.,
Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address
on Above Number
Josh Jobs Team Give u Daily Update of
Govt. as Well as Private Jobs


Euro Kids
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA
based on Harvard's Project Zero
Admissions Open
for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
TUV Nord Safety Certified
1,600+ Pre-schools
No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


ARG CONSTRUCTIONS
ARG
We Build Your
DREAM
HOME
Recently We Have Completed
Over 50+ Big Projects
SERVICES WE OFFER
Residential Construction
Commercial Construction
Customer Satisfaction
Contact Us
9710348377


Just 499
Visite Our Website
JUST499.COM
All type Of your
Website/App need
at one place
Small Business website
E - commerce Website
Corporate Website
Enterprise website
Mobile App Development
contact us at
9337501889


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY
Rs. 499
Website:
just499.com
Phone/WhatsApp:
7789951009
Email:
orderjust499@gmail.com

We Are Urgently Hiring!
**Marketing Manager**
Ad Sales (Print Media)

Package Rs. 4.8 LPA

Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai

Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.

**Key responsibilities for Marketing Manager**

- Minimum 5 years of experience in print media ad sales
- Proven experience in space selling
- Strong background in field sales and client acquisition
- Excellent communication and negotiation skills
- If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you

If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com

Call: 9337501889

---

Sanjay
Cell: 90032 64920

**Real Choice**

Retail & Wholesale Dealers In: Designer Sarees, Chudidhar, Laganga, Choli & Wedding Collection

#361, Mint Street, (Opp. New Jain Temple) Sowcarpet, Chennai-600 079.
Real Choice Chennai | Real Choice Chennai | Real Choice Chennai

---

**WANTED**
MATRIMONY & EVENT ORGANISER EXPERIENCED

Managers: Age 35 yrs to 60 yrs. ( Female)
Qualf: Any. Exp : 10 yrs + Any.
Salary: Rs.20,000 to 30,000

Telecaller -Staff: (Female): -4 Nos
Qualf: +2 & Above with computer Knowleldge, fluent in Tamil & English.
Salry : RS.10,000

Call/wapp: 9438610756

---

**Follow our WhatsApp Channel**

Scan this QR code using the CAMERA to view or follow our Channel

PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper
WhatsApp channel

---

AUTHORISED கருடவேகா INTERNATIONAL COURIER
GARUDAVEGA
A Brand of NexGen Logistics Pvt-Ltd

**International Courier Service**
ஆண் / பெண் வேலைக்கு தேவை
கல்வி தகுதி : 10th Std முதல்
Ganapathy, Thudiyalur.
88866 56211

---

**WANTED**
FEMALE TELECALLER

EXP : FRESH / EXPERIENCED
SKILL : GOOD COMMUNICATION SKILL
LANGUAGES: KANNADA, TAMIL, TELUGU, ENGLISH, HINDI...
AGE : 18 YRS -60 YRS
SALARY – 10,000 & ABOVE
LOCATION : TIRUVATIYUR, CHENNAI

FOR PADMA MEDIA HOUSE
PadmaMedia House
Call/Whatsapp 94386 10756

---

**Vilambaram**

WE HELP YOU TO BOOST YOUR BUSINESS

VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

---

**WANTED**

Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Acrylic Laminates (Decorative for Interiors) in Tamil Nadu

Job 1-SALES ENGINEER
Required Experience:
05-07 years in selling Metal Roofing for PEB Building in Tamil Nadu

ALP AEROFLEX INDIA PVT. LTD.
Contact details for Tamilnadu Location
Cell: 9884083322
Email: hari@alpoverseas.com

---

Just499
**TOURS & TRAVELS WEBSITE**
We Provide Complete Tours & Travels Website Solution

ONLY Rs. 499

Website: just499.com
WhatsApp: 7789951009
Phone: 7789951009
Email: orderjust499@gmail.com

---

**Wanted REPORTERS**

சட்டமன்ற தொகுதி வாரியாக நிருபர்கள் தேவை

PRESS
பேப்பர்பாய்
8122664699

---

தனியார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் பணிபுரிய ஆட்கள் தேவை.

Quality Line Inspector
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E

Final Quality Inspector
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

VMC Machine operator
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE

---

TAMIL TELECALLER JOB FOR
WORK FROM HOME
ALL OVER TAMILNADU
APPLY NOW
7789951009
PRINT MEDIA, DIGITAL MEDIA SOCIAL MEDIA
DAILY & MONTHLY SALARY
SALARY STARTING FROM
Rs. 10000/- onwards
Whatsapp: 7789951009

---

**UNIVERSAL ENGINEERS CHENNAI PVT LTD**

உடனடி வேலை வாய்ப்பு திங்கள் முதல் வெள்ளி வரை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை நேரில் வரவும்

அலுமினிய வெல்டர் - 5 நபர்கள்
டிக் (TIG) வெல்டர் - 5 நபர்கள்
ஹெல்பர்கள் - 25 நபர்கள்
பெண்டிங் மிஷின் ஆப்பரேட்டர்
Press Brake,Laser ஆப்பரேட்டர்
Turret ஆப்பரேட்டர்
5 - 6 வருடம் அனுபவம் உள்ளவர்கள் தேவை.

No. 72, North Phase, Ambattur Industrial Estate,Chennai - 600098
hr.executive@universalengineers.in
Ph: 8925928971

---

அருள்மிகு ஸ்ரீ மாலையம்மன் சமேத அருள்மிகு சுப்பிரமணியர் துணை
அருள்மிகு திருச்செந்தூர் முருகர் துணை

**ஸ்ரீ ஹரி ஜோதிட மையம்**


ஜாதகம், திருமணப் பொருத்தம், ஜாமக்கோள் , ஆரூடம் பார்க்கப்படும்.
தாம்பூல பிரசன்னம் , சோழி பிரசன்னம், அஷ்ட மங்கல பிரசன்னம்
மேலும் திருமணம், புத்திர பாக்கியம், கல்வி, தொழில் ஆகியவற்றில் ஏற்பட்ட தடைகளுக்கு ஜோதிடரீதியான தீர்வு செய்யப்படும்.

ஜோதிட நிபுணர் இராஜபாளையம் இராமமூர்த்தி MA Astro
81899 08040 / 93425 03572
harisudhan1968@gmail.com































PERAMBUR / MOOLAIKADI
THORAIPAKKAM
SG (Male)
Qul: 10th, Age blw 50yrs 8Hrs,
Take Home Salary Rs. 18,500
(26 Days) with 4 Off. + Food.
Ct: 9884991302 / 9094783384
9884991728
Wanted FIELD OFFICER
மூலக்கடை. 7010477903











# பல்சுவை களஞ்சியம்



# மீம்ஸ்



## கருப்பு உளுந்து

உங்களில் எத்தனை பேர் கருப்பு உளுந்து அடிக்கடி சமையலில் பயன்படுத்துகிறீர்கள்

பயன்படுத்துவது இல்லை என்றால் இந்த கருப்பு உளுந்து சட்னி அடிக்கடி செய்யவும்

தேவையான பொருட்கள்

ஐம்பது கிராம் கருப்பு உளுந்து
இரண்டு தக்காளி பழம்
மூணு வர மிளகாய்
ஆறு பல் பூண்டு
கறிவேப்பிலை சிறிதளவு
தேங்காய் துருவல்
இரண்டு ஸ்பூன் எண்ணெய்
உப்பு
பெருங்காயம்
கடுகு



செய்முறை

கடாயில் சிறிதளவு எண்ணெய் சேர்த்து கருப்பு உளுந்து சேர்த்து ஐந்து நிமிடம் வறுத்துக் கொள்ளவும்

கருப்பு உளுந்து வறுத்தவுடன் பூண்டு கருவேப்பிலை தக்காளி பழம் சேர்த்து தக்காளி பழம் மசியும் வரை வதக்கிக் கொள்ளவும்

தக்காளி பழம் வதங்கிய பின் தேங்காய் துருவல் தேவையான அளவு உப்பு சேர்த்து வதக்கிக்

இரண்டு நிமிடம் வதக்கி ஆறவிடவும்

ஆறியபின் மிக்ஸி ஜாரில் சேர்த்து நைசாக அரைத்து எடுத்துக் கொள்ளவும்

தாளிப்பதற்கு கடாயில் எண்ணெய் கடுகு பெருங்காயம் கருவேப்பிலை சேர்த்து தாளித்து கருப்பு சட்னியில் சேர்த்தால் கருப்ப வந்து சட்னி தயார்

## பருப்பும் புளியும் இல்லாமல் சாம்பாரா?



ஆம். முருங்கைக்காய், கேரட், முள்ளங்கி, குடைமிளகாய், கத்தரிக்காய், பரங்கிக்காய், சின்னவெங்காயம் இதுபோன்ற எந்தக் காய் போட்டு சாம்பார் செய்தாலும் சரி, எல்லா காய்களும் போட்டு கதம்ப சாம்பார் வைப்பதானாலும் சரி மிகவும் சுலபமாக செய்யலாம் வாங்க.

ஒரு பாணலியில் சிறிது எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, பெருங்காயம், வாசனைக்கு இரண்டு மிளகாய் வற்றல், கறிவேப்பிலை தாளித்து அதில் காய்கறிகளை போட்டு ஒரு முறை கலந்து கொடுங்கள்.

இதில் வெங்காயம், பூண்டு மற்றும் தக்காளி உங்கள் விருப்பம் போல் சேர்த்துக் கொள்ளலாம். காய்கறிகள் மூழ்கும் அளவிற்கு மேல் தண்ணீர் ஊற்றி, சாம்பார் தூள், உப்பு, பெருங்காயம் போட்டு நன்கு கலந்து கொடுத்து வேகவைக்கவும்.

அவ்வப்போது அடிப்பிடிக்காமல் கொஞ்சம் தண்ணீர் சேர்க்கலாம்.


ஒரு மிக்ஸி ஜாரில் ஒரு பத்தை பரங்கிக்காயை துண்டுகளாக்கி சேர்க்கவும். இதனுடனேயே ஒரு மாங்காயை துண்டுகளாக்கி சேர்க்கவும். ஒரு பழுத்த தக்காளியை விதை பகுதியில் காணப்படும் வெள்ளை பகுதியை எடுத்துவிட்டு சேர்க்கவும்.

இதனை ரொம்ப பேஸ்டாக இல்லாமல் அரைத்தெடுக்கவும்.

அரைத்த விழுதை கொதிக்கும் குழம்பில் மிக்ஸி ஜாரை அலம்பிய தண்ணீருடன் சேரத்துக் கரைத்து கொஞ்சம் கொஞ்சமாக சேர்க்கவும். ஒரு இரண்டு மூன்று நிமிடம் கொதித்த பின் இறக்கவும்.

சாம்பாரின் பதம் பார்த்துக் கொள்ளுங்கள். ரொம்ப கெட்டியாக இருந்தால் சிறிது தண்ணீர் சேர்க்கவும். தற்போது மணமும் ருசியும் நிறைந்த பருப்பும் புளியும் இல்லாத சாம்பார் ரெடி.

இட்லி, தோசை, பொங்கல், உப்புமா, சப்பாத்தி பூரி அனைத்திற்கும் ஏற்ற சைடு டிஷ் இது. சாதத்தில் பிசைந்து சாப்பிடும்போது அமிர்தமாக இருக்கும். நீங்களும் செஞ்சு அசத்துங்க.



### எந்த விரல் மூலம் விபூதி பூசவேண்டும்

விபூதியை எந்த விரல்களில் பூச வேண்டும், எந்த விரல்களில் பூசக்கூடாது. அவ்வாறு விரல்களின் மூலம் பூசினால் என்ன பலன் என்பதையும் நமது முன்னோர்கள் அழகாக கூறியுள்ளனர்.

விபூதியை எடுக்க சில விரல்களை பயன் படுத்தும் போதும் தீமையும், சில விரல்களை பயன்படுத்தும்போது அதீத நன்மைகளும் ஏற்படும். ஆகவே விபூதியை எடுக்கும்போது, கீழே குறிப்பி ட்டுள்ள வரிகளில் உள்ள முறைகளை பயன்படுத்தி, மிகவும் கவனமாக எடுத்து அணியவேண்டும்.

கட்டை விரல்: கட்டை விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் தீராத வியாதி வரும்.

ஆள் காட்டி விரல்: ஆள் காட்டி விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் பொருட் கள் நாசம்.

நடுவிரல்: நடுவிரலால் விபூதியை தொட்டு இட்டுக்கொண்டால் அணிந்தா ல் நிம்மதியின்மை.

மோதிர விரல்: மோதிர விரலால் விபூதியை தொட்டுக்கொண்டு அணிந்தால் மகிழ்ச்சியான வாழ்க்கை.

சுண்டு விரல்: சுண்டு விரலால் விபூதியை தொட்டு அணிந்தால் கிரகதோஷம் ஏற்படும்.

மோதிர விரல் கட்டை விரல்

மோதிர விரலாலும், கட்டை விரலாலும் சேர்த்து விபூதியை எடுத்து மோதிர விர லால் விபூதியை இட்டுக் கொணடால் உலகமே வசப்படும். எடுக்கும் முயற்சி வெற்றி பெரும்.






## விடுகதை

| | |
|---|---|
| நடக்கவும் மாட்டேன், நகராமல் இருக்கவும் மாட்டேன் நான் யார்? | மணிக்கூடு |
| மழையோடு வருகின்ற மஞ்சள் புறாவை வெட்டினால் ஒரு சொட்டு இரத்தம் வராது. அது என்ன? | ஈசல் |
| நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன். மறுபடி நடந்தான். அவன் யார்? | பென்சில் |
| விரல் இல்லாமலே ஒரு கை. அது என்ன? | தும்பிக்கை |
| வெள்ளத்தில் போகாது, வெந்தணலில் வேகாது. கொள்ளையடிக்க முடியாது, கொடுத்தாலும் குறையாது. அது என்ன? | கல்வி |



## ஜோக்ஸ்

வீட்டுக்கு வந்த விருந்தாளியிடம்
பெண்: இலையை மடிக்க வேண்டாம்.
விருந்தினர்: ஏன் மடிக்க வேண்டான்னு சொல்றீங்க

பெண்: அடுத்து வர்றவங்க சாப்பிடத் தான்.

விருந்தினர்: ஐய்யோ! அவங்க கோவிச்சுக்க மாட்டாங்களா?
பெண்: இப்போ நீங்க கோவிச்சுக்கிட்டீங்களா! என்ன?
விருந்தினர்: ???

------------------------

எதிர்பதம்
Subramaniyan "Saw"my-யின் எதிர்பதம் என்ன?

Subramaniyan "did not" see me

------------------------

"இத்தனை நாளா கண்ட பசங்களோட சுத்திட்டு இருந்த நம்ம பொண்ணு இப்ப பரவாயில்லீங்க"
"எப்படி சொல்ற?"

"பாருங்க! குழந்தைங்க டிரஸ் தைச்சிட்டுருக்கா பார்த்தீங்களா?"
"நாசமா போச்சு, அவள முதல்ல லேடி டாக்டர்கிட்ட கூட்டிப்போ"



------------------------

காதலன் : "டியர் என்ன இவ்வளவு வருஷமா காதலிச்சுட்டு கல்யாணம் செஞ்சுக்க மறுக்கிறியே, ஏன் உன் மனசுல வேற யாராவது இருக்காங்களா?"
காதலி : "ஆமாம் டியர், எனக்குன்னு ஒருத்தர் பொறக்காமலா இருப்பாங்க?"
காதலி : "ஏன் டியர் நீங்க என்ன மட்டும்தான் லவ் பண்றீங்களா?"
காதலன் : "நிச்சயமா நீதான், ஏன்னா நேத்திக்குதான் லிஸ்ட்ட செக் பண்ணினேன்"

------------------------

மனைவி : "உங்களுக்கு ஞாபகம் இருக்கா, நீங்க எங்கிட்ட முதன் முதல்ல ‘ஐ லவ் யூ’ சொன்னப்ப, நான் திக்கு முக்காடிப்போய் ஒரு மணி நேரம் பேசாமலேயே இருந்தேன்"
கணவன் : "பின்ன ஞாபகம் இருக்காதா, அந்த 1 மணி நேரந்தான் என் வாழ்க்கையிலேயே நான் மகிழ்ச்சியா இருந்தேன்"

------------------------

ஆண் : "ஐ லவ் யூ டியர், உனக்காக என் உயிரக்கூட தயாராக இருக்கேன்"
பெண் : எப்ப? எப்ப? ? ? ?....

------------------------

டேட்டிங்போது பேச்சை இப்படி ஆரம்பிக்கலாமே. . .
பையன் : "உனக்கு கீரைப் பிடிக்குமா?"
பெண் : "ஊஹூம். . ."
பையன் : உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருக்காங்களா?
பெண் : ஊஹூம். . .
பையன் : "சப்போஸ், உனக்கு அண்ணன், தம்பி யாராவது இருந்தா அவங்களுக்கு கீரை பிடிக்குமா?"
பெண் : ?!?!?!



# சமையல் அறை ஸ்பெஷல்



## பயனுள்ள சமையல் டிப்ஸ் உங்களுக்காக..



* வேகவைத்த கேரட் அல்லது பரங்கிக்காய், பாதி வறுத்த துவரம் பருப்பு, நான்கு பச்சை மிளகாய், வெங்காயம், உப்பு ஆகியவற்றை சேர்த்து சட்னி தயாரித்தால் ருசி அபாரமாக இருக்கும்.

* பழைய சாதத்தை மிக்சியில் அரைத்துக்கொள்ளவும். அதனுடன் ரவை, மைதா கலந்து கடுகு, மிளகாய், வெங்காயம் தாளிதம் செய்து வார்க்கும் தோசை புது மாதிரியாக இருக்கும்.

* கோதுமை மாவு ஒரு கப், மைதா மாவு அரை கப், வறுத்த உளுந்தம்மாவு ஒரு ஸ்பூன், உப்பு, சீரகம், பெருங்காயம் சேர்த்து சீடை செய்தால் வெடிக்காது. எண்ணெய்யும் குடிக்காது.

* கத்தரிக்காய். வெண்டைக்காய், பீன்ஸ் மற்றும் அவரைக்காய் என எந்த பொரியலுக்கும் சிறிது சீரகப்பொடியை பச்சையாக தூவி இறக்கி விடுங்கள். பொரியல் கமகமவென மணமுடன் இருக்கும். தேங்காய் சேர்க்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

* இஞ்சியை மிக்சியில் அரைத்து சாறு எடுத்து வடிகட்டி கொள்ளவும். புளியைக் கரைத்து உப்பு சேர்த்து கொதிக்க வைத்து அதில் இஞ்சி சாற்றை கலந்து சிறிது நேரம் கொதித்ததும் இறக்கிவிடவும். ஊறுகாய் போல ருசியாக இருப்பதோடு ஜீரண சக்தியையும் அதிகரிக்கும்.

* சேனைக்கிழங்கை வேக வைக்கும் முன்பு வெறும் பாத்திரத்தை அடுப்பில் வைத்து சிறிது உப்புப்போட்டு வெடிக்கும் வரை வறுக்கவும். பிறகு நீர் ஊற்றி கொதி வந்ததும் கிழங்கை போடவும். விரைவில் பதமாக வெந்து, சுவையாகவும் இருக்கும்.

*வடித்த சுடு கஞ்சியில் நறுக்கிய வாழைப்பூவை போட்டு விட்டால் வாழைப்பூவில் உள்ள பால் கஞ்சியில் கலந்து விடும். பிறகு பூவை சுத்தமாக அலசி எடுத்துக்கொள்ளலாம்.

* காய்கறிகள் லேசாக வாடிப்போய் இருந்தால் ஒரு பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அதில் சிறிதளவு எலுமிச்சைச் சாறு கலந்திடுங்கள். அதில் காய்கறிகளை முழுதாக ஒரு மணி நேரம் முக்கி வைத்துவிட்டு எடுத்தால் 'பிரஷ்' ஆகி விடும்.

* வாழைத்தண்டை சிறிதாக நறுக்கி ஒரு கப் அளவுக்கு எடுத்துக் கொள்ளுங்கள். கடுகை இடித்து சேர்த்து புளிக்காத தயிரும் கலந்து சாலட்டாக மாற்றி சுவைக்கலாம்.

* 50 கிராம் புதினாவை காய வைத்து இடித்து தூளாக்கி அதனை 10 கிலோ அரிசியில் தூவி வையுங்கள். வண்டு விழாது. சோற்றுக்கும் நல்ல சுவை கிடைக்கும்.

* தேங்காய் பால் பிழிந்தெடுத்த பின்பு அந்த துருவலை வைத்து துவையல் அரைக்கலாம். காய்ந்த மிளகாய், பெருங்காயம், உளுந்தம் பருப்பு போன்றவைகளை வறுத்து புளியும் சேர்த்து அரைக்க வேண்டும். உப்பும், கறிவேப்பிலையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

* புட்டு வேக வைத்த பின்பு, குழாயில் இருந்து அதை எளிதாக எடுக்க வேண்டுமானால் முதலிலே குழாயின் உள்ளே சிறிதளவு நெய்யை சேர்த்து விடுங்கள். புட்டு அதிக ருசியாகவும் இருக்கும்.

* சூடான பானங்களை கண்ணாடி டம்ளர்களில் ஊற்றுவதற்கு முன்னால் டம்ளரின் அடியில் ஒரு துணியை போடுங்கள். எவ்வளவு சூடான திரவத்தை ஊற்றினாலும் கண்ணாடி டம்ளர் உடையாது.

## கொள்ளு ரசம் வைப்பது எப்படி?



'என்ன கொழுப்பு அதிகமாயிடுச்சா?' என்று கேட்டால், எல்லோருக்கும் கோபம்தான் வரும். கொழுப்பு அதிகரிப்பதுதான் இன்றைக்கு பல்வேறு உடல் நலக் குறைபாடுகள் வருவதற்குக் காரணம். குறிப்பாக உடல் பருமன், மாரடைப்பு உள்ளிட்ட இதய நோய்கள் வருவதற்கு, கொலஸ்ட்ரால் அளவு அதிகரிப்பதுதான் முக்கியக் காரணம். ஆரோக்கியமற்ற உணவு முறைகளே முக்கிய காரணமாகும். எனவே கொழுப்பை குறைக்கும் சிறுதானிய கொள்ளு சாதம் செய்வது எப்படி? என்பதை பற்றி இப்போது நாம் காண்போம் வாங்க..!

**சிறுதானிய கொள்ளு சாதம் தேவையான பொருட்கள்:**

வரகரிசி/ சாமை/குதிரைவாலி 100 கிராம்
கொள்ளு 50 கிராம்
பூண்டு 6 பல்
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு

வறுத்து பொடி செய்து கொள்ள:
சீரகம் 5 கிராம்
கடலை பருப்பு 20 கிராம்
வெந்தயம் 5 கிராம்
மிளகு (black pepper)- 5 கிராம்
கொத்தமல்லி 30 கிராம்
காய்ந்த மிளகாய் 3

தாளிக்க :
கடுகு 5 கிராம்
கருவேப்பிலை தேவையான அளவு
பெருங்காய தூள் சிறிதளவு

சிறுதானிய கொள்ளு சாதம் செய்முறை:

கொள்ளு சாதம் செய்வது எப்படி?
கொள்ளு / வரகரிசி / சாமை அரிசி / குதிரைவாலி அரிசியை நன்கு கழுவி உதிரியாக வேகவைத்துக் கொள்ளவும்.
பூண்டை பொடியாக நறுக்கி கொள்ளவும்.

கொள்ளு சாதம் செய்வது எப்படி?
பின்பு வறுத்த பொருட்களை மிக்சியில் போட்டு நன்றாக அரைத்து பொடி செய்து கொள்ளவும்.
அதன் பிறகு ஒரு வாணலியில் எண்ணெய் விட்டு தாளிக்க கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை போட்டு தாளித்து கொள்ளவும்.

கொள்ளு சாதம் செய்வது எப்படி?
பின்பு நறுக்கிய பூண்டை வதக்கி அவற்றுடன் வேகவைத்துள்ள கொள்ளு மற்றும் பொடி ஆகியவற்றை சேர்த்து நன்றாக வேகவைத்து கொள்ளவும்.

கொள்ளு சாதம் செய்வது எப்படி?
பின்பு வேகவைத்துள்ள சாதத்துடன் இந்த கலவையை சேர்த்து நன்றாக கிளறிவிடவும்.
இதை அனைவரும் விரும்பி உண்ணலாம், ஆரோக்கியமான மற்றும் சுவையான டேஸ்டான சிறுதானிய கொள்ளு சோறு தயார்.

கொள்ளு ரசம் செய்முறை / அதன் பிறகு இடித்து வைத்துள்ள சீரகம், மிளகு மற்றும் தட்டி வைத்துள்ள பூண்டு மற்றும் தேவையான அளவு உப்பு ஆகியவற்றை சேர்க்கவும். நுரையாக வரும் போது கொஞ்சம் கொத்தமல்லி இலையை தூவினால் சுவையான கொள்ளு ரசம் தயார்.

இந்த சுவையான கொள்ளு ரசம் கொலஸ்ட்ரால் குறைய மிகவும் சிறந்த உணவாக உள்ளதால். கொலஸ்ட்ரால் உள்ளவர்கள் அதிகளவு கொள்ளு ரசம் சாப்பிடுவது மிகவும் நல்லது.

## அரிசி வடகம் செய்வது எப்படி?

அரிசி வடகத்திற்கு சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை பல ரசிகர்கள் கூட்டம் உண்டு. பொதுவாக வீட்டில் உள்ள பெண்மணிகள் கோடைகாலங்களில் மட்டுமே இந்த அரிசி வடகத்தை தயார் செய்து பத்திரப்படுத்தி வைத்து, பின் தேவைப்படும்போதேல்லாம் அந்த அரிசி வடகத்தை உணவுகளுக்கு அவசர தொட்டுக்கையாக பொரித்து வைப்பார்கள். இந்த அரிசி வடக்கத்தின் சுவைக்கு இணை வேறு எதுவும் இருக்காது.


சரி மிக எளிமையான முறையில் வீட்டிலேயே அரிசி வடகம் செய்வது எப்படி (Rice vadagam) என்று இந்த பதிவில் நாம் தெரிந்து கொள்வோம் வாங்க..

**அரிசி வடகம் செய்ய தேவையான பொருட்கள்:-**

புழுங்கல் அரிசி 2 டம்ளர்
ஜவ்வரிசி 50 கிராம்
பச்சை மிளகாய் 5 (பேஸ்ட்டு போல் அரைத்து கொள்ளுங்கள்)
சீரகம் 1 ஸ்பூன்
பெருங்காய தூள் 1 ஸ்பூன்
உப்பு தேவையான அளவு

ரேஷன் அரிசியில் வத்தல் போடுவது எப்படி?

அரிசி வடகம் செய்வது எப்படி?
முதலில் 2 டம்ளர் புழுங்கல் அரிசி மற்றும் 50 கிராம் ஜவ்வரிசி இவை இரண்டையும் ஒன்றாக சேர்த்து தண்ணீர் ஊற்றி 2 மணி நேரம் ஊறவைக்க வேண்டும்.
பின் ஊறவைத்த அரிசியை சுத்தமாக கழுவி கிரைண்டரில் சேர்த்து மைபோல் அரைதேடுக்க வேண்டும். மாவை அரைத்த பின் கிரைண்டரை கழுவிய தண்ணீரை இரண்டு கிளாஸ் அளவு எடுத்து அரைத்த மாவில் ஊற்றி கிளறிவிட வேண்டும்.



அரிசி கூழ் வடகம் செய்வது எப்படி?
பின் அடுப்பில் ஒரு கனமான பாத்திரத்தை வைத்து அவற்றில் எட்டு டம்ளர் தண்ணீர் ஊற்றி கொதிக்க வைக்கவும். தண்ணீர் கொதித்து வர ஆரம்பிக்கும் பொழுது ஐந்து பச்சை மிளகாவை அரைத்து இந்த நீரில் ஊற்ற வேண்டும்.
பிறகு ஒரு ஸ்பூன் சீரகம், ஒரு ஸ்பூன் பெருங்காயம் தூள் மற்றும் உப்பு தேவையான அளவு ஆகியவற்றை சேர்த்து கிளற வேண்டும்.
தண்ணீர் ஓரளவு சூடாக்கி, அரைத்த அரிசி மாவை கொஞ்சம் கொஞ்சமாக இவற்றில் சேர்த்து இடைவேளை இல்லாமல் கிளறி கொண்டே இருக்க வேண்டும். கிளறுவதை நிறுத்தினால் மாவு கட்டி பிடித்து கொள்ளும் எனவே இடைவிடாது மாவை 10 நிமிடங்கள் வரை கிளற வேண்டும்.
வடகம் மாவு 10 நிமிடத்தில் வெந்து விடும் எனவே 10 நிமிடங்கள் கழித்து மாவை வெந்துவிட்டதா என்பதை பரிசோதனை செய்து பாருங்கள். அதாவது தங்கள் கையை தண்ணீரில் நனைத்து வடகம் மாவை தொட்டு பாருங்கள், மாவு கைகளில் ஒட்டாமல் இருந்தால் மாவு நன்றாக வெந்துவிட்டது என்று அர்த்தம், கைகளில் மாவு ஒட்டினால் சிறிது நேரம் மாவை இடைவிடாது கிளறி பின் மாவை அடுப்பில் இருந்து இறக்கி அகலமான பாத்திரத்தில் கொட்டி சிறிது நேரம் ஆறவைக்கவும்.

மாவு நன்றாக ஆறியதும் ஒரு காட்டன் துணியை வெயில் அதிகம் அடிக்கும் இடத்தில் நன்றாக விரித்து கொள்ளுங்கள். பின் மாவை முறுக்கு அச்சியில் வைத்து துணியில் நேராக பிழிந்து விட வேண்டும். இவ்வாறு வேகவைத்த அனைத்து மாவையும் பிழிந்து கொள்ளுங்கள். பின் ஒரு நாள் முழுவதும் வெயிலில் நன்றாக காயவைக்க வேண்டும்.

பின் ஒரு அகன்ற தட்டில் உரித்த வடகத்தை பரவலாக கொட்டி இரண்டு நாட்கள் வெயிலும் காயவைத்து எடுத்தால் அரிசி வடகம் தயார். நன்றாக காய்ந்த வத்தலை ஒரு சுத்தமான டப்பாவில் கொட்டி காற்று புகாத அளவிற்கு நன்றாக மூடி வைத்தால், இந்த வடகத்தை ஒரு வருடம் வரை வைத்து பயன்படுத்தலாம். அவ்வளவுதான் செய்முறை முடிந்தது மேல் கூறப்பட்டுள்ள செய்முறை வைக்கலாம் படி அரிசி வடகம் செய்து பாருங்கள் மிகவும் சுவையாக இருக்கும்.


இந்த பகுதியில்
உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699


## கொத்தவரங்காய் மருத்துவப் பயன்கள்

கர்ப்பிணி பெண்கள் இதை உண்பதன் மூலம் அவர்களது குழந்தை கருவில் நல்ல ஆரோக்கியத்துடன் உருவாகிறது. பிறப்பினால் ஏற்படும் பிரச்சனைகளை இதன் மருத்துவ குணம் குறைக்கிறது. ஆகையால் இதை நிச்சயம் கர்ப்பிணி பெண்களுக்கு கொடுக்க வேண்டும்.

கலோரி அளவுகளில் மிக குறைந்த உணவாக இருந்தாலும், வைட்டமின்களையும் மற்றும் தாதுக்களையும் அதிகமாக கொண்டிருக்கும் உணவு இது. ஆகையால் எடையை குறைக்க விரும்புபவர்கள் இதை ஒரு உணவாக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இரத்தச் சோகை இருப்பவர்கள் இதை சாப்பிடும் போது அதிக இரத்தம் சுரக்கும். இது இரத்த பற்றாக்குறையை நீக்கி உடலை நல்ல நிலைமைக்கு கொண்டு வருகிறது.

இதில் உள்ள நார்ச்சத்து உடம்பில் உள்ள தேவையற்ற கொலஸ்ட்ராலைக் குறைக்க உதவுகின்றது. மேலும் அதிக அளவில் உள்ள புரதச்சத்துகள், கார்போஹைட்ரேட்டுகள், தாதுக்கள் மற்றும் கரையக் கூடிய நார்ச்சத்துகளை கொண்டிருப்பதால் கொத்தவரங்காய் நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகின்றது.



கொத்தவரங்காயை உணவில் அதிகம் சேர்த்து வந்தால், அது உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். சருமப் பிரச்சனைகளுக்கு மிகுந்த உதவி செய்கிறது. இதில் உள்ள ஆன்டி-ஆக்ஸிடன்ட் சேதமடைந்த திசுக்களை சருமத்திலிருந்து நீக்க உதவுகின்றன. இதனால் கரும்புள்ளிகள், பருக்கள் போன்றவை தடுக்கப்படும்.

## அவரைக்காயின் குணங்கள்

அவரைக்காய் பிஞ்சை வாரம் இருமுறை சமைத்து உண்டுவந்தால் பித்தம் குறையும். அவரைக்காயை அதிகம் உண்டுவந்தால் வெள்ளெழுத்து குறைபாடுகள் நீங்கும்.

இரத்த நாளங்களில் உள்ள கொழுப்பைக் குறைக்க உதவுவதால், இதனை இரத்த அழுத்தம், இதயநோய் உள்ளவர்கள் அதிகம் சேர்த்துக்கொள்வது நல்லது.


அவரைப் பிஞ்சில் துவர்ப்புச் சுவை உள்ளதால் இது இரத்தத்தைச் சுத்தப்படுத்தும்.

சர்க்கரை நோய் உள்ளவர்கள் அவரைக்காயை அதிகம் சேர்த்துக்கொண்டால், நீரிழிவு நோயால் உண்டாகும் மயக்கம், தலைச்சுற்றல், கை, கால் மரத்துப்போதல் போன்றவை சரியாகும்.




A s Govinda rajan
Kodambakkam, Chennai

## சரவண புறப்பாடு



பார்த்த சாரரதி பெருமாள் சரவண புறப்பாடு.

## திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா நுழைவு வாயில்




கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலையின் வெள்ளி விழா நுழைவு வாயில் வருகிற 24ம்தேதி முதலமைச்சர் ஸ்டாலின் திறந்துவைக்கிறார்.இந்த நிலையில் இறுதிக்கட்ட பணிகளை அமைச்சர் மனோதங்கராஜ், கலெக்டர் அழகுமீனா ஆய்வு செய்தனர்.

## திருவோணம் சிறப்பு வழிபாடு



காரைக்கால் மாவட்டம் கோட்டுச்சேரியில் எழுந்தருளியுள்ள அருள்மிகு வரதராஜபெருமாளுக்கு திருவோண நட்சத்திரத்தை முன்னிட்டு சிறப்பு திருமஞ்சனம் மற்றும் மகா தீபாராதனையும் நடைபெற்றது பக்தர்களுக்கு தீர்த்தம் சடாரி துளசி மற்றும் இதர பிரசாதங்கள் வழங்கப்பட்டன.

தகவல்
நாராயணன்.J
கோட்டுப் சேரி




## குறள்ஒப்பித்தல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கலெக்டர் லட்சுமி பவ்யா பரிசு, பாராட்டு



நீலகிரி ஆட்சியர் அலுவலகத்தில் குறள் வார விழாவில் பொதுமக்களுக்கான குறள்ஒப்பித்தல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கலெக்டர் லட்சுமி பவ்யா பரிசு, பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

## வரவு செலவுத் திட்ட அறிக்கை



கோவை மாநகராட்சி சிறப்புக் கூட்டத்தில் நேற்று 2026-2027ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையை மேயர் ரங்கநாயகி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன் ஆகியோர் வெளியிட்டனர்.

## ஆசிரியர்களுடன் கவர்னர் மாளிகையில் வளமான சுற்றுலா




சென்னை ஆதித்யா பப்ளிக் பள்ளி மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் கவர்னர் மாளிகையில் வளமான சுற்றுலா மேற்கொண்டு, அதன் அமைதி மற்றும் பசுமையான சூழலையும் பார்வையிட்டனர்.

## 40-வது பட்டமளிப்பு விழா



கோவை பாரதியார் பல்கலைக்கழக 40-வது பட்டமளிப்பு விழாவில் ஆளுநர் ரவி பங்கேற்றார்.

## அதிமுக கவுன்சிலர்கள் வெளிநடப்பு



கோவை மாநகராட்சி பட்ஜெட்டில் புதிய திட்டங்கள் இல்லை என்று கூறி அதிமுக கவுன்சிலர்கள் வெளிநடப்பு செய்தனர்.

## துணை முதல்வர் உதயநிதிக்கு திமுகவினர் உற்சாக வரவேற்பு



புதுக்கோட்டை மாவட்டத்தில் நேற்று அரசு விழாவில் பங்கேற்பதற்காக வந்த துணை முதல்வர் உதயநிதிக்கு திமுகவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

## சசிகலா ஆலோசனை



அடுத்தகட்ட அரசியல் பணிகள் குறித்து தனது ஆதரவாளர்களுடன் சசிகலா நேற்று ஆலோசனை நடத்தினார்.

## 'வெல்லும் சிறுபான்மையினர் உரிமைக்குரல்' கருத்துக்கேட்பு கூட்டம்




தி.மு.க சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில், நேற்று சென்னையில் நடந்த 'வெல்லும் சிறுபான்மையினர் உரிமைக்குரல்' கருத்துக்கேட்பு கூட்டத்தில், சிறுபான்மை அமைப்பு நிர்வாகிகளிடம் கோரிக்கைகளை கனிமொழி எம்.பி.தலைமையிலான திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவினர் கேட்டறிந்தனர்.

## கலைத்திருவிழா போட்டி



மாவட்ட கலைத்திருவிழா போட்டியில் வெற்றி பெற்ற கோவில்பட்டி நாடார் நடுநிலைப்பள்ளி மாணவ மாணவிகளை ஆசிரியர்கள் பாராட்டினர்.

## ஆசிரியர்களுக்கு சிறந்த ஆசிரியர் விருது



கோவை நேரு கல்வி குழுமம் சார்பில் சிறந்த ஆசிரியர் விருது. 2026 வழங்கும் விழா நடந்தது. 50ஆசிரியர்களுக்கு சிறந்த ஆசிரியர் விருதும்,3முதல்வர்களுக்கு சிறந்த முதல்வர் விருதும், பிஎஸ்ஜி பொது பள்ளியின் முதல்வர் கிரிஷ் ஈஸ்வரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பட்டது.

## விழிப்புணர்வு வாகனம்



கடலூரில், போதைப் பழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு வாகனத்தை கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

## மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினி



சென்னை ஆர்.கே.நகர் தொகுதியில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகளை எபனேசர் எம்எல்ஏ வழங்கினார்.

## தேரோட்டம்



ராமேசுவரம் ராமநாதசுவாமி கோயிலில் மாசி மகாசிவராத்திரி திருவிழா 9ம் நாளான நேற்று தேரோட்டம் நடந்தது.

## கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது



பழம்பெரும் நடிகை எம்.என்.ராஜம், மூத்த திரைப்பட இயக்குநர் எஸ்.பி.முத்துராமன் ஆகியோருக்கு கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினை முதலமைச்சர் ஸ்டாலின் வழங்கினார்.

## புதிய குடியிருப்புகளுக்கன சாவி



சிவகங்கை, தாயமங்கலம் ஊராட்சியில், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாமில் முதல்வர் திறந்து வைத்த 52 புதிய குடியிருப்புகளுக்கன சாவிகளை அமைச்சர் பெரியகருப்பன், தமிழரசி எம்எல்ஏ வழங்கினர்.

## உயர்மட்டக் குழு




மத்திய - மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுகளை மேம்படுத்திட உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் குழு தனது அறிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் நேற்று சமர்ப்பித்தனர்.

## புதிய பேருந்துகள் இயக்கம்




தாராபுரம் நகராட்சி பேருந்து நிலையத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகத்தின் சார்பில் புதிய பேருந்துகள் மற்றும் புதிய வழித்தடங்களில் இயக்கும் நகரப் பேருந்துகளை அமைச்சர்கள் சாமிநாதன், கயல்விழி கொடியசைத்து துவக்கி வைத்தனர். ஈரோடு எம்.பி., பிரகாஷ் உள்பட பலர் உடன் உள்ளனர்.

## கனிமொழியிடம் மதிமுக எம்பி துரை வைகோ கோரிக்கை



திருச்சியை 2-ம் தலைநகராக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை கனிமொழியிடம் மதிமுக எம்பி துரை வைகோ வழங்கினார்.

## மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு



ராஜபாளையம் தொகுதியில் நடந்த மாரத்தான் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள்,வெற்றிகோப்பை, சான்றிதழ்களை தங்கபாண்டியன் எம்எல்ஏ வழங்கினார்.

# சுற்றுலா: கண்ணூரில் பார்த்து ரசிக்க வேண்டிய 6 இடங்கள்!

1.செயின்ட் ஏஞ்சலோ கோட்டை

இது கண்ணூர்க் கோட்டை என்றும் அழைக்கப்படுகிறது. கண்ணூரில் அரபிக்கடலைப் பார்த்தவாறு அமைந்துள்ள ஒரு வரலாற்று சிறப்புமிக்க கட்டிடம் ஆகும். இது 1505 ல் போர்த்துக்கீசியர்களால் கட்டப்பட்டது. இது பாதுகாப்பிற்காக வடிவமைக்கப்பட்ட வலுவான சுவர்களைக் கொண்டுள்ளது. ஐரோப்பிய மற்றும் இந்தியக் கட்டடக்கலை பாணிகளின் கலவைகளில் அமைந்துள்ளது. காலனித்துவ வரலாற்றில் இந்தக் கோட்டை போர்த்துக்கீசியர்கள், டச்சுக்காரர்கள் மற்றும் பிரிட்டிஷார்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.





2. பய்யம்பலம் கடற்கரை

தங்க நிற மணலுக்கு பெயர் பெற்ற அழகிய கடற்கரை இது. இப்பகுதியில் உள்ள மிக நீளமான கடற்கரைகளில் ஒன்றாகும். நடைப்பயணத்திற்கு மற்றும் ஓய்வெடுப்பதற்கும் ஏற்ற இடமாக இருக்கிறது. கடற்கரையில் பசுமையான பனை மரங்கள் காணப்படுகின்றன. சூரியன் மறையும் காட்சிகளை சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் கண்டு களிக்கின்றனர். இங்கு சூரியக் குளியல் மற்றும் நீச்சல் பிரபலமாக இருக்கிறது.

3. முழப்பிலங்காட் டிரைவ்-இன் பீச்

இது இந்தியாவின் மிக நீளமான 'டிரைவ் இன் பீச்' ஆகும். அரபிக்கடலில் நாலு கிலோ மீட்டருக்கு மேல் நீண்டுள்ளது. இதன் தனித்துவமான அம்சம் என்னவென்றால், மக்கள் தங்களுடைய வாகனங்களை கடலை ஒட்டிய மணல் வெளியில் நேரடியாக ஓட்டிச்செல்லலாம். இதனால் நிறைய பயணிகளையும் குடும்பத்தினரையும் ஈர்க்கிறது. கடல் காற்றை ரசிக்க, ஓய்வெடுக்க இது வசீகரமான இடம் ஆகும்.



4. முத்தப்பன் கோயில்

கண்ணூர் அருகே உள்ள பரசீனிக்கடவு என்ற அழகிய கிராமத்தில் அமைந்துள்ளது முத்தப்பன் கோயில். இது நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் குறிக்கும் ஒரு தனித்துவமான நாட்டுப்புற தெய்வமான முத்தப்பன் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயம் ஆகும். இந்த ஆலயத்தில் உள்ளூர் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் மீன் மற்றும் கள் ஆகியவை புனிதப் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. பாரம்பரியமான நிகழ்வுகளுக்கு இந்தக்கோயில் புகழ்பெற்றது.

5. அரக்கால் அருங்காட்சியகம்

இந்த பகுதியில் உள்ள ஒரே இஸ்லாமிய அரச குடும்பமான அரக்கால் குடும்பத்திற்காக அருங்காட்சியகம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. வரலாற்று சிறப்புமிக்க இந்த அரண்மனையில் அமைந்துள்ள அருங்காட்சியகம், குடும்பத்தின் பாரம்பரிய மற்றும் உள்ளூர் வரலாற்றின் பங்களிப்பைப் பிரதிபலிக்கும் அரச நினைவுச் சின்னங்கள், ஆயுதங்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் உள்ளிட்ட ஏராளமான கலைப்பொருட்களைக் காட்சிப்படுத்துகிறது. இந்த அருங்காட்சியகம் அரக்கல் இராச்சியத்தின் கலாச்சாரம், மரபுகள் மற்றும் கடல்சார் வலிமை பற்றிய நுண்ணறிவை வழங்குகிறது. இது கடலோர வர்த்தகத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது.

6. ஆரளம் வனவிலங்கு சரணாலயம்

மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் 55 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்திருக்கும் ஒரு பசுமையான புகலிடம். இது பல்வேறு வகையான அரிய விலங்குகள் மற்றும் உயிரினங்களை கொண்டது. பசுமையான காடுகள், புல்வெளிகள், மலையேற்ற பாதைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ள இந்த சரணாலயம் இயற்கை ஆர்வலர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற இடமாகும். இப்பகுதியில் வசிக்கும் ஏராளமான பறவை இனங்களை கண்டு பறவை பார்வையாளர்கள் மகிழ்ச்சியடையலாம். ஆரளம் வனவிலங்கு சரணாலயம் இயற்கை அழகையும், ஆரோக்கியமான சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்துகிறது.

## வேலைவாய்ப்பு கார்னர்

### வனத்துறையில் அதிகாரி வாய்ப்பு

வனத்துறை அதிகாரி (ஐ.எப்.எஸ்.,) பணியில் 80 காலியிடங்களுக்கு யு.பி.எஸ்.சி., அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

கல்வித்தகுதி: அக்ரிகல்சர், வனம், கால்நடை, தாவரவியல், வேதியியல், கணிதம், இயற்பியல், புள்ளியியல், விலங்கியல் பிரிவில் பட்டப்படிப்பு.

வயது: 21-32 (1.7.2026ன் படி)

தேர்ச்சி முறை: பிரிலிமினரி, மெயின் தேர்வு, நேர்முகத்தேர்வு

தேர்வு மையம்: சென்னை, மதுரை, கோவை, திருச்சி, வேலூர்.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 24.2.2026 மாலை 6:00 மணி.

விவரங்களுக்கு: upsc.gov.in

### ஐ.ஏ.எஸ்., அதிகாரியாக விருப்பமா...

மத்திய அரசின் சிவில் சர்வீஸ் பணியிடங்களுக்கு தேர்வு அறிவிப்பை யு.பி.எஸ்.சி., வெளியிட்டுள்ளது.

காலியிடம்: ஐ.ஏ.எஸ்.,/ஐ.எப்.எஸ்., / ஐ.பி.எஸ்., / ஐ.ஏ.ஏ.எஸ்., / ஐ.சி.ஏ.எஸ்., / ஐ.ஐ.எஸ்., / ஐ.ஆர்.எஸ்., / ஐ.டி.எஸ்., உட்பட 19 பதவிகளில் மொத்தம் 933 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு

வயது: 21-32 (1.7.2026ன் படி)

எத்தனை முறை: பொது 6, ஓ.பி.சி., 9 முறைக்கு மேல் இத்தேர்வை எழுத முடியாது. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு இதில் வரம்பு இல்லை.

தேர்ச்சி முறை: பிரிலிமினரி, மெயின் தேர்வு, நேர்முகத்தேர்வு.

தேர்வு மையம்: சென்னை, கோவை, மதுரை, திருச்சி, வேலூர்.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 100. பெண்கள், எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு கட்டணம் இல்லை.

கடைசிநாள்: 24.2.2026 மாலை 6:00 மணி.

விபரங்களுக்கு: www.upsc.gov.in

## சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு: மனிதநேய மக்கள் கட்சி அறிவிப்பு

**சென்னை, பிப்.17:**

சட்டமன்றத் தேர்தலில் திமுக கூட்டணிக்கு ஆதரவு அளிப்பதாக, மனிதநேய மக்கள் கட்சியின் சிறப்பு பொதுக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்த தீர்மானத்தில், "தமிழ்நாட்டு நலன்களையும் தமிழரின் தனித்த பண்பாடுகளையும் மாநில உரிமைகளையும் அடியோடு அழித்திடத் துடிக்கும் மதவாத பாசிஸ்டுகளின் கொடும்பிடியிலிருந்து தமிழ்நாட்டைக் காத்து நின்று, சமய சார்பின்மை, சகோதரத்துவம், சமூகநீதி, சமய நல்லிணக்கம் ஆகிய கொள்கைகளின் வழியே தமிழ்நாட்டின் ஆட்சியை நடத்தி, ஒன்றிய பாஜக அரசின் ஓயாத இடையூறு களைக் கடந்து நிற்கும் திமுக அரசையும் அதை கலைஞ ரின் முத்திரையோடு இயக்கும் முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர்களையும் இப்பொதுக்குழு பாராட்டுகிறது. இந்த ஆட்சி தொடர்ந்திட, தமிழ்நாடு மென்மேலும் வளர்ந்திட, சமூக நல்லிணக்கம் மலர்ந்திட, சமூகநீதி கோட் பாடுகள் ஓங்கி ஒளிர்ந்திட, சிறுபான்மையினர் முன்னேற்றம் சிறந்திட திமுக கூட்டணிக்கு சிந்தாமல் சிதறாமல் வாக்க ளித்து, 2026 சட்டமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியை திமுக கூட்டணி பெறுவதற்கு முதன்மை காரணமாக நமது களப்பணிகள் அமைந்திட வேண்டும் என இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டின் பாறை ஓவியங்கள் நூல் வெளியீடு

**சென்னை, பிப்.17:**

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் பேராசிரியர் கா.ராஜன் மற்றும் முனைவர் இரா.சிவானந்தம் ஆகியோர் எழுதிய "தமிழ்நாட்டின் பாறை ஓவியங்கள் - ROCK ART OF TAMILNADU" என்ற நூலினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார். தமிழ்நாட்டில் அமைந்துள்ள 46 பாறை ஓவியத் தளங்களில் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆவணப்படுத்த லின் விளைவாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்வு, தொல்லியலாளர்கள், நாட்டுப்புறவியலாளர்கள், மானுடவியலாளர்கள், நிலவியலாளர்கள், கலை வரலாற்றாசிரியர்கள் மற்றும் தொல்பழங்கால சூழலியலாளர்கள் ஆகிய பல்துறை ஆய்வாளர்கள் கொண்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டது. குழுவினர்கள் சேகரித்த தகவல்களும், விளக்கங்களும் ஒருங்கிணைந்த அறிவுசார் படைப்பாக இந்நூலில் முன்வைக்கப்பட்டுள்ளன. பாறை ஓவியங்களின் பண்பாட்டுச் சிறப்பை மதிப்பாய்வு செய்வதற்கு உதவும் வகையில், இந்நூலில் நிழற்படங்கள், வரைபடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இது, கடந்தகால மக்களின் சமூக வாழ்க்கையை பிரதிபலிப்பதோடு, அவர்களின் உள்ளுணர்வு, சிந்தனைத் திறன் ஆகியவற்றை வெளிப்படுத்துகின்றன. பாறை மேற்பரப்புகளில் வரையப்பட்ட இக்காட்சிகள், கலை மீது கொண்டிருந்த அவர்களின் மதிப்பையும், சமூக ஒற்றுமையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. இந்நூல் மொத்தம் 734 பக்கங்களைக் கொண்டதாகும். இதில் 92 நிலப்படங்கள், 682 வண்ண நிழற்படங்கள் மற்றும் 528 கோட்டுருவ வரைபடங்கள் இடம்பெற்றுள்ளன

## எங்களுக்கு மரியாதை கொடுக்காவிட்டால் திருப்பி அடிப்போம்: மாணிக்கம் தாகூர்

**மதுரை, பிப்.17:**

தமிழகத்தில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் காங்கிரஸ் கட்சி அங்கம் வகித்தாலும், அமைச்சரவையில் காங்கிரஸைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாகவே இருந்து வருகிறது. இப்போதும் இதே கோரிக்கையை காங்கிரசார் கடுமையாக வலியுறுத்தி வந்தனர்.

இந்தக் கோரிக்கையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூட்டணியில் பங்கு என்பது தமிழபு நாட்டுக்கு ஒத்து வராது என்று நிராகரித்திருந்த நிலையில், தற்போது காங்கிரஸ் மீண்டும் இந்த விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளது.

தி.மு.க. கூட்டணியில் உள்ள காங்கிரசை முறையாக நடத்துவதில்லை என்ற குற்றச்சாட்டை பலமுறை பொதுவெளியில் மாணிக்கம் தாகூர் எழுப்பியிருக்கிறார். இது கூட்டணியில் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும் காங்கிரசின் அதிகாரப்பகிர்வு கோரிக்கயை திமுக தொடர்ந்து மறுத்து வருகிறது. மேலும் தி.மு.க. அமைச்சரான ராஜ கண்ணப்பன், அவர்கள் வந்தால் வரட்டும். வராவிட்டால் போகட்டும். கூட்டணியை நம்பி கட்சி நடத்த முடியாது என்று தெரிவித்திருந்தார். இதற்கு காங்கிரஸ் எம்.பி. கடுமையாக எதிர்த்து விமர்சித்தார்.

இந்நிலையில் மதுரை தெற்கு மாவட்டம் காங்கிரஸ் கமிட்டி செயற்குழு கூட்டம் திருப்பரங்குன்றம் கோவில் அருகே உள்ள தனியார் மண்டபத்தில் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மாணிக்கம் தாகூர் எம்.பி தலைமை தாங்கினார். மதுரை தெற்கு மாவட்ட காங்கிரஸ் நிர்வாகிகளுடன், நாடாளுமன்ற உறுப்பினர் மாணிக்கம் தாகூர் நடைபெற உள்ள 2026 தேர்தல் குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் தொண்டர்கள் மற்றும் நிர்வாகிகளின் கருத்துகளைக் கேட்டறிந்த பின், மொத்தம் 7 முக்கிய தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. தமிழக அரசு மற்றும் அதிகாரப் பகிர்வில் காங்கிரஸ் கட்சிக்கு உரிய இடம் அளிக்கப்பட வேண்டும். வரவிருக்கும் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்குத் தற்போதிருப்பதை விட அதிக எண்ணிக்கையிலான தொகுதிகளை ஒதுக்க வேண்டும். அடிமட்ட அளவில் கட்சியைப் பலப்படுத்துவது மற்றும் மக்கள் நலப் பணிகளில் தீவிரமாக ஈடுபடுவது உள்ளிட்ட 7 தீர்மானங்களாகக் கொண்டு வரப்பட்டன.

இதனைத்தொடர்ந்து செயற்குழு கூட்டத்தில் மாணிக்கம் தாகூர் பேசியதாவது:

காங்கிரஸ்தான் என் உயிர். மரியாதை, அன்புதான் கேட்கிறோம். காங்கிரசை சாதாரணமாக நினைத்து பேசுகின்றனர். நீங்கள் (திமுக) செய்த பல தவறுகளுக்காக பழியை சுமந்தவர்கள் நாங்கள். எங்களுக்கு மரியாதை கொடுக்கவில்லை யென்றால் திருப்பி அடிப்போம். திருப்பி அதே வார்த்தையை பேசுவோம். எங்கள் பலம் இல்லாமல் நீங்கள் அரியணையில் ஏறி இருக்க முடியாது என்பதை மறந்துவிடாதீர்கள். நீங்கள் செய்ததையும் நாங்கள் மறக்கவில்லை. தோழமையாக இருக்கும்போது நாங்கள் கேட்பது என்னவென்றால், நாங்கள் உங்களுக்கு மரியாதை கொடுக்கிறோம். நீங்களும் எங்களுக்கு அதே மரியாதையை கொடுக்க வேண்டும் என்பதுதான்.

இவ்வாறு அவர் பேசினார்.

## 24ந் தேதி ஜெயலலிதா பிறந்த நாளில் புதிய கட்சி தொடங்குகிறார் சசிகலா

**பசும்பொன், பிப்.17:**

வருகிற 24ம் தேதி ஜெயலலிதாவின் பிறந்த நாளன்று பசும்பொன்னில் நடைபெறும் பிரம்மாண்டமான பொதுக்கூட்டத்தில் சசிகலா தனது புதிய கட்சியைத் தொடங்க உள்ளதாகவும், தனது புதிய கட்சியின் பெயர், கொடி மற்றும் கொள்கைகளைம், அவர் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பார் என்றும் கூறப்படுகிறது.

தமிழகத்தில் இன்னும் 2 மாதங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. இதையடுத்து அனைத்து கட்சிகளும் சட்டசபை தேர்தலை சந்திப்பதற்கான பணிகளை தீவிரப்படுத்தி உள்ளன. தி .மு.க. தலைமையிலான இந்தியா கூட்டணி கட்சிகள், அ.தி.மு.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள், விஜய்யின் தமிழக வெற்றிக் கழகம் மற்றும் சீமானின் நாம் தமிழர் கட்சி ஆகிய கட்சிகள் தேர்தல் பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றன.

மறைந்த அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான ஜெயலலிதாவின் உயிர் தோழியாக வலம் வந்தவர் சசிகலா. 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஜெயலலிதாவுடன் அரசியல் நிகழ்வுகளிலும் பயணித்து வந்தார். அதனால், அண்ணா தி.மு.க. நிர்வாகிகளும், தொண்டர்களும் ஜெயலலிதாவை 'அம்மா' என்றும், சசிகலாவை 'சின்னம்மா' என்றும் அழைத்து வந்தனர்.

2016-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ந் தேதி ஜெயலலிதா மரணம் அடைந்த பின்னர் 4 ஆண்டு சிறை வாசத்தை முடித்துவிட்டு வெளியே வரும்போது, அரசியல் நிலைமை எல்லாம் மாறிப்போய் இருந்தது. அரசியலை விட்டு ஒதுங்கிய அவர், தனது ஆதரவாளர்களை மட்டும் அவ்வப்போது சந்தித்து பேசிவந்தார். இந்த நிலையில், வரும் சட்டசபை தேர்தலுக்கு முன்பு அ.தி.மு.க. ஒன்றிணைய வேண்டும் என்று சசிகலா கூறிவந்தாலும் எதிர்பார்த்தஎதுவும் நடக்கவில்லை.

சசிகலா சமீபத்தில் தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மக்களை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார்.

நடிகர் விஜய்யின் த.வெ.க.வுடன் கூட்டணி அமைத்து, தென்மாவட்டத்தில் தனக்கு செல்வாக்குள்ள 25 தொகுதிகளில், ஆதரவாளர்களை களம் இறக்க சசிகலா திட்டமிட்டு இருப்பதாகவும் பேசப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக கடந்த 6-ந்தேதி போயஸ் கார்டனில் உள்ள தனது வீட்டில் ஆதரவாளர்களுடன் புதிய கட்சி தொடங்குவது தொடர்பாக ஆலோசனை நடத்தினார். இதையடுத்தே அவர் புதிய கட்சி தொடங்க திட்டமிட்டு உள்ளார்.

## ஆட்டோ மீட்டர் கட்டணத்தை மாற்றியமைக்கக் கோரி பிப். 24 முதல் சென்னையில் காத்திருப்புப் போராட்டம்!

**சென்னை, பிப்.17:**

ஆட்டோ மீட்டர் கட்டணத்தை மாற்றி யமைக்க வேண்டும், அரசு சார்பில் ஆட்டோ செயலியை (App) உடனடியாக அறிமுகப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பிப்ரவரி 24, 25, 26 ஆகிய தேதிகளில் சென்னையில் காத்திருப்புப் போராட்டம் நடைபெறவுள்ளது. தமிழ்நாடு ஆட்டோ தொழிலாளர் சம்மேளனம் (சிஐடியு) சார்பில் பிப்ரவரி 24 அன்று தமிழகம் முழுவதும் 30-க்கும் மேற்பட்ட இடங்களில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இதன் ஒரு பகுதியாக, சென்னையில் போக்கு வரத்து ஆணையர் அலுவலகம் முன்பு மூன்று நாட்களுக்குத் தொடர் காத்திருப்புப் போராட்டம் நடத்தப்பட உள்ளது. இப்போராட்டத்திற்கான ஆயத்தக் கூட்டம் ஞாயிறன்று (பிப். 15) கிண்டி அலு வலகத்தில் மாவட்டத் தலைவர் ஜே. முகமது அனிபா தலைமையில் நடை பெற்றது. இதில் சம்மேளன பொதுச் செயலாளர் எம். சிவாஜி, சிஐடியு மாவட்டச் செயலாளர் செந்தில்குமார் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.

சென்னையில் நடைபெறும் இந்தப் போராட்டத்தில் தினமும் சுமார் 2,000 ஆட்டோ தொழிலாளர்கள் பங்கேற்பார்கள் என்றும், வாழ்வாதார உரிமைகளுக்காக நடத்தப்படும் இப்போராட்டத்திற்குப் பொதுமக்கள் பேராதரவு வழங்க வேண்டும் என்றும் பொதுச்செயலாளர் எம். சிவாஜி கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஆதிதிராவிடர் நல நிதி வேறு திட்டங்களுக்கு மாற்றப்படவில்லை: தமிழக அரசு




**சென்னை, பிப்.17:**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை (KMUT) திட்டத்திற்காக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல நிதி பயன் படுத்தப்பட்டதாகச் சில ஊடகங்களில் வெளியான செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்று தமிழக அரசு விளக்கம் அளித்துள்ளது.

அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியி னர் நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒருபோதும் வேறு திட்டங்களுக்கு மாற்றப்படுவதில்லை. பட்ஜெட் நடை முறைப்படி ஒவ்வொரு திட்டத்திற்கும் பொது, ஆதிதிராவிடர், பழங்குடியினர் எனத் தனித்தனி கணக்குத் தலைப்பு கள் உள்ளன. அந்தந்த சமூகப் பயனாளிகளுக்கான நிதி அவர்களுக்கு மட்டுமே சென்றடைவது உறுதி செய்யப்படுகிறது. மகளிர் உரிமைத் தொகையாக வழங்கப் படும் கூடுதல் நிதியானது, அதற்கென ஒதுக்கப்பட்ட தனி நிதியிலிருந்தே வழங்கப்படுகிறது. மேலும், இந்த நிதியைப் பாதுகாக்கத் தமிழக அரசு இயற்றியுள்ள தனிச் சட்டத்தின்படி, குறிப்பிட்ட நிதியாண்டில் பயன்படுத்தப்படாத நிதி பொது நிதியாக மாறாது; அது அடுத்த ஆண்டிற்கு அதே நோக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். எனவே, நிதி மாற்றம் குறித்த குற்றச் சாட்டு ஆதாரமற்றது" எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஜம்மு - காஷ்மீர்: பயங்கரவாதத்துடன் தொடர்புடைய 8,000 வங்கிக் கணக்குகள் முடக்கம்!

புதுடெல்லி, பிப்.17:

ஜம்மு-காஷ்மீரில் பயங்கர வாதத்துடன் தொடர்புடைய நிதி மோசடியில் ஈடுபட்ட 8,000-க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டதாக அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

கடந்த 3 ஆண்டுகளாக நடத்தி வரும் தொடர் சோதனையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.



இதுகுறித்து மத்திய புலனாய்வு அமைப்புகளின் அதிகாரிகள் மேலும் கூறியதாவது: கடந்த 2017-ஆம் ஆண்டு தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) மேற்கொண்ட கடும் நடவடிக்கையால் ஜம்மு-காஷ்மீருக்குள் சட்டவிரோதமாக பணம் கொண்டுவரப்படுவது முற்றிலுமாகத் தடுக்கப்பட்டது. அதன்பிறகு எண்ம ஹவாலா முறையைப் பயன்படுத்தி நாட்டுக்கு எதிரான சதிச் செயல்களில் பயங்கரவாதிகள் ஈடுபடத் தொடங்கியுள்ளனர். அதன்படி, வங்கிக் கணக்கு வைத்திருக்கும் நபர்களை அணுகி அவர்களுக்கு குறிப்பிட்ட தொகையை கமிஷனாக வழங்கி பணப் பரிவர்த்தனையை மேற்கொண்டுள்ளனர்.

இதில் ஈடுபடும் மோசடியாளர் ஒருவர் சுமாராக 10 முதல் 30 வங்கிக் கணக்குகளில் பணப் பரிமாற்றத்தில் ஈடுபடுகிறார். கமிஷன் தொகைக்காக சிலர் தங்களது வங்கிக் கணக்கின் அனைத்துத் தகவல்களையும் பயங்கரவாதத் தொடர்புடைய நபர்களிடம் வழங்காமல் இருந்தால் இந்த மோசடியை முதல்கட்டத்திலேயே தடுக்க முடியும். கடந்த 3 ஆண்டுகளாக நடத்திய தொடர் சோதனையில் நிதி மோசடியில் ஈடுபட்ட 8,000-க்கும் மேற்பட்ட வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன.

தில்லி குண்டுவெடிப்பு விசாரணை: அண்மையில் நன்கு படித்தவர்களைக் கொண்ட பயங்கரவாதக் குழுக்களை ஜம்மு-காஷ்மீர் காவல் துறை கண்டறிந்து கைது செய்தது. அவர்கள் அனைவரும் 2016-ஆம் ஆண்டுமுதலே பயங்கரவாத செயல்களில் ஈடுபட முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். இதற்காக அவர்கள் 'அன்சார் இன்டெரிம்' என்ற பெயரில் பயங்கரவாத அமைப்பு ஒன்றையும் நிறுவியுள்ளனர்.

தில்லியில் கார் குண்டுவெடிப்புத் தாக்குதலை நடத்தி உயிரிழந்த மருத்துவர் உமர்-உன்-நபி 2016 மற்றும் 2018 என இருமுறை பயங்கரவாத அமைப்புகளில் சேர மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

# க்ரைம் கார்னர்

## விருது பெற்ற கேரள விவசாயி கடன் சுமையால் தற்கொலை

கண்ணூர், பிப்.17:

கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டம் செறுபுழா அருகே உள்ள இடவரத்தைச் சேர்ந்தவர் அம்பாட்டு இலியாஸ் (62). விவசாயியான இவர் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கண்ணூர் மற்றும் அண்டை மாவட்டமான காசர்கோடு மலைப் பகுதிகளில் உள்ள நிலத்தை குத்தகைக்கு எடுத்து காய்கறி பயிரிட்டு வந்தார்.

மேலும் மாநில அரசின் சிறந்த விவசாயிக்கான விருதையும் பெற்றுள்ளார். இந்த பருவத்தில் அவர் சுமார் 2,500 வாழைக்கன்றுகளை நட்டிருந்தார். ஆனால், எதிர்பார்த்த வருமானம் கிடைக்காததால் அவர் மிகுந்த மன உளைச்சலில் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், மூன்று நாட்களுக்கு முன்பு இலியாஸ் தனது பண்ணையில் பூச்சிக்கொல்லி மருந்தைக் குடித்துவிட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் கிடந்துள்ளார். அங்கிருந்தவர்கள் அவரை மீட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார். பல லட்சம் ரூபாய் கடன் சுமை காரணமாக அவர் இந்த விபரீத முடிவை எடுத்ததாகக் சந்தேகிக்கப்படுகிறது.

## குடும்ப தகராறில் 2 குழந்தைகளுடன் விஷம் குடித்த பெண்: ஒரு குழந்தை பலி

மதுரை, பிப். 17:

குடும்ப தகராறு காரணமாக 2 குழந்தைளுக்கு விஷம் கொடுத்துவிட்டு இளம் பெண் ஒருவர் தானும் தற்கொலைக்கு முயன்ற சம்பவத்தில் ஒரு பெண் குழந்தை உயிரிந்தார்.

மதுரை நாகமலை புதுக்கோட்டையை சேர்ந்தவர் மகேசுவரன். இவருடைய மனைவி ஷாலினி (வயது 32). இவர்களுடைய மகள்கள் மோகனஸ்ரீ (வயது 6), விஜயஸ்ரீ (வயது 4). கணவன் -மனைவிக்கு இடையே அடிக்கடி குடும்ப தகராறு ஏற்பட்டு வந்தது. நேற்று முன்தினம் இரவும் தகராறு ஏற்பட்டது. இதையடுத்து ஷாலினி தனது 2 மகள்களுக்கு விஷம் கொடுத்துவிட்டு அதனை தானும் குடித்து தற்கொலைக்கு முயன்றார்.

இதனையடுத்து அவர்கள் மருத்து வமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி மோகனஸ்ரீ பரிதாபமாக இறந்தாள். மேலும் ஷாலினி, அவரது மற்றொரு மகள் விஜயஸ்ரீ ஆகியோருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## 160 கி.மீ. வேகத்தில் சிறுவன் ஓட்டிய கார் விபத்து: 7 பேர் உயிரிழப்பு, 5 பேர் படுகாயம்

பெங்களூரு, பிப்.17:

பெங்களூருவை சேர்ந்த அயன் அலி (17) தன் நண்பர்கள் அஷ்ரம் ஷெரீஃப் (16), ஏத்தன் ஜார்ஜ் (17), அஷ்வின் நாயர் (17), பரத் (17), முகமது ஃபர்ஹான் (18) ஆகியோருடன் நேற்று முன்தினம் காலை 5 மணியளவில் ஹொசக்கோட்டையில் இருந்து தேவனஹள்ளி நோக்கி காரில் சென்றார். அப்போது அயன் அலியின் கார் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியது. அதில் இரு சக்கர வாகனத்தில் பயணித்த ககன் (27) சம்பவ இடத்தில் உயிரிழந்தார்.

மேலும் முன்னால் சென்ற சரக்கு வாகனத்தின் மீது கார் மோதியதில் அதன் ஓட்டுநர் பாலசுப்பிரமணியன் (32) படுகாயம் அடைந்தார். அயன் அலி மணிக்கு 160 கி.மீ. வேகத்தில் சரக்கு வாகனத்தின் மீது மோதியதில் அதன் சக்கரங்கள் தனித்தனியாக உடைந்து எதிரில் வந்த வாகனங்கள் மீது மோதியதில் அடுத்தடுத்து 2 வாகனங்கள் விபத்துக்கு உள்ளாயின. அதனால் 4 பேர் காயமடைந்தனர். அயன் அலி பயணித்த எக்ஸ்யூவி 700 கார் உடைந்து நொறுங்கி உருக்குலைந்து போனதில் 6 பேரும் உயிரிழந்தனர்.

போலீஸார் மேற்கொண்ட விசாரணையில், 17 வயதான அயன் அலி மணிக்கு 160 கி.மீ. முதல் 170 கி.மீ. வேகத்தில் காரை ஓட்டியதால், விபத்து ஏற்பட்டது தெரிய வந்தது. அயன் அலி உள்ளிட்ட 6 பேரும் 10-ம் வகுப்பு மாணவர்கள் என தெரிய வந்துள்ளது.

# விளையாட்டு செய்திகள்

## டி-20 உலகக்கோப்பை: வெளியேறியது நேபாளம்

மும்பை, பிப்.17:

இந்தியா - இலங்கை நாடுகளில் கூட்டாக நடைபெற்று வரும் டி-20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரின் 25ஆவது லீக் ஆட்டத்தில் மேற்கு இந்தியத் தீவுகள் - நேபாளம் (குரூப் சி) அணிகள் மோதின.

மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற மேற்கு இந்தியத் தீவுகள் பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய நேபாளம் அணி 20 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 133 ரன்கள் எடுத்தது.

நேபாளம் அணி சார்பில் திபேந்திர சிங் 58 ரன்கள் எடுத்தார். மேற்கு இந்தியத் தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக ஹோல்டர் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். 134 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிதான இலக்குடன் களமிறங்கிய மேற்கு இந்தியத் தீவுகள் அணி ஹோப் (61 ரன்கள்), ஹெட்மேயர் (46 ரன்கள்) ஆகியோரின் நிதான அதிரடியால், 9 விக்கெட் வித்தியாசத்தில் (15.2 ஓவர்கள் : 134-1) அபார வெற்றி பெற் றது. இந்த வெற்றியின் மூலம் மேற்கு இந்தியத் தீவுகள் முதல் அணியாக சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெற்றன. நேபாளம் அணி உலகக்கோப்பையில் இருந்து வெளியேறியது. முன்னதாக ஓமன் அணி உலகக்கோப்பையில் இருந்து முதல் அணியாக வெளியேறி யது என்பது குறிப்பிடத்தக்கது.

## குளிர்கால ஒலிம்பிக் 2026 : தொடக்கத்திலேயே அதிக காயங்கள்

கார்டினா, பிப்.17:

25ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் இத்தாலி நாட்டின் மிலன், கார்டினா நகரில் நடைபெற்று வருகிறது. இந்த தொடரின் தொடக்கத்தி லேயே அதிக காயங்கள் ஏற்பட்டுள் ளன.

அதிவேக பனிச்சறுக்கு விளை யாட்டு பிரிவான ஆல்ப்பைன் ஸ்கீயிங், ஐஸ் ஹாக்கி உள்ளிட்ட போட்டி களில் காயங்கள் காரணங்கள் கார ணமாக வீரர் - வீராங்கனைகள் விலகி யுள்ளனர். லிண்ட்சே வான் என்ற 41 வயது அமெரிக்க வீராங்கனை மகளிர் 'டவுன்ஹில்' போட்டியில் பலத்த காய மடைந்தார். ஏற்கெனவே முழங்கால் காயத்துடன் பங்கேற்ற அவர், இப்போட்டியின் போது இடது காலில் பலத்த எலும்பு முறிவு ஏற்பட்டு தொட ரில் இருந்து விலகி, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். 16 வயது இளம் உள்ளூர் வீராங் கனையான (இத்தாலி) ஜியாடா டி ஆண்டோனியோ பயிற்சிக் களத்தில் ஏற்பட்ட விபத்தில் முழங்கால் காயத்தால் தொடரில் இருந்தே விலகியுள் ளார்.

அதே போல இத்தாலியின் நட்சத்திர வீராங்கனையான மார்க்டா பாசினோ (29 வயது) பனிச்சறுக்குப் பிரிவில் ஏற்பட்ட கால் எலும்பு முறிவு காரணமாக ஒலிம்பிக் தொடரில் இருந்து வெளியேறினார். ஐஸ் ஹாக்கியில் கனடா அணிக்கு எதிரான ஆட்டத்தின் போது சுவிட்சர்லாந்து வீரர் கெவின் பியாலா பலத்த காயம் காரணமாக மைதானத்தில் இருந்து ஸ்ட்ரெச்சர் மூலம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். இதனால் ஆல்ப்பைன்ஸ்கீயிங்நடைபெறும்கோர்டினாடி'அம்பெசோ தளம் பதற்றமாக காணப்படுகிறது.

# கார், சுற்றுலா பஸ்சை நள்ளிரவில் மறித்து கடுமையாக தாக்கிய யானை

இடுக்கி, பிப்.17:

கேரளாவில் மரங்கள் அடர்ந்த வனப்பகுதியில், மூணாறு-மரயூர் சாலையில் நேற்றிரவு வாகனங்கள் சென்று கொண்டிருந்தபோது, அந்த வழியே இரவு 11 மணியளவில் யானை ஒன்று வந்துள்ளது. அந்த யானை முதலில், அந்த பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த சுற்றுலா பஸ்சை கடுமையாக தாக்கியது.



அதன் பக்கவாட்டில் இருந்த ஜன்னலை உடைத்து எறிந்தது. இதன்பின்னர் சாலைக்கு வந்த அந்த யானை சொகுசு கார் ஒன்றை வழிமறித்து நின்றது. இதனால், அச்சமடைந்த கார் ஓட்டுநர் காரை நிறுத்தி விட்டார். காருக்குள்ளேயே அமர்ந்து கொண்டார். மற்றொரு நபரும் உள்ளே இருந்துள்ளார்.

அப்போது யானை கார் கண்ணாடியை உடைத்ததுடன், காரின் மேற்கூரை மற்றும் முன்பகுதியை அடித்து, தாக்கியது. இந்த சம்பவம் பற்றி வன துறையினருக்கு தகவல் சென்றது. அவர்கள் உடனடியாக சம்பவ பகுதிக்கு விரைந்தனர். எனினும், யானை அந்த பகுதியில் இருந்து நகர்ந்து வேறு பகுதிக்கு சென்று விட்டது. காருக்குள் இருந்த 2 பேரும் உயிர் தப்பி விட்டனர். அவர்கள் கோட்டயம் மாவட்டத்தின் எரத்துப்பேட்டை பகுதியை சேர்ந்தவர்கள் ஆவர். படையப்பா யானையே அந்த பகுதியில் அடிக்கடி வந்து செல்கிறது என்றும் அதற்கு மதம் பிடித்து இருக்கிறது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# 5 பேருக்கு வாழ்வளித்த 10 மாத குழந்தைக்கு அரசு மரியாதையுடன் நடந்த இறுதி சடங்கு

பத்தனம்திட்டா, பிப்.17:

கேரளாவின் பத்தனம்திட்டா மாவட்டத்தின் மலப்பள்ளி பகுதியை சேர்ந்தவர் அருண் ஆபிரகாம். இவருடைய மனைவி ஷெரீன். இந்த தம்பதியின் 10 மாத குழந்தை ஆலின் ஷெரின் ஆபிரகாம். கேரளாவின் கோட்டயம் நகரில் பல்லம் என்ற இடத்தில் கடந்த 5-ந்தேதி சாலை விபத்து ஏற்பட்டது.

இதில் குழந்தை ஆலின் சிக்கி படுகாயமடைந்தது. மூளை சாவு அடைந்த அந்த குழந்தையின் பெற்றோர் அதன் ஆறு உறுப்புகளை நன்கொடையாக கொடுக்க முன் வந்தனர்.

இதனால், 5 பேருக்கு அந்த உறுப்புகள் சென்று சேர்ந்தன. இதற்கு, கேரளாவிலுள்ள பல்வேறு அரசியல் தலைவர்களும் தங்களுடைய பாராட்டுகளை தெரிவித்து கொண்டனர். கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன், இளம் வயதில் கேரளாவின் உறுப்பு நன்கொடையாளராக உருவாகி உள்ள அந்த குழந்தையின் நிலைமைக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்ததுடன், குழந்தையின் பெற்றோருடைய பெருந்தன்மையான செயலுக்கு பாராட்டுகளை தெரிவித்து கொண்டார்.

இதேபோன்று, கவர்னர் ஆர்.வி. அர்லேகர், எதிர்க்கட்சி தலைவர் வி.டி. சதீசன் ஆகியோரும் இரங்கல் தெரிவித்தனர். பெற்றோரின் முடிவையும் பாராட்டினர். அந்த குழந்தையின் இறுதி சடங்கு நாளை நடைபெற உள்ள சூழலில், அரசு மரியாதையுடன் இறுதி சடங்கை நடத்த அரசு உத்தரவிட்டு உள்ளது.

இந்நிலையில், அந்த குழந்தையின் உடல் இன்று காலை மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு கொண்டு செல்லப்பட்டது. முதலில் பிற்பகல் 3 மணியளவில் இறுதி சடங்கு நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. எனினும், ஆலினின் வீட்டுக்கு மக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்தினர். இதனால், சற்று தாமதம் ஏற்பட்டது. இதன்பின்னர் நடந்த சடங்கில் கேரள போலீசார் சார்பில் அரசு மரியாதை அளிக்கப்பட்டது. கேரளாவில், மிக இளம் வயதில் உறுப்பு நன்கொடை அளித்த குழந்தையாக ஆலின் உள்ளது. 5 பேருக்கு வாழ்வளித்த 10 மாத குழந்தையின் இறுதி சடங்கானது செயின்ட் தாமஸ் ஆலயத்தில் மாலை 5 மணியளவில் நடந்தது. இதில், மாவட்ட கலெக்டர், மாநில மற்றும் மத்திய மந்திரிகள், உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# மகா சிவராத்திரி: பூரி கடற்கரையில் சிவனின் மணல் சிற்பத்தை உருவாக்கிய நவீன் பட்நாயக்

பூரி, பிப்.17:

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசி திதியில் இது கொண்டாடப்படுகிறது. பிரபல மணல் கலைஞர் சுதர்சன் பட்நாயக், ஒவ்வொரு ஆண்டும் மகா சிவராத்திரியை முன்னிட்டு ஒடிசாவின் பூரி கடற்கரையில் பிரமிக்கத்தக்க மணல் சிற்பங்களை உருவாக்குவது வழக்கம்.

இந்த ஆண்டும் (2026) அவர் தனது கலைத்திறமையால் சிவபெருமானின் பிரம்மாண்டமான மணல் சிற்பத்தை உருவாக்கி பக்தர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். சிவபெருமானின் தியான நிலை மற்றும் லிங்க வடிவிலான சிற்பத்தை பல டன் மணலைப் பயன்படுத்தி அவர் உருவாக்கியுள்ளார். சிற்பத்தின் கீழ், ஹர ஹர மகாதேவ் என்றும் மகாசிவராத்திரி வாழ்த்துகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

# பினராயி விஜயன் மீண்டும் முதல்வர் ஆவார்! காங்கிரஸ் மூத்த தலைவர் பேச்சால் சர்ச்சை!

திருவனந்தபுரம், பிப்.17:

திருவனந்தபுரத்தில் மாநில திட்டமிடல் துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசிய மணிசங்கர் அய்யர், பினராயி விஜயன் தலைமையிலான அரசை பாராட்டிய அதே சமயத்தில் தனது சொந்த கட்சியான காங்கிரஸை கடுமையாக விமர்சித்தார்.



கேரளத்தில் இன்னும் இரண்டு மாதங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், சமீபத்தில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றன. ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையிலான இடது ஜனநாயக முன்னணி கூட்டணிக்கு சற்று பின்னடைவாக அமைந்தது.

இந்த நிலையில், அரசு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணிசங்கர் அய்யர் பேசியது கேரள அரசியலில் விவாதத்தை தூண்டியுள்ளது. மணிசங்கர் அய்யர் பேசியதாவது:

"பினராயி விஜயன் தலைமையிலான கேரள அரசின் பஞ்சாயத்து ராஜ்ஜியம் நாட்டுக்கே தலைமையாக உள்ளது. ராஜீவ் காந்தியின் தொலைநோக்குப் பார்வையை வேறு எந்த மாநிலத்தையும்விட கேரளம் திறம்பட நிறைவேற்றி வருகிறது. நடைமுறைச் செயலாக்கத்தில் கேரளம் முதலிடத்தில் இருந்தாலும், சட்டப்பேரவை நடவடிக்கைகளில் கர்நாடகத்துக்கு அடுத்தபடியாக உள்ளது. ஏழைகளுக்கான தேசம், வளர்ச்சியில் தீர்க்கமான குரலைக் கொண்டு மகாத்மா காந்தியின் கனவை நனவாக்கிய ஒரே மாநிலம் மார்க்சிஸ்ட் ஆட்சியின் கீழ் இருக்கும் கேரளம்" எனத் தெரிவித்தார்.

# வணிகச் செய்திகள்

## ஊழியர்களுக்கு கார், வீடு பரிசளிக்கும் 'வைர ராஜா'

சூரத், பிப்.17:

வெறும் 12 ரூபாயுடன் சூரத் நகருக்கு வந்த ஒரு கிராமத்து சிறுவன், இன்று 15,000 கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு மாபெரும் வைர வியாபார சாம்ராஜ்யத்தை உருவாக்கியுள்ளார். அவர்தான் 'ஹரிகிருஷ்ணா எக்ஸ்போர்ட்டர்ஸ்' நிறுவனர் சாவ்ஜி தோலக்கியா.

குஜராத் மாநிலம் அம்ரேலி மாவட்டத்தில் உள்ள துதாலா கிராமத்தில் பிறந்த சாவ்ஜி, 12 வயதில் வெறும் 12 ரூபாயுடன் சூரத்தில் காலடி எடுத்து வைத்தார். வைரத் தொழிலில் சாதாரணத் தொழிலாளியாகத் தொடங்கி, பின்னர் தனது சித்தப்பாவின் நிதி உதவியுடன் சொந்தத் தொழிலைத் தொடங்கினார்.

இன்று அவரது நிறுவனம் ஆண்டுக்கு ரூ.15,000 கோடிக்கும் மேல் வர்த்தகம் செய்யும் மாபெரும் நிறுவனமாக உயர்ந்துள்ளது. இன்று இந்தியாவின் 'வைர ராஜா' என்று அழைக்கப்படுகிறார்.

சாவ்ஜி தோலக்கியா வெறும் தொழிலதிபராக மட்டுமல்லாமல், தனது ஊழியர்களுக்கு வாரி வழங்கும் வள்ளலாகவும் அறியப்படுகிறார்.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிப் பண்டிகையின் போது, தனது நிறுவனத்தில் சிறப்பாகப் பணியாற்றும் ஊழியர்களுக்கு கார், அடுக்குமாடி குடியிருப்பு மற்றும் வைர நகைகளைப் பரிசாக வழங்கி உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்து வருகிறார்.

# தேசிய விரைவுச் சாலைகளுக்கான சுங்கக் கட்டண விதிகளில் மாற்றம்: புதிய நடைமுறை அமல்



புதுடெல்லி, பிப்.17:

தேசிய விரைவுச் சாலைகளுக்கான சுங்கக் கட்டணம் வசூலிக்கும் விதிகளில் மத்திய அரசு மாற்றங்களை அறிவித்துள்ளது. இது அமலுக்கு வருகிறது.

இப்போது சாதாரண நெடுஞ்சாலைகளை விட விரைவுச் சாலைகளுக்கு 25% கூடுதல் சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. மேலும் விரைவுச் சாலையின் பெரும் பகுதியில் கட்டுமானப் பணி முடியாமல் இருந்தாலும், அதன் முழு நீளத்துக்கும் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. இது வாகன ஓட்டிகளுக்கு பெரும் சுமையாக உள்ளது. இந்நிலையில் மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தேசிய நெடுஞ்சாலைக் கட்டண (விகிதங்கள் நிர்ணயம் மற்றும் வசூல்) விதிகள், 2008-ல் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் படி, விரைவுச் சாலை முழுமையாகத் திறக்கப்படாத பட்சத்தில், கட்டுமானப் பணிகள் முடிந்து செயல்பாட்டில் இருக்கும் தூரத்துக்கு மட்டுமே சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படும். முடிக்கப்படாத விரைவுச் சாலைகளில், தேசிய நெடுஞ்சாலைகளுக்கு இணையான குறைந்த கட்டணமே வசூலிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. கட்டுமானப் பணி முடிந்து செயல்பாட்டில் உள்ள விரைவுச் சாலைப் பகுதிகளைப் பயன்படுத்த வாகன ஓட்டிகளை ஊக்குவிப்பதற்காகவே மத்திய அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதனால் பழைய நெடுஞ்சாலைகளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் அதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் மாசு குறையும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து விரைவாக நடைபெறுவது உறுதி செய்யப்படும்.

இந்தத் திருத்தப்பட்ட விதிகள் இன்று முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விரைவுச் சாலை முழுமையாகத் திறக்கப்படும் வரை அல்லது அதிகபட்சமாக ஓராண்டு வரை இந்தச் சலுகை அமலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பில் கேட்ஸ் ஆந்திரா வருகை: சந்திரபாபு நாயுடுவுடன் முக்கிய ஆலோசனை

ஆந்திரா, பிப்.17:

மைக்ரோசாப்ட் நிறுவனர் பில் கேட்ஸ் ஆந்திர முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு உடன் முக்கிய ஆலோசனை நடத்துகிறார். அமராவதியில் உள்ள தலைமைச் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறுகிறது. இதில் துணை முதல்-மந்திரி பவன் கல்யாண் மற்றும் மந்திரி நாரா லோகேஷ் ஆகியோரும் கலந்து கொள்கிறார்கள். இந்த சந்திப்பில், குப்பம் பகுதியில் கேட்ஸ் அறக்கட்டளை ஏற்கனவே செயல்படுத்தி வரும் சுகாதாரத் திட்டங்களை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்துவது குறித்து விவாதிக்கப்படுகிறது. குறிப்பாக, டிஜிட்டல் சுகாதாரப் பதிவுகளை உருவாக்கும் 'சஞ்சீவனி' திட்டம் பற்றி அதிகாரிகள் விளக்கம் அளிக்கிறார்கள். மேலும், ஆந்திர அரசின்ரியல்டைம்கவர்னன்ஸ்சிஷ்டம்(RTGS)மையத்தை பில் கேட்ஸ் பார்வையிட்டு, தொழில்நுட்பம் மூலம் நிர்வாகத்தை எவ்வாறு மேம்படுத்துகின்றனர் என்பதை அறிகிறார். உந்தவல்லி கிராமத்தில் விவசாயத்தில் டிரோன் மற்றும் ஏஐ பயன்பாடு குறித்தும் அவர் ஆய்வு செய்கிறார். முதல்-மந்திரி சந்திரபாபு நாயுடு தனது 'ஸ்வர்ண ஆந்திரா 2047' தொலைநோக்கு திட்டத்தையும் பில் கேட்ஸிடம் விளக்குகிறார். இந்த வருகை மூலம் சுகாதாரம், கல்வி மற்றும் விவசாயத் துறைகளில் தொழில்நுட்ப ஒத்துழைப்பு மேலும் வலுப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது பில் கேட்ஸின் மூன்றாவது ஆந்திர பயணமாகும்.

# நடைபாதையில் ஸ்கூட்டர் ஓட்டிய நபருக்கு வழிவிடாத மூதாட்டிக்கு பாராட்டு



கோழிக்கோடு, பிப்.17:

கேரளாவின் கோழிக்கோடு பகுதியைச் சேர்ந்தவர் பிரபாவதி (73). இவர் சாலையோரம் உள்ள நடைபாதையில் சென்று கொண்டிருந்தார். இவருக்கு எதிரே ஒருவர் நடைபாதையில் ஸ்கூட்டர் ஓட்டியபடி வந்தார். அவரை தடுத்து நிறுத்தினார் பிரபாவதி. அவர் தனது ஸ்கூட்டரை ஓரமாக நிறுத்தி பிரபாவதி செல்ல வழிவிட்டார். ஆனால், அவர் செல்லவில்லை. ஸ்கூட்டர் ஓட்டி வந்த நபரை தடுத்து நிறுத்தி, அவருக்கு சாலை விதிகளை மதித்து சாலையில் செல்ல அறிவுறுத்தினார்.

இதனால் ஸ்கூட்டர் ஓட்டி வந்த நபர் வேறு வழியின்றி திரும்பி சாலையில் சென்றார். இந்த வீடியோ வைரலானது. கோழிக்கோடு மோட்டார் வாகனத்துறையும், பிரபாவதி செயலை பாராட்டி கவுரவித்துள்ளது.

இது குறித்து பிரபாவதி கூறுகையில் ”எனது பெற்றோர் கம்யூனிஸ்ட் கட்சியினர். நானும் இளம் வயதில் கம்யூனிஸ்ட் இயக்கத்தில் தீவிரமாக பணியாற்றினேன். பாரத சாரணர் இயக்கத்தில் இருந்து மற்றவர்களுக்கு வழி காட்டியுள்ளேன். விடுதிகளிலும் வார்டனாக பணியாற்றியுள்ளேன். எனக்கு விதிமீறல் பிடிக்காது. அதனால் ஸ்கூட்டர் ஓட்டி வந்த நபரை, சாலையில் செல்ல வற்புறுத்தினேன்” என்றார்.

# 2016-ல் 'அன்சார் இன்டரிம்' பெயரில் தீவிரவாத அமைப்பை உருவாக்கிய மருத்துவர்கள்: என்ஐஏ விசாரணையில் தகவல்




ஸ்ரீநகர், பிப்.17:

கடந்த 2016ம் ஆண்டிலேயே பல மருத்துவர்கள் இணைந்து அன்சார் இன்டரிம் என்ற தீவிரவாத அமைப்பை உருவாக்கியது என்ஐஏ விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே கார் குண்டு வெடித்தது. இதில் 13 பேர் உயிரிழந்தனர். இது தொடர்பாக தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) விசாரணை நடத்தி வருகிறது. அந்தக் காரில் இருந்த மருத்துவர் உமர் இந்த தாக்குதலை நடத்தியது விசாரணையில் தெரிய வந்தது. மேலும் இதில் ஹரியானாவில் உள்ள அல் பலா பல்கலைக் கழக மருத்துவர்கள் பலருக்கும் தொடர்பு இருப்பது தெரியவந்தது. கைதான மருத்துவர்கள் 2016ம் ஆண்டே தீவிரவாதப் பாதைக்குத் திரும்பியுள்ளனர்.

ஏப்ரல் 2022-ல் ஸ்ரீநகரில் உள்ள ஈத்கா பகுதியில் ஒரு ரகசியக் கூட்டத்தை நடத்திய இவர்கள், 'அன்சார் இன்டரிம்' என்ற புதிய அமைப்பைத் தொடங்கியுள்ளனர். இந்த அமைப்புக்கு அதில் ரத்தர் தலைவராகவும், மத போதகர் மவுல்வி இர்பான் துணைத் தலைவராகவும் செயல்பட்டுள்ளனர். இந்தக் கும்பலின் முக்கிய செயல்பாட்டாளராக இருந்தவர் 28 வயது மருத்துவர் உமர். ஹரியானாவின் பரிதாபாத் போன்ற பகுதிகளில் இருந்து வேதிப் பொருட்களைச் சேகரித்து, டெல்லியில் மக்கள் நெருக்கடி மிகுந்த இடங்கள், வழிபாட்டுத் தலங்களில் வாகன வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளனர். ஸ்ரீநகர் போலீஸார் இந்தக் கும்பலைச் சேர்ந்த சிலரைக் கைது செய்து வெடி பொருட்களைப் பறிமுதல் செய்தவுடன், உமர் பீதியடைந்துள்ளார். இதனால் திட்டமிட்ட காலத்துக்கு முன்பே நவம்பர் 10ம் தேதி செங்கோட்டைக்கு வெளியே குண்டுவெடிப்பை நிகழ்த்தியுள்ளார். இதில் உமரும் உயிரிழந்தார்.

# ஒடிசாவில் ரூ.1 லட்சத்துக்கு குழந்தையை விற்ற தந்தை

பாலசோர், பிப்.17:

பாலசோர்: ஒடிசா மாநிலம் பாலசோர் மாவட்டம் பரிசாஹி கிராமத்தைச் சேர்ந்த ராகேஷ் குமார் பெஹரா என்ற கொத்தனார், தனது இரண்டரை வயது ஆண் குழந்தையை விற்க ஒரு நபருடன் பேரம் பேசும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானது. இது குறித்த புகாரின் பேரில் போலீஸார் விசாரணையைத் தொடங்கினர்.

பின்னர் தீவிர தேடுதல் வேட்டையில், சிமினிபதி பகுதியில் இருந்து குழந்தை மீட்கப்பட்டு காப்பகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் பிரமோத் குமார் மல்லிக் தெரிவித்துள்ளார். ரூ.1 லட்சத்துக்கு விலை பேசிய ராகேஷ், ரூ.50,000 முன்பணம் பெற்றது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து ராகேஷ் கூறும்போது, "எனக்கு நான்கு குழந்தைகள் உள்ளனர். அவர்களை வளர்க்க மிகவும் சிரமமாக இருந்தது. வறுமை காரணமாகவே இந்த முடிவை எடுத்தேன். தெரிந்த நபர் ஒருவர் மூலம் ஒரு வரைத் தொடர்பு கொண்டு குழந்தையை ஒப்படைத்தேன்" என்றார். காவல்துறை தரப்பில் கூறும்போது, "ராகேஷ் இரண்டு திருமணம் செய்துள்ளார். தற்போது விற்கப்பட்ட குழந்தை அவரது இரண்டாவது மனைவிக்குப் பிறந்தது என தெரியவந்துள்ளது. கருத்து வேறுபாடு காரணமாக அந்தக் குழந்தையின் தாய் ராகேஷை விட்டுப் பிரிந்து தனியாக வசித்து வருகிறார்" என்றனர்.

# கர்நாடகா: சரக்கு வண்டியில் மாணவர்களை அழைத்துச் சென்ற ஆசிரியர்

பெங்களூரு, பிப்.17:

கர்நாடக மாநிலம் தட்சின கன்னட மாவட்டத்தில் உள்ள பெல்தங்கடியில் அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அங்கு பொறுப்பு தலைமை ஆசிரியராக இருக்கும் கிரண் குமார் (45) கடந்த 9-ம் தேதி பள்ளியின் மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை நல்கூரில் உள்ள தேனீ வளர்ப்பு பண்ணைக்கு ஆய்வுப் பணிக்காக சரக்கு வாகனத்தில் அழைத்துச் சென்றார். இதைத் தொடர்ந்து மாணவ, மாணவிகள் மிகவும் சிரமப்பட்டு திறந்த வாகனத்தில் ஏறி, நின்றவாறு சென்ற வீடியோ சமூக வலைதளங்களில் வெளியானது. இதனைத் தொடர்ந்து பொறுப்பு தலைமை ஆசிரியர் கிரண் குமார் நேற்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். மேலும் அவர் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டது..

# உத்தராகண்டில் ஏப்.22-ல் கேதார்நாத் கோயில் திறப்பு

டேராடூன், பிப்.17:

வரும் ஏப்ரல் 22-ம் தேதி கேதார்நாத் கோயில் நடை திறக்கப்படுகிறது.

உத்தராகண்டில் சார்தாம் என்றழைக்கப்படும் பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய புனித தலங்கள் அமைந்துள்ளன. இமய மலையில் அமைந்துள்ள இந்த புனிதத் தலங்கள் குளிர்காலத்தில் மூடப்பட்டிருக்கும். கோடை காலத்தில் 4 கோயில்களின் நடைகளும் திறக்கப்படும்.

இந்த சூழலில் வரும் ஏப்ரல் 22ம் தேதி காலை 8 மணிக்கு கேதார்நாத் கோயில் நடை திறக்கப்படுகிறது. ஏப்ரல் 23ம் தேதி பத்ரிநாத் கோயில், ஏப்ரல் 19ம் தேதி கங்கோத்ரி, யமுனோத்ரி கோயில்களின் நடைகள் திறக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

இது குறித்து உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி கூறியதாவது: ஏப்ரல் 22ம் தேதி கேதார்நாத் கோயில் நடை திறக்கப்படுகிறது. இதற்கான ஆயத்தப் பணிகள் தொடங்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் பகவான் சிவனை வழிபட வரும் பக்தர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டு தெய்வ பூமிக்கு வரும் பக்தர்களின் பாதுகாப்புக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு முதல்வர் புஷ்கர் சிங் தாமி தெரிவித்துள்ளார்.

# ஹரியானாவில் 5 குழந்தைகள் உள்பட 12 பேர் உயிரிழப்பு: அசுத்தமான குடிநீர் காரணமா?



பல்வால், பிப்.17:

ஹரியானாவின் பல்வாலில் உள்ள சாயன்சாவில் கடந்த 15 நாட்களில் ஐந்து குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர். இது அசுத்தமான குடிநீர் மற்றும் தொற்று நோய் பரவல் காரணமாக ஏற்பட்டதா என சுகாதாரத் துறை விசாரணை நடத்தி வருகிறது.

சயான்சாவில் ஜனவரி கடைசியிலிருந்து பிப்ரவரி நடுப்பகுதி வரையில் ஏற்பட்ட 12 உயிரிழப்புகள் கடுமையான கல்லீரல் சிக்கல்களுடன் தொடர்புடையவை என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கு வைரஸ் ஹெபடைடிஸ் மற்றும் நீர் மாசுபாடு காரணம் என முதற்கட்ட ஆய்வுகள் தெரிவித்தன.

865 வீடுகளைக் கொண்ட சாயன்சா கிராமத்தில் 5,700 பேர் வசிக்கின்றனர். இக்கிராமத்தில் ஜனவரி 31 அன்று மஞ்சள் காமாலை தொடர்பான உயிரிழப்புகள் முதன் முதலில் பதிவாகியது. இதனையடுத்து கிராமத்தில் தொடர்ச்சியான மருத்துவ முகாம்கள், வீடு வீடாக கணக்கெடுப்புகள் மற்றும் மக்களிடம் மருத்துவ பரிசோதனை ஆகியவை தொடர்ந்து நடத்தப்பட்டன.

ஜனவரி 27 மற்றும் பிப்ரவரி 11-க்கு இடையில் சாயன்சாவில் 7 பேர் உயிரிழந்தனர். இதில் நான்கு பேர் கடுமையான ஹெபடைடிஸ், கல்லீரல் செயலிழப்பு காரணமாக உயிரிழந்தனர். உயிரிழந்தவர்கள் ஒன்பது முதல் 65 வயதுக்குட்பட்டவர்கள். அதன் பின்னர் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர், காய்ச்சல், வயிற்று வலி, வாந்தி மற்றும் மஞ்சள் காமாலை போன்றவற்றால் பாதிக்கப்பட்டதாக புகாரளித்தனர்.

பல்வால் தலைமை மருத்துவ அதிகாரி சதீந்தர் வசிஷ்த் கூறுகையில், "இந்த உயிரிழப்புகள் குறித்து விரிவான பரிசோதனை நடந்து வருகிறது. இதுவரை, இறந்தவரின் நெருங்கிய தொடர்புகள் உட்பட சுமார் 1,500 பேர் பரிசோதிக்கப்பட்டுள்ளனர். மேலும் ஹெபடைடிஸ் ஏ, பி, சி மற்றும் ஈ ஆகியவையும் பரிசோதிக்கப்பட்டன. 210 பேரின் ரத்த பகுப்பாய்வில் இரண்டு பேருக்கு ஹெபடைடிஸ் பி மற்றும் ஒன்பது பேருக்கு ஹெபடைடிஸ் சி இருப்பது கண்டறியப்பட்டது.

இதுவரை சேகரிக்கப்பட்ட 107 வீட்டு நீர் மாதிரிகளில், 23 தர சோதனைகளில் பாக்டீரியா மாசுபாடு மற்றும் போதுமான குளோரினேஷன் இல்லாதது கண்டறியப்பட்டது. மற்றொரு சோதனையில் நீர் சேமிப்பு தொட்டிகளில் கோலிஃபார்ம் பாக்டீரியா கண்டறியப்பட்டது" என்றார்.

மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் கடந்த மாதம் அசுத்தமான நீரால் 16 பேர் உயிரிழந்த சில வாரங்களுக்குப் பிறகு இந்த இறப்புகள் பதிவாகியுள்ளன.

# ஆன்லைன் பண பரிமாற்றத்திற்கு சேவை கட்டணம்: வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சி கொடுத்த எஸ்பிஐ




புதுடெல்லி, பிப்.17:

நாட்டின் மிகப்பெரிய பொதுத்துறை வங்கியான ஸ்டேட் பேங் ஆப் இந்தியா எனப்படும் எஸ்.பி.ஐ ஆன்லைன் பண பரிமாற்றத்தில் சேவை கட்டணத்தை அறிவித்துள்ளது. இதன்படி, ரூ.25,000 க்கு மேற்பட்ட தொகையை, செல்போன் செயலி, இண்டர்நெட் பேங்கிங் உள்ளிட்ட ஆன்லைன் பணப்பரிவர்த்தனையில் பரிமாற்றம் செய்தால் சேவைக்கட்டணம் வசூலிக்கப்படும். அதாவது 25 ஆயிரம் ரூபாய்க்கு மேல் முதல் ஒரு லட்சம் வரை ஐஎம்பிஎஸ் முறையில் பணம் அனுப்பினால் 2 ரூபாய் கட்டணம் மற்றும் ஜிஎஸ்டி வசூலிக்கப்படும். ஒரு லட்சம் ரூபாய் முதல் இரண்டு லட்சம் ரூபாய் வரையில் ஐஎம்பிஎஸ் பரிவர்த்தனைகளை மேற்கொண்டால், 6 ரூபாய் கட்டணம் மற்றும் ஜிஎஸ்டி வசூலிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சேவை கட்டணம் + ஜிஎஸ்டி என்பது எஸ்பிஐயின் இண்டர்நெட் பேங்கிங், செல்போன் செயலி வழியிலான பணப்பரிமாற்றம் யோனோ செயலி வழியிலான பணப்பரிமாற்றத்துக்கு பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய விதிகளின்படி, ரூ.25 ஆயிரத்துக்குள் பணப்பரிமாற்றம் செய்தால் சேவை கட்டணம் மற்றும் ஜிஎஸ்டி கிடையாது. எஸ்பியின் இந்த புதிய அறிவிப்பு அமலுக்கு வந்துள்ளது.

# புற்றுநோய் சிகிச்சைக்குப் பிறகு 94.5% குழந்தைகள் உயிர்பிழைப்பு: இந்தியாவின் முதல் ஆய்வில் தகவல்




புதுடெல்லி பிப்.17:

சர்வதேச குழந்தைப் பருவ புற்றுநோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, 'தேசிய குழந்தைகள் புற்றுநோயில் இருந்து உயிர்ப் பிழைத்தவர்கள் திட்டம்' என்பதன் கீழ் நாட்டின் முதல் ஆராய்ச்சியில் கிடைத்த புள்ளி விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதுதொடர்பான ஆய்வுக் கட்டுரை பிரபல மருத்துவ இதழான 'லான்செட் பிராந்திய சுகாதாரம் - தென் கிழக்கு ஆசியா' இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் முக்கிய ஆசிரியர் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் குழந்தை மருத்துவ புற்றுநோயியல் பிரிவின் தலைவர் டாக்டர் ரச்சனா சேத் கூறியதாவது:

புற்றுநோய் சிகிச்சைக்குப் பிறகு குழந்தைகளின் நிலை குறித்த ஆவணங்கள் எதுவும் இல்லை.

இதை ஆவணப்படுத்த கடந்த 2016ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு வரையில் புற்று நோய்க்கு சிகிச்சை பெற்ற குழந்தைகளின் விவரங்களை சேகரித்தோம்.

டெல்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூரு உட்பட 20 புற்றுநோய் சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்ற 5,400 குழந்தைகளைப் பற்றிய தகவல்களை பெற்று ஆய்வு செய்தோம். புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெறும் குழந்தைகளில் கடந்த 5 ஆண்டுகளில் 94.5 சதவீதம் பேர் உயிர் பிழைத்துள்ளனர்.

இந்த எண்ணிக்கை எங்களுக்கு ஊக்கம் அளிக்கிறது. புற்றுநோய்க்கு சிகிச்சைப் பெற்றவர்களுக்கு மருத்துவ ரீதியாக மற்றும் உளவியல் ரீதியாக பல ஆண்டுகளுக்கு தொடர்ந்து சவால்களை சந்திக்க வேண்டி இருக்கலாம். இதுபோல் சிகிச்சைக்குப் பிறகு ஏற்படும் பாதிப்புகளை முறைப்படி நாம் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு டாக்டர் ரச்சனா சேத் கூறினார்.

## வங்கதேச புதிய அமைச்சரவை பிப்ரவரி 17 இல் பதவியேற்பு

**டாக்கா, பிப்.17:**

நடந்து முடிந்த வங்கதேச நாடாளுமன்ற தேர்தலில் வங்கதேச தேசியவாதக் கட்சி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இந்நிலையில் பிப்ரவரி 17 அன்று பிஎன்பி (BNP) தலைவர் தாரிக் ரஹ்மான் தலைமையிலான புதிய அமைச்ச ரவைக்கு அந்நாட்டு ஜனாதிபதி முகமது சஹாபுதீன் பதவி பிரமாணம் செய்து வைப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக ஜனாதிபதி மாளிகையில் நடைபெறும் இந்த விழாவானது, இம்முறை பாரம்பரியத்திலிருந்து விலகி நாடா ளுமன்ற வளாகத்தில் நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

## பாலஸ்தீன கூடாரங்களின் மீது இஸ்ரேல் குண்டுவீச்சு

**காசா, பிப்.17:**

காசாவின் வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேல் குண்டு வீசியுள்ளது. இந்த தாக்குதல்களில் 9 பாலஸ்தீனர்கள் படுகொலையானதாக பாலஸ்தீன சிவில் பாதுகாப்பு மற்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக பாலஸ்தீனர்கள் தங்கியிருந்த கூடாரங்கள் மீது குறிவைத்து குண்டுகள் வீசப்பட்டுள்ளன. 2025 அக்டோபர் மாதமே போர் நிறுத்தம் அமலுக்கு வந்திருந்தாலும் இஸ்ரேல் பல முறை அந்த ஒப்பந்தத்தை மீறி குண்டு வீசி இனப்படுகொலைகளை நடத்தியுள்ளது.

## ஒலிம்பிக் கிராமத்தில் ஆணுறைக்கு கடும் தட்டுப்பாடு

**மிலான், பிப்.17:**

இத்தாலியின் மிலான் மற்றும் கோர்டினா நகரங்களில் 2026-ம் ஆண்டுக்கான குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன. வழக்கமாக ஒலிம்பிக் கிராமத்தில் உணவு, குடிநீர் உள்ளிட்டவை தட்டுப்பாடு என்ற புகார்கள் எழும். ஆனால் தற்போது ஏற்பட்டுள்ள தட்டுபாடு சற்று வித்தியாசமானது. மிலானில் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பித்த 3 நாட்களில் அனைத்து ஆணுறைகளும் தீர்ந்துவிட்டதாக புகார்கள் எழுந்துள்ளன. உலகம் முழுவதும் 3 ஆயிரம் வீரர்கள் கலந்து கொண்டதை தொடர்ந்து இலவசமாக 10 ஆயிரம் ஆணுறைகள் வழங்கப்பட்டு இருந்ததாக கூறப்படுகிறது. ஆனாலும் அவை அனைத்தும் அங்கு தீர்ந்துவிட்டது. 1988-ம் ஆண்டு உலகம் முழுவதும் எச்.ஐ.வி. தொற்று பரவல் அதிகரித்ததை தொடர்ந்து, ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்கும் வீரர்களுக்கு இலவசமாக ஆணுறைகள் கொடுக்கும் மரபு உருவானது. கடந்த 2024-ம் ஆண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டியில் வீரர்களுக்கு 3 லட்சம் ஆணுறைகள் கொடுக்கப்பட்டது. 2026-ம் ஆண்டு அதிகபட்சமாக 4.5 லட்சம் ஆணுறைகள் வழங்கப்பட்டன. இதற்கு நேர்மாறாக மிலானில் குறைந்த அளவில் அதாவது வெறும் 10 ஆயிரம்தான் வழங்கப்பட்டுள்ளது. இதுவே ஆணுறைகள் தட்டுப்பாட்டுக்கு முக்கிய காரணமாக கூறப்படுகிறது.

இதுகுறித்து சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி செய்தித் தொடர்பாளர் மார்க் ஆடம்ஸ் கூறுகையில், "ஒலிம்பிக் கிராமத்தில் ஒலிம்பிக் சாசனத்தின் விதி 62-ன்படி, கண்டிப்பாக ஆணுறை வழங்கப்பட வேண்டும். எதிர்பார்த்ததை விடத் தேவை அதிகமாக உள்ளதால், கூடுதல் வினியோகத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒலிம்பிக் முடியும் வரை தட்டுப்பாடு வராமல் தொடர்ந்து இருப்பு வைக்கப்படும்" என்றார்.

## 'சமரசத்திற்கு தயார், ஆனால்'...- அமெரிக்காவுக்கு ஈரான் வைத்த நிபந்தனை

**ஜெனீவா, பிப்.17:**

ஈரான் மற்றும் அமெரிக்கா இடையிலான அணுசக்தி திட்டம் தொடர்பான பதற்றம் மீண்டும் தீவிரமடைந்துள்ள நிலையில், சமரசத்திற்கு தயார் என ஈரான் அறிவித்துள்ளது.

தங்கள்மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதார தடைகளை அமெரிக்கா நீக்கினால், அணுசக்தி திட்டம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தி சமரசம் செய்யத் தயார் என்று ஈரான் தெரிவித்துள்ளது. இந்த அறிக்கை சர்வதேச அளவில் கவனம் பெற்றுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான அணுசக்தி விவகாரம் தொடர்பான 2-ம் சுற்று பேச்சுவார்த்தை ஜெனீவா நகரில் நாளை நடைபெறவுள்ளது.

இந்த சூழ்நிலையில் ஈரானின் இந்த அறிவிப்பு முக்கியத்துவம் பெறுகிறது. நாளைய பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் திருப்புமுனையாக அமையுமா என்பது குறித்து உலக நாடுகள் கவனித்து வருகின்றன.

# சக்திவாய்ந்த பாஸ்போர்ட் நாடுகள் பட்டியலில் சிங்கப்பூர் முதலிடம்

**டாக்கா, பிப்.17:**




லண்டனைச் சேர்ந்த 'ஹென்லி அண்டு பார்ட்னர்ஸ்' என்ற நிறுவனம், சர்வதேச பயணம் தொடர்பான ஆய்வுகளை செய்து வருகிறது. விமான நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களை வைத்து, விசா இல்லாமல் அதிக நாடுகளுக்கு செல்ல எந்த பாஸ்போர்ட் உதவும் என்ற பட்டியலையும் வெளியிட்டுள்ளது. உலகில் 227 நாடுகளின் அனுமதியைக் கணக்கிட்டு, 2026ம் ஆண்டுக்கான பட்டியலை அந்நிறுவனம் தரவரிசைப் பட்டியலை தயாரித்துள்ளது.

அதில் சிங்கப்பூர் முதலிடத்தை தக்க வைத்து கொண்டது. 85வது இடத்தில் இருந்த இந்தியா தற்போது 75வது இடத்திற்கு முன்னேறி உள்ளது. இந்திய பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் இப்போது விசா இல்லாமல் 56 நாடுகளுக்கு பயணிக்க முடியும்.

விசா இல்லாமல் பயணியக் கூடிய நாடுகளில் மலேசியா, தாய்லாந்து, இலங்கை, இந்தோனேசியா, பூடான், மாலத்தீவு, கென்யா, பார்படாஸ், பூட்டான், பிரிட்டிஷ் விர்ஜின் தீவுகள், புருண்டி, கம்போடியா, கேப்வெர்டே தீவுகள், கொமோரோ தீவுகள், குக் தீவுகள், டொமினிகா, எத்தியோப்பியா, பிஜி, ஜமைக்கா, ஜோர்டான், கஜகஸ்தான், கென்யா, லாவோஸ், மக்காவோ, மடகாஸ்கர், மாலத்தீவுகள், மார்ஷல் தீவுகள், மொரீஷியஸ், மங்கோலியா, மொசாம்பிக், மியான்மர், நேபாளம், நியு பலாவ் தீவுகள், பிலிப்பைன்ஸ், ருவாண்டா, சமோவா, செனகல், சீஷெல்ஸ், தான்சானியா, ஜிம்பாப்வே உள்ளிட்ட நாடுகள் அடங்கும். ஆனால் 170 இடங்களுக்கு பயணம் செய்ய விசா அவசியமாகும்.

உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பாஸ்போர்ட் நாடுகள் வரிசையில் முதலிடத்தை சிங்கப்பூர் தக்க வைத்து கொண்டுள்ளது. 192 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும். 2வது இடத்தில் உள்ள ஜப்பான், தென் கொரியா பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள் 187 நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்ல முடியும். 3வது இடத்தில் உள்ள ஸ்வீடன் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பாஸ்போர்ட் வைத்திருப்போர் 186 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும். பெல்ஜியம், டென்மார்க், பின்லாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அயர்லாந்து, இத்தாலி, லக்சம்பர்க், ஸ்பெயின், சுவிட்சர்லாந்து, நெதர்லாந்து, நார்வே ஆகியவை 4வது இடத்தில் உள்ளது. இங்கிருந்து 185 நாடுகளுக்கு விசா இல்லாமல் பயணிக்க முடியும். 5வது இடத்தில் உள்ள ஆஸ்திரியா, கிரீஸ், மால்டா, போர்ச்சுகல் ஆகியவை 184 நாடுகளுக்கு விசா இல்லாமல் செல்ல முடியும்.

## தாமிரத்திற்காக வேட்டையாடப்படும் ஜாம்பியா: கார்ப்பரேட் நாடுகளின் கனிமப் போர்!

**லுசாகா, பிப்.17:**

செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் நாளுக்கு நாள் அசுர வளர்ச்சியடைந்து வருகிறது. இதற்குத் தேவையான மின் உற்பத்தி, மின் கட்டமைப்புகள் மற்றும் மின்சார வாகனப் பயன்பாடு ஆகியவை உலகளவில் தாமிரத்தின் (Copper) தேவையைப் பன்மடங்கு அதிகரித்துள்ளன.

இந்தச் சூழலில் அமெரிக்கா, கனடா, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகள் எனப் பல நாடுகளும் ஜாம்பியாவின் தாமிரத்தைக் கைப்பற்றுவதில் தீவிரமாகப் போட்டியிடுகின்றன. தொழில்நுட்பத்தில் முன்னேறுவதற்காகவும், உலகச் சந்தையைப் பிடிப்பதற்காகவும் வளர்ந்த நாடுகள் அரிய கனிமங்களுக்காகப் பிற நாடுகளைச் சுரண்டி வருகின்றன. இந்தப் போட்டியில்தான் ஜாம்பியா உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகள் மேற்குலக நாடுகளால் வேட்டையாடப்பட்டுவருகின்றன. அதிகளவு தாமிரம் உற்பத்தி செய்யும் இரண்டாவது ஆப்பிரிக்க நாடாக ஜாம்பியா உள்ளது. உலகளவில் இது எட்டாவது இடத்தில் உள்ளது. ஜாம்பியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 15 சதவீதத்தையும், ஏற்றுமதி வருவாயில் 70 சதவீதத்திற்கும் மேலாகவும் தாமிரம் பங்களிக்கிறது.

2025-இல் அந்நாட்டின் பொருளாதாரம் 5.2 சதவீதமாகவும், நடப்பு ஆண்டில் 5.8 சதவீதமாகவும் உயரும் என சர்வதேச நாணய நிதியம் (IMF) கணித்துள்ளது. வளங்கள் இருந்தும் வறுமையில் வாடும் மக்கள் இருப்பினும், இந்த வளர்ச்சி சாதாரண மக்களின் வாழ்க்கையைப் பாதுகாக்கும் வகையில் இல்லை. மாறாக, பெரும் கோடீஸ்வரர்கள், கார்ப்பரேட்டுகள் மற்றும் ஆட்சியாளர்களின் சொத்து மதிப்பை மட்டுமே அதிகரித்துள்ளது. கனிம வளங்கள் நிறைந்திருந்தாலும், அந்நாட்டின் 2.1 கோடி மக்களில் சுமார் 70 சதவீதத்திற்கும் அதிகமானோர் கடுமையான வறுமையில்தான் வாழ்கின்றனர். குறிப்பாக, ஜாம்பியாவில் தாமிரம் வெட்டி எடுக்கப்பட்டவுடன் அதைச் சுத்திகரிக்கத் தேவையான தொழில்நுட்பம் அங்கு இல்லை. இதனால் சுத்திகரிக்கப்படாத தாமிரம் நேரடியாக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

இதன் காரணமாக ஜாம்பியாவிற்கு முறையான லாபம் கிடைப்பதில்லை. தொழில்நுட்ப வளர்ச்சியில் முன்னேற வளர்ந்த நாடுகளுக்கு இடையே நடக்கும் இந்தப் போட்டியானது, கனிம வளங்களைச் சொந்தமாகக் கொண்டுள்ள நாடுகளின் மக்களுக்கு எந்த நேரடிப் பலன்களையும் தர மறுக்கிறது. மாறாக, உலகச் சந்தைகளுக்குச் சேவை செய்துகொண்டே கார்ப்பரேட்டுகளின் லாப வேட்டைக்கு மட்டுமே இது துணை போகிறது.

## ஈராக், சிரியாவில் ஐ.எஸ். நிலைகள் மீது அமெரிக்கா வான்வழி தாக்குதல்

**டமாஸ்கஸ், பிப்.17:**



சிரியாவில் 2024-ம் ஆண்டில், முன்னாள் ஜனாதிபதி ஆசாத் ஆட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், நடந்து வரும் அரசானது, அமெரிக்காவுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இந்நிலையில், சிரியாவின் பல்மைரா நகரில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடந்த தாக்குதலில் அமெரிக்க ராணுவ வீரர்கள் 2 பேர் மற்றும் அமெரிக்க குடிமகன் ஒருவர் என 3 பேர் பலியானார்கள். இதற்கு பதிலடி தரும் வகையில் சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதி நிலைகளை குறி வைத்து அமெரிக்கா தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், ஈராக் மற்றும் சிரியாவில் உள்ள ஐ.எஸ். அமைப்பினரின் நிலைகளை குறி வைத்து அமெரிக்க பாதுகாப்பு படை மீண்டும் கடுமையான வான்வழி தாக்குதலை நடத்தி உள்ளது. இதில், கடந்த 3-ந்தேதி முதல் 10 நாட்களில் 30-க்கும் மேற்பட்ட ஐ.எஸ். நிலைகள் மீது 10 முறை வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது.

இதில், அந்த அமைப்பினரின் உட்கட்டமைப்புகள், ஆயுத கிடங்குகள் தாக்கி அழிக்கப்பட்டன. இதற்காக, பல்வேறு வகையான விமானங்களில் இருந்து குண்டுகள் சரியாக வீசப்பட்டும், ஆளில்லா டிரோன்கள் உதவியுடனும் தாக்குதல் நடந்து உள்ளது.

அமெரிக்க வீரர்களான எட்கர் பிரையன் டோரஸ்-தோவர், வில்லியம் நதானியேல் ஹோவர்ட் மற்றும் அயாத் மன்சூர் சகாத் என 3 பேர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாகவே தாக்குதல் நடந்துள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் 13-ந்தேதியில் இருந்து இந்த தாக்குதல் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

## வேற்றுக்கிரகவாசிகள் இருப்பது உண்மைதான்: பராக் ஒபாமா தகவல்!




**வாஷிங்டன், பிப்.17:**

வேற்றுக்கிரக வாசிகள் இருப்பது உண்மைதான் என்று அமெரிக்க முன்னாள் அதிபர் பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனரா, இல்லையா என உலகம் முழுவதும் பல ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டு வருகிறது. அமெரிக்க ஆய்வாளர்கள் வேற்றுக்கிரகவாசிகளைப் பிடித்து வந்து, அந்நாட்டின் நெவாடா பகுதியில் உள்ள ரகசியமான இடமான 'ஏரியா 51'-இல் வைத்து ஆய்வு செய்து வருவதாகவும் அவ்வப்போது தகவல் வெளியாகி வருகிறது. இதை அமெரிக்கா இதுவரை உறுதி செய்யவில்லை.

இந்நிலையில், யூடியூபர் ஒருவருக்கு ஒபாமா அளித்த பேட்டியின்போது, வேற்றுக்கிரகவாசிகள் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த ஒபாமா, வேற்றுக்கிரகவாசிகள் இருப்பது உண்மைதான், ஆனால் நான் இதுவரை பார்த்ததில்லை என்றார்.

ஏரியா 51-இல் வேற்றுக்கிரகவாசிகளை வைத்து ஆய்வு நடத்தப்படுவதாக கூறப்படுவது குறித்த கேள்விக்கு, அது உண்மையில்லை என்றும், அங்கு பாதாள சுரங்க ஆய்வுக் கூடம் எதுவும் இல்லை என்றும் கூறினார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஒருவரே, வேற்றுக்கிரகவாசிகள் இருப்பதாக கூறியிருப்பது, உலகம் முழுவதும் பல விவாதங்களை ஏற்படுத்தியுள்ளது. வேற்றுக்கிரகவாசிகள் குறித்த ஆர்வலர்களுக்கு இது புதிய ஆர்வத்தை ஏற்படுத்தியுள்ளது.

## ரஷிய துறைமுகம் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதல்!

ரஷியாவின் கருங்கடல் துறைமுகங்களில் ஒன்றின் மீது ஞாயிற்றுக்கிழமை உக்ரைன் ட்ரோன் தாக்குதல் நிகழ்த்தியது.

உக்ரைன் போர் தொடங்கி 4 ஆண்டுகள் (பிப். 24) நிறைவடைவதையொட்டி அமெரிக்கா முன்னிலையில் ரஷியா-உக்ரைன் இடையே ஜெனீவாவில் செவ்வாய்க்கிழமை (பிப்.17) போர்நிறுத்தப் பேச்சுவார்த்தை தொடங்கவுள்ளது. இந்நிலையில், இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் ரஷியாவின் கிராஸ்நோடர் பிராந்தியத்தில் உள்ள தமன் துறைமுகத்தில் இருவர் பலத்த காயமடைந்தனர். மறுபுறம் உக்ரைனின் ஒடேசா பிராந்தியத்தில் ரஷியாவின் ட்ரோன் தாக்குதலில் எரிசக்தி, குடிநீர் விநியோகம் மற்றும் போக்குவரத்து உள்கட்டமைப்புகள் கடும் சேதமடைந்ததாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் அங்கு மின் விநியோகம் முழுவதுமாக தடைபட்டுள்ளது.

முன்னதாக, ஜெர்மனியின் மியூனிக் நகரில் நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டில் சனிக்கிழமை பேசிய உக்ரைன் அதிபர் வொலோதிமீர் ஸெலென்ஸ்கி, 'ரஷியாவுடனான அமைதிப் பேச்சுவார்த்தையில் உக்ரைன் மட்டுமே தொடர்ந்து சமரசம் செய்துகொள்ள வேண்டும் என்று அமெரிக்கா அழுத்தம் கொடுக்கிறது. ரஷியாவின் பிடிவாதத்தைப் பற்றி விவாதிக்காமல், உக்ரைனை மட்டும் குறிவைப்பது சரியான முறையல்ல. தற்போது இந்தப் பிரச்னையில் இருந்து ஒதுக்கிவைக்கப்பட்டுள்ள ஐரோப்பிய நாடுகள், வரும் காலங்களில் முக்கியப் பங்காற்ற வேண்டும்' எனக் கூறியது குறிப்பிடத்தக்கது.

## நைஜீரியாவில் மீன்பிடித் திருவிழா...



ஆண்டுதோறும் நடைபெற்று வந்த இந்த கலாசார திருவிழா பாதுகாப்பு காரணங்களுக்காக 2020-ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட நிலையில், நிகழாண்டு மீண்டும் தொடங்கியது.

# சிறைபிடிக்கப்பட்ட 7 பாக். வீரர்களை விடுவிக்க பிஎல்ஏ கெடு

**குவெட்டா, பிப்.17:**



பாகிஸ்தான் ராணுவத்தைச் சேர்ந்த 17 வீரர்களை சிறைபிடித்துள்ளதாகவும், அவர்களில் 10 பேரை விடுவித்துவிட்டு, எஞ்சிய 7 பேரை விடுவிக்க கைதிகள் பரிமாற்றத்திற்கு ஒரு வாரம் காலக்கெடு விதித்துள்ளதாகவும் பலூச் விடுதலை ராணுவம் (பி.எல்.ஏ.) நேற்று தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பின் ஊடகப் பிரிவான 'ஹக்கல்' வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: "சிறைபிடிக்கப்பட்ட பாகிஸ்தான் ராணுவத்தினரில் 10 பேர் பலூச் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், அவர்கள் உள்ளூர் காவல் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் என்பதாலும், அவர்களுக்கு உரிய எச்சரிக்கை விடுக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்த நிலப்பரப்பின் எதார்த்த சூழல் மற்றும் பலூச் மக்களின் நலன் கருதி இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்படாத எஞ்சிய 7 பேரும் பாகிஸ்தான் ராணுவத்தின் வழக்கமான பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மீது 'பலூச் தேசிய நீதிமன்றத்தில்' விசாரணை நடத்தப்பட்டது. அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியது, பலூச் இளைஞர்கள் மாயமானதில் உடந்தையாக இருந்தது மற்றும் இனப்படுகொலை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. விசாரணையின் போது அவர்கள் தரப்பு விளக்கத்தைப் பதிவு செய்த பின்னரே, அவர்கள் குற்றவாளிகள் என தீர்ப்பளிக்கப்பட்டது.

அவர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட்ட போதிலும், மனிதாபிமான அடிப்படையில் பாகிஸ்தான் அரசுக்கு ஒரு வாரம் காலக்கெடு விதிக்கப்படுகிறது. இந்த ஏழு நாட்களுக்குள் பாகிஸ்தான் சிறையில் உள்ள பலூச் கைதிகளை விடுவித்து, அதற்குப் பதிலாகத் தங்கள் வீரர்களை மீட்க கைதிகள் பரிமாற்றத்திற்கு பாகிஸ்தான் முன்வர வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு வாரத்திற்குள் முன்னேற்றம் ஏதும் ஏற்படாத பட்சத்தில், நீதிமன்றத் தீர்ப்பின்படி தண்டனை நிறைவேற்றப்படும் என்று பி.எல்.ஏ. எச்சரித்துள்ளது. இதற்கிடையில் பலுசிஸ்தானில் இருந்து பாகிஸ்தான் பிடித்துச் சென்றுள்ள 7 பேரை விடுவிக்கக் கோரி அவர்களது உறவினர்கள் நேற்று போராட்டம் நடத்தினர்.